# காவல் நீதிக்கான குரல்

# Voices for Custodial Justice

## மூலதனத்தை முறைகேடாக்கிவிட்டு தொழிலாளர்களை முறைப்படுத்துகிறார்கள்!



ஏராளமான காவலர்களுக்கு மத்தியிலும்
போராட்டத்தில் ஈடுபடும்
ரிகோ ஆட்டோ லிமிடெட் தொழிலாளர்கள்




ஹரியானா, குர்கான், மானேசர் பகுதியில்
உள்ள ஒரு மாருதி சுசூகி தொழிற்சாலைக்கு
வெளியே போராடும் தொழிலாளர்கள்



ஹரியானா, குர்கான் பகுதியில்
போராட்டத்தில் ஈடுபட்டுள்ள
ஹீரோ ஹோண்டா தொழிலாளர்களைத்
தாக்கும் காவலர்கள்



போராட்டத்தின்போது காவல்துறையால்
கண்மூடித்தனமாகத் தாக்கப்படும் எச்.எம்.எஸ்.ஐ.
(குர்கான்) தொழிலாளர்கள்.

## குற்றவியல் மனு எண்: 1255/1999

மக்கள் சிவில் உரிமைக் கழகம் மற்றும் இதரர் ........ மனுதாரர்கள்

எதிர்

மகாராஷ்டிரா மாநில அரசு மற்றும் இதரர்கள் ........ எதிர்மனுதாரர்கள்

**உடன்**

**குற்றவியல் மனு எண். 1256 / 1999**

**குற்றவியல் மனு எண்.1367 / 1999**

**ஆணை கோரும் மனு (C) எண். 316 / 2008**

**நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மனு(C) எண்.47/2011**

**ஆணை கோரும் மனு(C) எண். 316/2008**

**மாற்றப்பட்ட வழக்கு (C) எண்.27/2011**

**ஆணை**

**ஆர்.எம். லோதா, இந்திய தலைமை நீதிபதி,**

காவல்துறையினரின் (என்கவுன்டர்) மோதல் கொலை நடவடிக்கைகள் குறித்த விசாரணைகளில் எப்படிப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பது குறித்த வாதங்களை 03.09.2014ம் தேதியன்று நீதிமன்றம் கேட்டது. தற்போதைய ஆணை மேற்படி கேள்வியோடு மட்டும் நிற்கிறது.

பம்பாய் உயர்நீதிமன்றத்தில், மக்கள் சிவில் உரிமைக் கழகம் (சுருக்கமாக பியுசிஎல்) தாக்கல் செய்த மூன்று ஆணை கோரும் மனுக்களில் 1995 முதல் 1997 வரை சுமார் 135 பேர் மரணமடைவதற்குக் காரணமான, மும்பை காவல்துறையினருக்கும் குற்றவாளிகள் என்று குற்றம்சாட்டப்பட்டோருக்கும் இடையே நடந்த, சுமார் 99 மோதல்களின் (என்கவுன்டர்) உண்மைத் தன்மை அல்லது அதற்கு மாறான தன்மை குறித்த பிரச்சனை எழுப்பப்பட்டது. மற்றவற்றோடு பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன:

i. கடந்த ஓராண்டில் காவல்துறை என்கவுன்டர்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை, அவர்களது பெயர்கள், முகவரிகள், அவர்கள் கொல்லப்பட்ட சூழல்கள், அவர்கள் கொல்லப்பட்டது தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தால் அந்த விவரங்கள், இதர வேறு எந்த பொருத்தமான தகவல்கள், ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் அதைப் பற்றிய விவரங்கள் ஆகியவற்றை எதிர்மனுதாரர்கள் அளிக்க வேண்டும் என ஆணையிடுதல்;

ii. அடிப்படை உரிமைகளையும் இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் இதர பொருத்தமான சட்டங்களின் விதிகளை மீறியதற்காக காவல்துறை அதிகாரிகள் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 302ன் கீழ் மற்றும் இதர சட்டங்களின் கீழ் குற்றவியல் புகார் பதிவு செய்ய வேண்டும் என மகாராஷ்டிரா மாநில அரசுக்கு ஆணையிடக் கோருதல்;

iii. மும்பை கரோனர் (சவ விசாரணை அதிகாரி), விரிவான விசாரணை அறிக்கையையும், சவ விசாரணை அதிகாரிகள் சட்டம் 1871ன் விதிகளின்படி அவரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த விவரங்களையும் தாக்கல் செய்ய ஆணையிடுதல்;

iv. மும்பை நகரத்தில் மட்டுமல்லாமல் மகாராஷ்டிரா மாநிலம் முழுவதும் காவல்துறை என்கவுன்டர்களால் கொல்லப்பட்டவர்கள் அல்லது காயமடைந்தவர்கள் குறித்து விசாரணை மேற்கொண்டு இந்த நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென உரிய ஆணைய அமைப்பிற்கு ஆணையிடுதல்;

v. மனித உரிமைகள் சட்டம் 1993ன் பிரிவு 21 மற்றும் இதர பிரிவுகளில் வழி செய்யப்பட்டிருப்பதுபோல் மகாராஷ்டிரா மாநில மனித உரிமைகள் ஆணையத்தை அமைக்குமாறு மகாராஷ்டிரா மாநில அரசுக்கு ஆணையிடக் கோருதல்;

vi. இந்திய அரசமைப்பு சாசனத்தின் சட்ட உரை 21ன் கீழ், அத்துடன் இணைந்ததாக சட்டஉரை 14ன் கீழ் உறுதியளிக்கப்பட்டுள்ள உயிர் மற்றும் உரிமைப் பாதுகாப்பு நோக்கத்திற்காக என்கவுன்டர்களை திட்டமிடுவது, மேற்கொள்வது தொடர்பான உரிய வழிகாட்டல்களை மாநில அரசு உருவாக்க ஆணையிடுதல்.

இந்த மூன்று மனுக்களின் விவரங்களை இங்கு கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய தேவையில்லை. மேற்கண்ட கோரிக்கைகளை பரிசீலிக்கிறபோது மாநில காவல்துறையினர் அவசியமாகவும் கட்டாயமாகவும் பின்வரும் வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும் என்று உயர்நீதிமன்றம் ஆணையிட்டது:

1. காவல்துறையினருக்கு பெரும் குற்றங்களைச் செய்வது தொடர்பான குற்றவியல் சார்ந்த நடமாட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் தொடர்பான உளவுத்துறை தகவல்கள் அல்லது சூசகத் தகவல்கள் எப்போது காவல்துறையினருக்கு வந்தாலும், அந்தத் தகவல்களை ஒரு வழக்குக் குறிப்பேட்டில் (கேஸ் டயரி) பதிவு செய்யப்பட வேண்டும்.

2. ஏதேனும் என்கவுன்டர் நடவடிக்கை முடிவடைந்து, மனிதர்கள் கொல்லப்பட்டிருப்பார்களானால் அல்லது காயமடைந்திருப்பார்களானால், அது வாய்மொழியாகவோ அல்லது எழுத்துப்பூர்வமாகவோ காவல்துறைக்கு குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154ன்படி தெரிவிக்கப்பட்டிருக்குமானால், அது அந்தக் குறிப்பிட்ட காவல் நிலையத்தின் குற்றப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்; மேற்படி முதல் தகவல் அறிக்கையின் நகல்கள் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட வேண்டும்.

3. காவல் அதிகாரியால் குற்றப் பதிவேட்டில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுவதன் மூலம் சட்டப்பூர்வ நடைமுறையைத் தொடங்கிய பிறகு, காவல்துறையின் புலனாய்வுத் துறையினர் குற்றச்செயல் நடந்த இடத்தில் அல்லது என்கவுன்டர் நடவடிக்கையின் பிற அம்சங்கள் அழிக்கப்பட்டுவிடாமல் அல்லது கலைக்கப்பட்டுவிடாமல் பாதுகாப்பதற்காக ஒருவரை அல்லது பலரையும் நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

4. கைரேகை தடயங்கள் முறைப்படி எடுக்கப்பட்டு பாதுகாக்கப்படுமானால், அது சடலத்தின் கைரேகையோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக வேதியல் ஆய்வாளருக்கு (கெமிக்கல் அனலைசர்) அனுப்பப்பட வேண்டும்.

5. புலனாய்வு அலுவலரால், சம்பவ இடத்தில் அல்லது என்கவுன்டர் நடந்த இடத்தில் கண்டுபிடிக்கப்படும் ரத்தக்கறை படிந்த மண், ரத்தக்கறை படித்த பொருள்கள் உள்ளிட்ட பொருள்கள், இதர அசையும் புறக்கூறுகள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டு, தனிப்பட்ட சாட்சிகளால் சான்றளிக்கப்பட வேண்டும்.

6. என்கவுன்டர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட சரியான தேதி மற்றும் சரியான இடத்தை முடிவு செய்வதற்காக, அந்த இடத்தின் புறக்கூறுகள் பற்றிய, இடத்தின் தன்மைகள் தொடர்பான தோராயமான வரைபடத்தை காவல்துறையினர் அல்லது காவல்துறையின் புலனாய்வுப் பிரிவினர் அவர்களாகவோ அல்லது நில அளவைத் துறையினர் உதவியுடனோ தயாரிக்க வேண்டும்.

7. காவல்துறையின் புலனாய்வுப் பிரிவினரால், அந்த இடத்திலேயே, தாமதமின்றி விசாரணை ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்; மேற்படி வழக்குப் பதிவுடன், விசாரணை பஞ்ச்நாமா ஆவணம் முதல் தகவல் அறிக்கையோடு எவ்வித தாமதமுமின்றி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

8. என்கவுன்டர் நடவடிக்கையின்போது காயமடைந்த குற்றவாளிகள் உயிரோடு இருப்பார்களானால், அவர்களுக்கு உடனடியாக மருத்துவ உதவி வழங்கப்பட்டாக வேண்டும். அவர்களது வாக்குமூலங்கள், ஒரு நீதிபதி அல்லது முடியுமானால் சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரியால், பதிவு செய்யப்படுவதற்கான ஏற்பாடுகளையும் அல்லது முயற்சிகளையும் காவல்துறையினர் செய்ய வேண்டும்.

9. சாட்சிகளை விசாரித்த பிறகு, காவல்துறையினர் இறுதி அறிக்கையை உரிய நீதிமன்றத்திற்கு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 173ன் கீழ், மேல் நடவடிக்கைகாக அனுப்ப வேண்டும்.

10. சம்பவ இடத்தை சித்தரிக்கும் வரைபடம், பொருள்கள் மற்றும் மண் மற்றும் ரத்தக்கறை படிந்த மண் உள்ளிட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டு இடம் சார்ந்த பஞ்ச்நாமா, கைப்பற்றப்படும் பொருள்கள் சார்ந்த பஞ்ச்நாமா போன்ற இதர ஆவணங்களை எவ்வித தாமதமும் இன்றி சம்பந்தப்பட்ட நீதித்துறை அதிகார வரம்புக்கு உட்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பும்படி பணிக்கப்படுகிறார்கள்.

அரசமைப்பு சாசனத்தின் சட்டஉரை 21 உயிர்வாழ்வதற்கான உரிமையை மதிப்புமிக்க உரிமையாக உத்தரவாதம் அளிக்கிறது என்பதால், எந்த ஒரு மனித உரிமை மீறலையும் இந்த நீதிமன்றம் கடுமையான பிரச்சனையாகக் கருதுகிறது.

சட்டஉரை 21 அளிக்கிற இந்த உத்தரவாதம் ஒவ்வொருக்கும் உரியதாகும். அந்த உரிமையை மீறும் அதிகாரம் அரசுக்கும் கூட கிடையாது.

டி.கே. பாசு, வழக்கில் இந்த நீதிமன்றம் கைது அல்லது காவல் சம்பந்தமான அனைத்து வழக்குகளிலும் பின்பற்றப்பட வேண்டிய சட்ட விதிகள் உருவாக்கப்படும் வரையில், முன் தடுப்பு நடவடிக்கைகளாக சில ஆணைகளை இந்த நீதிமன்றம் பிறப்பித்தது.

தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் (என்.சி.ஆர்.பி.) 2013ம் ஆண்டுக்கான புள்ளி விவரங்களில் காவல்துறையினர் 684 முறை துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் காட்டுகிறது. அந்த துப்பாக்கிச் சூடு நடவடிக்கைகளில் குடிமக்களில் 103 பேர் இரையாகிவிட்டனர். 213 பேர் காயமடைந்தனர். காவல்துறையினரைப் பொறுத்தவரையில் 47 பேர் கொல்லப்பட்டனர், 1158 பேர் காயமடைந்தனர்.

2013ம் ஆண்டில் காவல்துறையினர் மீது பதிவு செய்யப்பட்ட புகார்கள்/வழக்குகளை பட்டியலிடுகிறது. 2013ம் ஆண்டில் 51,120 புகார்கள் பெறப்பட்டன. அவற்றில் 26,640 புகார்கள் போலியானவை அல்லது தகுந்த ஆதாரம் இல்லாதவை என அறிவிக்கப்பட்டது. மீதியுள்ள புகார்களில் 14,928 புகார்கள் துறைவாரியாக கையாளப்பட்டன. அவற்றில் 3,896 புகார்கள் வழக்கமான துறை சார் நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டன. 799 புகார்கள் நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பப்பட்டன/குற்றப்பத்திரிகைக்காக அனுப்பப்பட்டன. 53 புகார்களில் சம்பந்தப்பட்டவர்கள் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டனர். துறை சார் நடவடிக்கைகளில் 544 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டனர். 3980 பேர் கடும் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு குற்றச்செயலில் ஈடுபடுவோர் நீதிவிசாரணைக்கு உட்படுத்தப்படுவதற்கு உதவியாக பின்பற்ற வேண்டிய சில வழிகாட்டல்களை உருவாக்குவது இந்த நீதிமன்றத்தின் அரசமைப்பு சாசனம் சார்ந்த கடமை என்று நாங்கள் கருதுகிறோம்.

பியுசிஎல் அமைப்பின் வழக்குரைஞர் திரு. பிரசாந்த் பூஷன் பின்வரும் வழிகாட்டல்களை ஆலோசனைகளாகக் கூறியுள்ளார்:

> கடுமையான குற்றச்செயல்களை செய்வதற்கான குற்றவியல் நடமாட்டங்கள், ரகசியக் குறிப்பை காவல்துறையினர் பெறுகிறபோது அது ஒரு வழக்குக் குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். தகவலைப் பெறுகிறவர் குறிப்பிட்ட காவல் நிலையத்தின் அதிகாரியாக இருப்பாரானால், உரிய தகவல் பொதுக் குறிப்பேட்டிலும், உயர்நிலைக் காவல் அதிகாரியாக இருப்பாரானால், பதிவு ஒரு தனி குறிப்பேட்டில் செய்யப்பட வேண்டும், பின்னர் நடைமுறைச் சட்ட விதிகளின்படி பின்பற்றப்பட வேண்டும்.
>
> தேசிய மனித உரிமைகள் ஆணையம் / மாநில மனித உரிமைகள் ஆணையம் கவனத்தில் எடுத்துக்கொள்கிற என்கவுன்டர்கள் இதர விஷயங்கள் தொடர்பாக விசாரிப்பதற்காக இந்த ஆணையங்களுடன் இணைந்த இதற்கென்றே பொறுப்பளிக்கப்பட்ட காவல்துறையின் தனி குழு அல்லது பிரிவை ஏற்படுத்த வேண்டும். அத்தகைய தனியான குழு அல்லது காவல் பிரிவு ஏற்படுத்தப்படும் வரையில் என்கவுன்டர் சாவுகள்/காயங்கள் தொடர்பான விஷயங்கள் சிபிஐ/மாநில மனித உரிமை ஆணையம் போன்ற சுயேச்சையான விசாரணை அமைப்பிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட வேண்டும்.
>
> ஒரு என்கவுன்டரில் காவல் படைப் பிரிவு ஒன்று சம்பந்தப்படும்போது, அது உடனடியாக தேசிய மனித உரிமைகள் ஆணையம் / மாநில மனித உரிமைகள் ஆணையத்திற்கும், என்கவுன்டர் நடந்த இடத்திற்கு அருகில் உள்ள காவல் நிலையத்திற்கும் தகவல் தெரிவிக்க வேண்டும். ஆணையத்தின் விசாரணைக் குழு வருகிற வரையில், அந்த இடத்தில் தடயங்கள் அழிவதைத் தடுப்பதற்காக அந்த இடம் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட வேண்டும்.
>
> காவல் படைக்கும் மற்றவர்களுக்கும் இடையேயான மோதல் நடவடிக்கையில் மரணம் அல்லது காயம் ஏற்படுவது தொடர்பான குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 154ன் கீழ், வாய்மொழியாகவோ எழுத்துப்பூர்வமாகவோ எந்த ஒரு தகவலையும் ஒரு காவல்துறை அதிகாரி எவ்வித தாமதமும் இல்லாமல், உரிய வழிமுறையில், அறிக்கையை (முதல் தகவல் அறிக்கையை) நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். மேற்படி அறிக்கையின் நகல்கள் சம்பந்தப்பட்ட மாநிலத்தின் டிஜிபி, தேசிய மனித உரிமைகள் ஆணையர், மாநில மனித உரிமைகள் ஆணையர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட வேண்டும். குற்றச்செயல் நடந்த இடம் அல்லது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட இடத்தில் உள்ள நேரடி அடையாளங்கள் சீர்குலையாமல் அல்லது மாறிவிடாமல் தடுப்பதற்காக, அந்த இடத்தைப் பாதுகாப்பதற்காக ஒருவர் அல்லது பலரை நியமிப்பதற்காக நடவடிக்கைகளை சுயேச்சையான விசாரணைக் குழு மேற்கொள்ள வேண்டும்.

கைரேகைகள் முறையாக எடுக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, இறந்தவர் உடலிலிருந்து எடுக்கப்படும் கைரேகையுடன் ஒப்பிடுவதற்காக வேதியல் ஆய்வாளருக்கு (கெமிகல் அனலைசர்) அனுப்பப்பட வேண்டும்.

சம்பவம் நடந்த இடத்தில் அல்லது என்கவுன்டர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட இடத்தில் இருக்கும் பொருள்கள் மற்றும் ரத்தக்கறை படிந்த மண், ரத்தக்கறை படிந்த இதர பொருள்கள், மாதிரி மண் மற்றும் இதர அசையும் பொருள்கள் ஆகியவையும் சுயேச்சையான விசாரணைக் குழுவால், பொருள் மீட்பு பஞ்சநாமாவின் கீழ் சுயேச்சையான சாட்சிகளின் கையொப்பத்துடன் கையகப்படுத்தப்பட வேண்டும்.

என்கவுன்டர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட சரியான தேதி மற்றும் உண்மையான இடத்தை உறுதிப்படுத்துவதற்காக, அந்த இடத்தின் புறத் தோற்றங்களை சித்தரிக்கும் வரைபடம் மேற்படி சுயேச்சையான விசாரணைக்குழுவால் அல்லது நில அளவைத் துறை பணியாளர்கள் உதவியுடன் வரையப்பட வேண்டும்.

மரணம் தொடர்பான சாட்சிகளின் வாக்குமூலங்கள் எவ்வித தாமதமுமின்றி குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 161ன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். மரண விசாரணை பஞ்சநாமா அறிக்கை முதல் தகவல் அறிக்கையோடு சேர்ந்து தயாரிக்கப்படும் மேற்படி வழக்குக் குறிப்பேட்டுடன் எவ்வித தாமதமுமின்றி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

காவல்துறை நடவடிக்கையின்போது ஏற்படக் கூடிய எல்லா மரணங்கள் தொடர்பாகவும் கண்டிப்பாக ஒரு நீதிபதி (மாஜிஸ்ட்ரேட்) விசாரணை நடத்தப்பட வேண்டும். அத்தகைய விசாரணையில் இறந்தவரின் அடுத்த நிலை நெருங்கிய உறவினர் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

காவல்துறையினர் குற்றச்செயலில் ஈடுபட்டதாக புகார் செய்யப்படும் ஒவ்வொரு வழக்கிலும், அது வழக்குத் தொடரத் தக்க, குற்றமுறு கொலையாக இருக்கும் நிலையில், இதுதொடர்பான முதல் தகவல் அறிக்கை இந்திய தண்டனைச் சட்டத்தின் உரிய பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். அத்தகைய வழக்கையும் மேற்படி விசாரணைக் குழு விசாரிக்க வேண்டும். கடமை தவறிய அலுவலர்கள் மீது வழக்குத் தொடர்வதை விசாரணைக்குழு மேற்கொள்ள வேண்டும். அத்தகைய கடமை தவறிய அலுவலர்கள் இடை நீக்கம் செய்யப்பட வேண்டும்.

இறந்துபோனவர்களைச் சார்ந்திருப்போருக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீடுகள் குறித்து, உண்மைத் தகவல்களையும் ஒவ்வொரு வழக்கின் சந்தர்ப்ப சூழல்கள் அடிப்படையிலும், தேசிய மனித உரிமைகள் ஆணையத்தால் முடிவு செய்யப்படும்.

ஒரு என்கவுன்டரில் சம்பந்தப்படும் காவல்துறை அதிகாரிகளுக்கு வழக்கத்திற்கு மாறான பதவி உயர்வு, ரொக்கப் பரிசு அல்லது வீரச் செயல் விருது போன்றவை வழங்கப்படக் கூடாது.

மாநிலத்தில் காவல்துறை நடவடிக்கையின் காரணமாக ஏற்படும் மரணங்கள் தொடர்பான அனைத்து வழக்குகளுக்குமான ஒரு அறிக்கை 6 மாதத்திற்கு ஒரு முறை காவல்துறை தலைமை இயக்குநரால் ஆணையத்திற்கு, ஒவ்வொரு ஜனவரி 15, ஜூலை 15 தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும். பிணக்கூராய்வு அறிக்கைகள், விசாரணை அறிக்கைகள் ஆகியவை கிடைக்கும் நிலையில் அவற்றையும் புலன்விசாரணை அறிக்கைகளையும் பின்வரும் வடிவில் அனுப்ப வேண்டும்.

1. என்கவுன்டர் நடந்த தேதி, இடம், 2. காவல் நிலையம், மாவட்டம். 3. மரணத்திற்கு இட்டுச் சென்ற சந்தர்ப்ப சூழல்கள்: i. என்கவுன்டரில் தற்காப்பு நடவடிக்கை, ii. சட்டவிரோதமாக கூடியிருந்த கூட்டத்தைக் கலைப்பதற்கான நடவடிக்கையின்போது, iii. கைது நடவடிக்கை மேற்கொள்ளும்போது, 4. சம்பவம் குறித்த சுருக்கமான விவரங்கள், 5. குற்றவியல் வழக்கு எண், 6. புலன்விசாரணை அமைப்பு, 7. நீதிபதி விசாரணை / உயர் அதிகாரிகளின் விசாரணையில் கண்டறியப்பட்ட விவரங்கள்: a.மரணத்தில் பொறுப்பு இருப்பதாகக் கண்டறியப்படும் நிலையில், குறிப்பாக, காவல்துறை அதிகாரிகளின் பெயர்கள் மற்றும் பதவிகள் b.பலப்பிரயோகம் நியாயப்படுத்தத்தக்கதாக உள்ளதா, எடுக்கப்பட்ட நடவடிக்கை சட்டப்பூர்வமானதாக இருக்கிறதா.

காவல்துறை என்கவுன்டரில் கொல்லப்பட்ட நபர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்த, அவர்களது புகைப்படங்களும் இதர விவரங்களும் தொலைக்காட்சி, செய்திப் பத்திரிக்கைகள் போன்றவற்றில் விளம்பரம் செய்யப்பட வேண்டும்.

ஒரு என்கவுன்டருக்குப் பிறகு பிணக்கூராய்வு நடத்தப்படும்போது குறைந்தபட்சம் அது மாவட்ட அளவிலான அரசு மருத்துவமனையில், குறைந்தது மூன்று தகுதி உள்ள மருத்துவர்களின் முன்னிலையில், அவர்களில்

ஒருவர் மூத்த மருத்துவராக இருக்க வேண்டும், நடத்தப்படுவது அவசியமாகும். இத்தகைய பிணக்கூராய்வுகள் அனைத்தும் கண்டிப்பாக வீடியோ பதிவு செய்யப்பட வேண்டும், அந்தப் பதிவுகளின் நகல்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

என்கவுன்டர் நடவடிக்கையின்போது காயமடைந்த குற்றவாளிகள் உயிரோடு இருப்பது தெரியவருமானால், அவர்களுக்கு உடனடியாக மருத்துவ உதவி வழங்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்லாமல், அவர்களது வாக்குமூலங்களை குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 164வது பிரிவின் கீழ், சாத்தியமாகுமானால் ஒரு மாஜிஸ்ட்ரேட் அல்லது சாத்தியமாகாவிட்டால் சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரியால், அத்தகைய வாக்குமூலங்களை பதிவு செய்யும் நேரம் மற்றும் தகவல்களுடன், பதிவு செய்யப்பட வேண்டும்.

மேற்கொண்டு சாட்சிகளை விசாரித்த பிறகு, சுயேச்சையான புலன்விசாரணைக் குழுவானது தனது இறுதி அறிக்கையை உரிய அதிகார வரம்பு உள்ள நீதிமன்றத்திற்கு, அனுப்ப வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

முதல் தகவல் அறிக்கையை அனுப்புகையில் அல்லது வழிகாட்டல்கள் எண். 1 மற்றும் 2ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொதுக் கையேட்டுடன் அனுப்புகையில், சம்பந்தப்பட்ட காவல்துறையினர் / சுயேச்சையான புலன்விசாரணைக் குழுவினர், எத்தகைய சூழலிலும் எவ்வகையான தாமதமும் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும்; சம்பவம் நடந்த இடத்தைக் காட்டுகிற மேலோட்டமான வரைபடம், மாதிரி மண் மற்றும் ரத்தக் கறை படிந்த மண் ஆகியவற்றுடன் பொருள்கள் மற்றும் ரத்தக் கறை பொருள்கள் மீட்கப்படுவது, சம்பவ இடத்திற்கான பஞ்ச்நாமா, பொருள்கள் மீட்பு பஞ்ச்நாமா முதலிய இதர ஆவணங்களுடன் – இவை அனைத்தும் மிக முக்கிய ஆவணங்களாகத் தெரிகின்றன – எதிர்மனுதாரரான காவல்துறையினர் இவற்றை சம்பந்தப்பட்ட அதிகார வரம்புள்ள நீதிமன்றத்திற்கு எவ்வித தாமதமுமின்றி அனுப்ப வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

காவலர் நடவடிக்கையில் ஏற்படும் மரணங்கள் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டல்கள்/நடைமுறைகள் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தால் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளன

A. ஒரு காவல்நிலையப் பொறுப்பாளராக இருக்கும் காவல் அதிகாரிக்கு காவலர்களுடனான ஒரு மோதலில் ஏற்பட்ட மரணம் பற்றிய தகவல் கிடைக்கிறபோது அவர் அந்தத் தகவலை உரிய பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

B. என்கவுன்டர் குழுவில் இடம் பெற்ற காவலர்கள் அதே காவல் நிலையத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்றால், அத்தகைய வழக்குகள் மாநில சிபிசிஐடி போன்ற வேறு சுயேச்சையான விசாரணை அமைப்பிடம் விடப்படுவது விரும்பத்தக்கதாகும்.

C. காவல்துறையினர் ஒரு குற்றச் செயலலில் ஈடுபட்டார்கள் என்று குறிப்பான புகார் செய்யப்பட்டிருக்குமானால், இந்திய தண்டனைச் சட்டத்தின் உரிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும். அத்தகைய வழக்குகள் மாநில சிபிசிஐடி அல்லது வேறு சிறப்பு புலனாய்வு அமைப்பால் புலன்விசாரணை செய்யப்பட வேண்டும்.

D. காவல்துறை நடவடிக்கையில் ஏற்படும் அனைத்து மரணங்கள் தொடர்பாகவும் ஒரு மாஜிஸ்ட்ரேட் விசாரணை, கூடிய விரைவில், மூன்று மாதங்களுக்குள் என்பது ஏற்கத்தக்கதாக இருக்கும், நடத்தப்பட வேண்டும்.

E. விசாரணையில் குற்றம் செய்ததாக கண்டறியப்படும் கடமை தவறிய அனைத்து அதிகாரிகளுக்கும் எதிராக முறையான வழக்கு மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

F. என்கவுன்டர் சம்பவம் நடந்த உடனேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழக்கத்திற்கு மாறான பதவி உயர்வு அல்லது உடனடி வீரச் செயல் விருதுகள் வழங்கப்படக் கூடாது.

G. (a) மாநிலங்களில் காவல்துறை நடவடிக்கையால் நிகழும் மரணங்கள் தொடர்பான அனைத்து வழக்குகளும், அத்தகைய மரணம் நிகழ்ந்த 48 மணி நேரத்திற்குள் மாவட்டத்தின் உயர்நிலை காவல் கண்காணிப்பாளர்/காவல் கண்காணிப்பாளரால் பின்வரும் வடிவில் ஆணையத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும்:

**1.** சம்பவ தேதி மற்றும் இடம், **2.** காவல் நிலையம், மாவட்டம், **3.** மரணத்திற்கு இட்டுச் சென்ற சூழல்கள்: i) மோதலின்போது தற்காப்பிற்காக, ii. மோதலின்போது சட்டவிரோதமாக கூடியிருந்த கூட்டத்தை கலைக்கும் நடவடிக்கையில், iii. கைது நடவடிக்கையை செயல்படுத்தும்போது, iv. வேறு

எத்தகைய சூழல்களும் 4. சம்பவம் குறித்த சுருக்கமான விவரங்கள், 5. குற்றவியல் வழக்கு எண்., 6. புலன்விசாரணை அமைப்பு

(b) மாநிலத்தில் காவல்துறை நடவடிக்கையால் ஏற்படும் மரணம் தொடர்பான அனைத்து விவரங்களும் கொண்ட இரண்டாவது அறிக்கை மூத்த காவல் கண்காணிப்பாளர் / காவல் கண்காணிப்பாளரால் மூன்று மாதங்களுக்குள் பின்வரும் விவரங்களுடன் ஆணையத்திற்கு அனுப்பப்பட வேண்டும்:

1. பிணக்கூராய்வு அறிக்கை, 2. விசாரணை அறிக்கை, 3. மாஜிஸ்ட்ரேட் விசாரணை / உயர் அதிகாரிகள் விசாரணையில் கண்டறியப்பட்ட விவரங்கள், பின்வரும் தகவல்களுடன்:

(i) மரணத்திற்குப் பொறுப்பானவர் என்று கண்டுபிடிக்கப்படுவாரானால், காவல் அலுவலரின் பெயர்களும் பதவி பொறுப்புகளும்., (ii) பலப்பிரயோகத்தைப் பயன்படுத்தியது நியாயப்படுத்தத்தக்கதாக உள்ளதா மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கை சட்டப்பூர்வமானதா என்பது., (iii) தற்காப்பு உரிமை அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை காட்டக்கூடிய வகையில் துப்பாக்கி தோட்டா வெடி மருந்து இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில், இறந்து போனவர் தொடர்பான தடயவியல் பரிசோதனை முடிவுகள்., (iv) இறந்துபோனவர், அவரது கூட்டாளிகளும் பயன்படுத்தியதாகக் கூறப்படும் ஆயுதங்களின் பரிசோதனை குறித்த ஆயுத வல்லுநர் அறிக்கை.

சட்டத்திற்கு அப்பாற்பட்டதாக, தான்தோன்றித்தனமாக, உடனடியாக மரணம் ஏற்படுத்தப்படுவதை தடுக்கும் வகையிலும், விசாரணைக்கு உட்படுத்தும் வகையிலும் சில பொதுவான கொள்கைகளை உலக மனித உரிமைகள் பிரகடனம் வகுத்துள்ளது. அந்த கொள்கைகள் காவல்துறையினரின் கொலை நடவடிக்கைகளை விசாரிக்கும்போது சுயேச்சைத் தன்மையை உறுதிப்படுத்துவதாகவும், தவறாகப் பயன்படுத்தப்படுவதையும், ஊழலையும், பயனின்றிப் போவதையும் தடுப்பதாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

சட்ட அமலாக்க அதிகாரிகளுக்கான ஐ.நா. நடத்தை விதிகளில், அதிகாரிகள் தங்களது கடமையை நிறைவேற்றுகிறபோது மனித மரியாதையை மதிக்க வேண்டும், பாதுகாக்க வேண்டும் அனைவரின் மனித உரிமைகளைப் பராமரித்து உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதேபோல், உலக பொது மன்னிப்பு அமைப்பால் சட்ட அமலாக்க அதிகாரிகளின் நன்னடத்தைக்கான அடிப்படை மனித உரிமை அளவீடுகள் பின்வரும் தரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளது: (1) கண்டிப்பாக தேவைப்படும் நிலை அல்லாமல் வேறு எப்போதும் பலப்பிரயோகம் செய்யப்படக்கூடாது. (2) சட்டத்திற்கு விரோதமாக மரணம் ஏற்படுத்தும் நடவடிக்கையை அல்லது "காணாமல் போகச் செய்யும்" நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடாது, அதற்கு ஆணை பிறப்பிக்கக்கூடாது அல்லது அதனை மூடிமறைக்கக்கூடாது; அவ்வாறு செய்ய வேண்டும் என்ற ஆணைக்கு பணியக்கூடாது.

மேற்கூறிய விவாதங்கள் அடிப்படையிலும், பம்பாய் உயர்நீதிமன்றம் அளித்த ஆணைகள், தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் வழிகாட்டல்கள், மனுதாரரான பி.யு.சி.எல். அளித்துள்ள ஆலோசனைகள், நீதிமன்ற உதவியர் மற்றும் இந்திய அரசு, மாநில அரசுகள், யூனியன் பிரதேச அரசுகள் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரங்கள் மீதான மதிப்புடனும், காவல்துறை என்கவுன்டர்களில் மரணம் நிகழ்வது தொடர்பாக சீரான நடைமுறைகளாக, பயனுள்ள சுயேச்சையான விசாரணையில், பின்பற்றப்படுவதற்காக பின்வரும் தேவைகளை வெளியிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம்:

(1) கடுமையான குற்றச்செயல் செய்யும் நோக்கத்துடன் நடமாட்டங்கள் அல்லது செயல்பாடுகள் குறித்து எந்த ஒரு உளவுத் தகவல் அல்லது தகவல் குறிப்புகள் கிடைக்கிறபோதும், அதனை ஏதேனும் ஒரு படிவத்தில் (வழக்குக் குறிப்பேடாக இருப்பது ஏற்கத்தக்கது) அல்லது மின்னணு வடிவத்தில் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டும்.

(2) தகவல் குறிப்பு அல்லது உளவுத் தகவல் மீதான நடவடிக்கையைத் தொடர்ந்து, என்கவுன்டர் நடைபெறுமானால், காவல்துறையினரால் துப்பாக்கிகள் பயன்படுத்தப்படுமானால், அதன் விளைவாக மரணம் நிகழுமானால், அது தொடர்பான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும், அது சட்டத்தின் பிரிவு 157ன் கீழ் நீதிமன்றத்திற்கு எவ்வித தாமதமுமின்றி அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு அனுப்பும்போது சட்டத்தின் பிரிவு 158ல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

(3) சம்பவம் / என்கவுன்டர் தொடர்பான ஒரு சுயேச்சையான விசாரணை குற்றப் புலனாய்வு துறை (சிஐடி) அல்லது வேறொரு காவல் நிலையத்தின் காவலர் குழுவால், ஒரு உயர் அதிகாரியின் கண்காணிப்பில் (குறைந்தது என்கவுன்டரில் ஈடுபட்ட காவலர் குழுவின் தலைமை அதிகாரிக்கு மேல்நிலையில் உள்ள அதிகாரியின் கண்காணிப்பில்) நடத்தப்பட வேண்டும்.

**விசாரணையை நடத்துகிற குழு குறைந்தபட்சம் பின்வரும் பணிகளை மேற்கொள்ளும்:**

(a) இறந்தவர் அடையாளம்; இறந்தவரின் வண்ணப் புகைப்படங்களை எடுத்தல்;

(b) மரணத்துடன் தொடர்புடைய ரத்தக் கறை படிந்த மண், முடி, நார்கள், நூல்கள் உள்ளிட்ட தடயப் பொருள்களை கைப்பற்றுதல்;

(c) சம்பவ இடத்தின் சாட்சிகளை முழு பெயர்கள், முகவரிகள், தொலைபேசி எண்களுடன் அடையாளம் காணுதல்; (சம்பந்தப்பட்ட காவல்துறையினரின் வாக்குமூலங்கள் உட்பட) அடையாளம் காணுதல் மற்றும் மரணம் சம்பந்தப்பட்ட அவர்களது வாக்குமூலங்களைப் பெறுதல்;

(d) மரணத்தின் காரணம், மரணம் நடந்த விதம், இடம் (மரணம் நடந்த இடத்திற்கான மேலோட்டமான வரைபடம், சாத்தியமாகுமானால் அந்த இடத்தின் மற்றும் தடயத்தின் புகைப்படம்/வீடியோ பதிவு உள்பட), மரணம் நேர்ந்த நேரம், மரணத்திற்கு காரணமாக இருந்திருக்கக்கூடிய வேறு எவ்வித வழிமுறை அல்லது செயல்முறை ஆகியவற்றை வரையறுத்தல்;

(e) இறந்தவரின் கைரேகைகள் அழிந்துவிடாமல் ரசாயன ஆய்வுக்காக அனுப்பப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். வேறு ஏதேனும் கைரேகைகள் கண்டறியப்பட வேண்டும், தெளிவாக்கப்பட வேண்டும், எடுக்கப்பட வேண்டும், ரசாயன ஆய்வுக்காக அனுப்பப்பட வேண்டும்.

(f) மாவட்ட மருத்துவமனையில் பிணக்கூராய்வு இரண்டு மருத்துவர்களால், கூடிய வரையில் அவர்களில் ஒருவர் மாவட்ட மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவர்/தலைமை மருத்துவராக இருக்க வேண்டும், நடத்தப்பட வேண்டும். பிணக்கூராய்வு வீடியோ பதிவு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

(g) துப்பாக்கிகள், பொறிகள், தோட்டாக்குண்டுகள் போன்ற ஆயுதங்களுக்கான எந்த ஒரு தடயமும் எடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். பொருத்தமான இடங்களில் துப்பாக்கிச் சூடு அடையாளங்கள் மற்றும் உலோக அடையாளங்களைக் கண்டறிவதற்கான சோதனைகள் நடத்தப்பட வேண்டும்.

(h) மரணத்திற்கான காரணம், அது இயற்கையான மரணமா, தற்செயல் மரணமா, தற்கொலையா அல்லது கொலையா என்பது கண்டறியப்பட வேண்டும்.

**(4)** காவல்துறை துப்பாக்கிச் சூட்டின்போது நடைபெறும் அனைத்து மரணங்கள் தொடர்பாகவும், சட்டத்தின் பிரிவு **176**ன் கீழ் கண்டிப்பாக ஒரு மாஜிஸ்ட்ரேட் விசாரணை நடத்தப்பட வேண்டும்; அதற்கான அறிக்கை சட்டத்தின் பிரிவு **190**ன் கீழ் அதிகார வரம்புள்ள நீதித்துறை நடுவருக்கு அனுப்பப்பட வேண்டும்.

**(5)** சுயேச்சையான, பாரபட்சமற்ற விசாரணை குறித்த கடுமையான சந்தேகம் இல்லை என்றால் தேசிய மனித உரிமைகள் ஆணையம் சம்பந்தப்படத் தேவையில்லை. எனினும், சம்பவம் குறித்த தகவல் எவ்வித தாமதமுமின்றி, வழக்கின் தன்மையைப் பொறுத்து, தேசிய மனித உரிமைகள் ஆணையம் அல்லது மாநில மனித உரிமைகள் ஆணையத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

**(6)** காயமடைந்த குற்றவாளி/பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவ உதவி வழங்கப்பட வேண்டும். அந்த ஆண்/பெண்ணின் வாக்குமூலம் மாஜிஸ்ட்ரேட் அல்லது மருத்துவ அதிகாரியால், உடல்நிலைச் சான்றிதழோடு பதிவு செய்யப்பட வேண்டும்.

**(7)** சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை, குறிப்பேட்டுப் பதிவுகள், பஞ்சநாமாக்கள் வரைபடங்கள் முதலியவை அனுப்பப்படுவதில் தாமதம் ஏற்படாமல் இருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**(8)** சம்பவம் குறித்த முழுமையான விசாரணைக்குப் பிறகு, சட்டத்தின் பிரிவு **173**ன் கீழ், உரிய நீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்பப்பட வேண்டும். விசாரணை அலுவலரால் தாக்கல் செய்யப்படும் குற்றப்பத்திரிகை அடிப்படையிலான நீதிமன்ற விசாரணை விரைவாக முடிக்கப்பட வேண்டும்.

**(9)** மரணம் ஏற்படுமானால், குற்றவாளி என கூறப்படுபவர்/பாதிக்கப்படுபவரின் நெருங்கிய உறவினருக்கு கூடிய விரைவில் தகவல் தெரிவிக்கப்பட வேண்டும்.

**(10)** காவல்துறை துப்பாக்கிச் சூட்டில் மரணம் ஏற்படுவது தொடர்பான அனைத்து வழக்குகளுக்கும் தேசிய மனித உரிமைகள் ஆணையத்திற்கு காவல்துறை தலைமை இயக்குநரால் **6** மாதங்களுக்கு ஒரு முறை, அறிக்கை அனுப்பப்பட வேண்டும். **6** மாதத்திற்கு ஒரு முறை அளிக்கப்படும் அறிக்கைகள் தேசிய மனித உரிமைகள்

ஆணையத்திற்கு முறையே ஜனவரி, ஜூலை ஆகிய மாதங்களின் 15ம் தேதிக்குள் அனுப்பப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அறிக்கைகள் பிணக்கூராய்வு அறிக்கையோடும் மரண விசாரணை அறிக்கையோடும், சாத்தியமாகுமானால் புலன்விசாரணை அறிக்கையோடும் பின்வரும் வடிவில் அனுப்பப்படலாம்:

I) சம்பவ தேதி, இடம், (ii) காவல் நிலையம், மாவட்டம், (iii) மரணத்திற்கு இட்டுச் சென்ற சூழல்கள்: (a)என்கவுன்டரில் தற்காப்பு நடவடிக்கையில், (b) சட்டவிரோதமாக கூடிய கூட்டத்தைக் கலைக்கும் நடவடிக்கையில், (c) கைது நடவடிக்கையை செயல்படுத்துகையில். iv) சம்பவம் குறித்த சுருக்கமான விவரங்கள், (iv) குற்றவியல் வழக்கு எண்., (v) புலனாய்வு அமைப்பு, (vi) மாஜிஸ்ட்ரேட் விசாரணை / உயர் அதிகாரி விசாரணையில் கண்டறியப்படும் விவரங்கள்: (b) குறிப்பாக, மரணத்திற்குப் பொறுப்பானவர் என்று கண்டறியப்படும் காவல்துறை அதிகாரிகளின் பெயர்கள் மற்றும் பதவி நிலைகள்; (b) பலப் பிரயோகம் நியாயப்படுத்தத் தக்கதா, எடுக்கப்பட்ட நடவடிக்கை சட்டப்பூர்வமானதா.

(11) விசாரணை முடிவின்போது பொருள்கள்/ஆதாரங்கள் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதத்தக்க வகையில் துப்பாக்கிகளைப் பயன்படுத்தியதால் மரணம் நிகழ்ந்தது என்று தெரியவருமானால் அத்தகைய அதிகாரி மீது முறைப்படி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும், அவர் பணியிடைநீக்கம் செய்யப்பட வேண்டும்.

(12) காவல்துறை என்கவுன்டரில் மரணமடைந்தவரை சார்ந்திருக்கக்கூடியவர்களுக்கு இழப்பீடு வழங்குவதைப் பொறுத்தவரையில் சட்டத்தின் பிரிவு 357-A ன் கீழ் உள்ள திட்டம் பொருந்துவதாகும்.

(13) சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரி/அதிகாரிகள் விசாரணைக் குழுவால் கோரப்படும் எந்த ஒரு பொருளும் உள்பட, அரசமைப்பு சாசனத்தின் சட்டஉரை 20ன் கீழ் உள்ள உரிமைகளுக்கு உட்பட்டு, தங்களது ஆயுதங்களை தடயவியல் மற்றும் வெடிப்புப் பொருள் ஆய்வுக்கு ஒப்படைக்க வேண்டும்.

(14) சம்பவம் குறித்த தகவல் காவல்துறை அதிகாரியின் குடும்பத்தினருக்கும் அனுப்பப்பட வேண்டும்; அவரது குடும்பம் ஒரு வழக்குரைஞரின் சேவை அல்லது ஆலோசனை தேவை என கருதுமானால் அதற்கு வழி செய்யப்பட வேண்டும்.

(15) சம்பவத்திற்குப் பிறகு உடனடியாக வழக்கத்திற்கு மாறான பதவி உயர்வு அல்லது உடனடி வீரச் செயல் விருது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படக் கூடாது. அத்தகைய விருதுகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் வீரச் செயல் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்ட பிறகுதான் வழங்கப்படும் / பரிந்துரைக்கப்படும் என்பது எல்லா வகையிலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(16) பாதிக்கப்பட்டவரின் குடும்பம் மேற்கூறிய நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று அல்லது மேற்கூறிய எந்த ஒரு அதிகாரியாலும் தவறான முறையில் அதிகாரம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று அல்லது சுயேச்சையான விசாரணை நடத்தப்படவில்லை என்று அல்லது பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படவில்லை என்று கருதுமானால் அந்தக் குடும்பம் சம்பவ இடத்திற்கான அதிகார வரம்புள்ள அமர்வு நீதிபதியிடம் புகார் செய்யலாம். அத்தகைய புகார் செய்யப்படும்போது சம்பந்தப்பட்ட அமர்வு நீதிபதி அந்தப் புகாரின் தகுதியை பரிசீலித்து, சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை தீர்க்க வேண்டும்.

32. மேற்கூறிய வழிகாட்டல்கள், காவல்துறை என்கவுன்டரில் கடுமையாகக் காயமடைந்தவர்கள் விஷயத்திலும், கூடியவரையில், பொருந்துவதாகும்.

33. இதன்படி, காவல்துறை என்கவுன்டர்களில் ஏற்படும் மரணங்கள் மற்றும் கடுமையான காயங்கள் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் மேற்கூறிய தேவைகள் / நடைமுறைகள் இந்திய அரசமைப்பு சாசனத்தின் சட்டஉரை 141ன் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட சட்டமாகக் கருதி கறாராகப் பின்பற்றப்பட வேண்டும் என்று நாங்கள் ஆணையிடுகிறோம்.

........................................................................ இந்திய தலைமை நீதிபதி

(ஆர்.எம். லோதா)

நீதிபதி ரோயின்டன் ஃபாலி நாரிமன்

புதுதில்லி
செப்டம்பம் 23, 2014

**– இந்தத் தீர்ப்பிலிருந்து எடுக்கப்பட்ட சில தொகுப்புகள்**

# தண்டனையும் தவறும்

– மந்திரா நாயர்

பகத்சிங் தூக்கிலிடப்பட்டு 83 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் குற்றமற்றவர் என்பதை பாகிஸ்தானைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

*“...எனக்காக வாதாடும் கடைசி மனிதனாகத்தான் நான் இருப்பேன். விசாரணை நடந்துகொண்டிருந்தபோது என் மனதில் ஒரே ஒரு எண்ணம்தான் இருந்தது, அதாவது, என் மீது கடுமையான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள போதிலும், விசாரணையை சிறிதும் பொருட்படுத்துவதில்லை என்ற எண்ணம்தான் அது. அரசியல் ஊழியர்கள் அனைவருமே நீதிமன்றங்களில் நடைபெறும் சட்டப்பூர்வ போராட்டங்கள் குறித்து பொருட்படுத்தக்கூடாது. ஒரு போதும் கவலைப்படக் கூடாது என்ற கருத்து எனக்கு எப்போதும் உண்டு...”*

**– பகத்சிங் தனது தந்தைக்கு எழுதிய கடிதத்திலிருந்து**

உச்சநீதிமன்றத்தின் புதிய கட்டிடத்தில் மூன்றாவது தளத்தில் உள்ள விசாரணை அறை 317. அந்த அறையில் புத்தகங்கள் நிரம்பியுள்ளன. வழக்குரைஞர்கள் நிரம்பி வழிகிறார்கள். அந்தத் தருணத்தில் அது ஒரு போர்க்கள அறையாக இருக்கிறது. இந்தியாவின் மிகப் புகழ்பெற்ற புரட்சிக்காரர் பகத்சிங்கிற்கு நீதி வழங்குவதற்கான ஒரு சட்டப்போர் அங்கே நடந்துகொண்டிருக்கிறது. வழக்குரைஞர்கள் வரிசையில் அமர்ந்திருக்கிறார் இம்தியாஸ் ரஷீத் குரேஷி. 83 ஆண்டுகளுக்கு முந்தைய வழக்கை இப்போது இந்திய வழக்குரைஞர்கள் மீண்டும் எடுத்துக்கொள்ளச் செய்ய வேண்டும் என்பதற்காக அவர் பாகிஸ்தானிலிருந்து வந்திருக்கிறார். அவருடைய நோக்கம் எளிமையானது: வரலாற்றை அவர் திருத்தி எழுத விரும்புகிறார்.

“பகத்சிங் மீதான நீதிமன்ற விசாரணை நியாயமான முறையில் நடைபெறவில்லை,” என்று கூறுகிறார் குரேஷி. நடந்த தவறை சரிபடுத்த விரும்புகிறார், பாகிஸ்தானில் உள்ள பகத்சிங் நினைவு அறக்கட்டளையின் தலைவரான குரேஷி. பகத்சிங்கிற்கு அளிக்கப்பட்ட மரணதண்டனை தொடர்பான நடைமுறைகள் தவறானவை என்று கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, பகத்சிங்கின் வரலாற்றுப் பெருமையை நிலைநாட்டுவதற்காக மீண்டும் அந்த வழக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று லாகூர் உயர்நீதிமன்றத்தில் குரேஷி ஆணை கோரும் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

குரேஷியின் பக்கம் நல்வாய்ப்பு அமைந்திருந்தது. லாகூர் உயர்நீதிமன்றம் குரேஷியின் மனுவை ஒரு விரிவான அரசமைப்பு சாசன அமர்வுக் குழுவின் விசாரணைக்கு மாற்றியது. விசாரணையை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்றும், விரிவான அரசமைப்பு சாசனக் குழு அமைக்கப்பட வேண்டும் என்றும் கோருகிற ஒரு மனுவை தாக்கல் செய்ய முடியும் என்று குரேஷி நம்புகிறார். “இந்திய உச்சநீதிமன்றத்தைச் சேர்ந்த இந்திய வழக்குரைஞர்கள் குழு ஒன்று என்னுடன் லாகூருக்கு வந்து இந்த வழக்கின் இறுதி விசாரணையில் எனக்கு உதவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்பினேன்,” என்று அவர் கூறுகிறார். கடந்த காலத்தில் பகத்சிங்கிற்கு ஒரு நியாயமான விசாரணைக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டது என்று வாதாடுவதற்காக இந்திய உச்சநீதிமன்றத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்கள் குழு ஒன்று தயாராகிக் கொண்டிருக்கிறது.

“எனக்கு மூன்று வெற்றிகள் கிடைத்துள்ளன,” என்கிறார் குரேஷி. 83 ஆண்டுகளுக்கு முன் லாகூர் நகரின் அனார்கலி காவல் நிலையத்தில், சாண்டர்ஸ் கொலை தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை (FIR) மீண்டும் வெளியே எடுக்க வேண்டும் என்று ஒரு அமர்வு நீதிமன்றம் ஆணையிட்டது. அந்த முதல் தகவல் அறிக்கையில் பகத்சிங், ராஜகுரு, சுக்தேவ் ஆகிய மூவரின் பெயர்களும் குறிப்பிடப்படவில்லை. பஞ்சாப் மாநில அரசும் விசாரணை விவரங்களை குரேஷியிடம் ஒப்படைக்க நீதிமன்றம் ஆணையிட்டது.

அந்த விசாரணையே மோசடியான முறையில்தான் நடத்தப்பட்டது என்பது நாடு அறிந்தது. ஏ.ஜி. நூரணி தனது ‘பகத்சிங் விசாரணை: நீதித்துறை அரசியல்’ என்ற புத்தகத்தில் இதனை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்திருக்கிறார். “தீர்ப்பாயமே ஒரு மரண தண்டனைக்கு உள்ளாகியிருந்த நிலையில், 6 மாதங்களுக்கு அதன் செயல்பாடு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், அந்த தீர்ப்பாயத்தால் நடத்தப்பட்ட இந்த விசாரணையே கூட தனித்துவமானதுதான். ஆகவே, அது நீதியை பலிகொடுத்தது. இதைவிடவும் அதிர்ச்சியளிக்கிற மற்றொரு விஷயம் இருக்கிறது. விசாரணையின் பாதிக்கட்டத்திலேயே, தீர்ப்பாய உறுப்பினரான நீதிபதி சையத் ஆகா ஹைதர், அநாகரீகமான முறையில் நீக்கப்பட்டார்,” என்று நூரணி எழுதியுள்ளார்.

வன்முறை பயன்படுத்தப்படுவதற்கு அந்த நீதிபதி எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். அவர் எழுப்பிய கேள்விகள் அதிகாரிகளுக்கு சங்கடத்தை ஏற்படுத்தின. ஆனாலும், தீர்ப்பு என்ன என்பது முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டிருந்தது. பகத்சிங்கை உயிரோடு விடுவதற்கில்லை என்பதுதான் அந்த முடிவு. "தீர்ப்பாயத்தில் இரண்டு மாறுபட்ட கருத்துகள் இருக்குமானால் இந்த முடிவை செயல்படுத்துவது கடினமாகிவிடும்," என்கிறார் நூரணி.

உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்குரைஞர் டாக்டர். நஃபீஸ் சித்திக், சட்டம் சார்ந்த மற்றொரு விஷயத்தை அலசிக்கொண்டிருக்கிறார். "வழக்கை மீண்டும் எடுத்துக்கொள்ள முடியுமா? இந்தக் கேள்விக்கான பதிலை நாங்கள் தயார் செய்ய வேண்டியுள்ளது," என்கிறார் அவர். பகத்சிங்குடன் ஒருவகையில் தொடர்பு உள்ளவர்தான் சித்திக். அவருடைய மாமனாரின் தந்தை பகத்சிங்கிற்கு ஆலோசகராக இருந்தவர்.

வழக்கு விவரங்களை ஆய்வு செய்துள்ள சித்திக், பகத்சிங் குற்றமற்றவர் என்று கருதுகிறார். அரசியல் காரணங்களுக்காகவே பகத்சிங் உயிரிழக்க வேண்டியதாயிற்று என்கிறார். "இந்த வழக்கு மீண்டும் எடுத்துக்கொள்ளப்படுமானால், இதுபோன்ற மற்ற வழக்குகளையும் நாம் எடுத்துக்கொள்ள முடியும். மனித உரிமை மீறல்களுக்கு கால வரம்பு எதுவும் கிடையாது," என்று கூறுகிறார் சித்திக்.

**பகத்சிங் தனது 23வது வயதில் செய்ததை இன்று மீண்டும் செய்து காட்ட விரும்புகிறார். ஒரு கருத்தைச் சொல்வதற்கான ஊடகமாக அன்று நீதிமன்ற விசாரணையை பகத்சிங் பயன்படுத்திக்கொண்டார். அதையே இன்றும் செய்ய விரும்புகிறார் குரேஷி.**

ஆனால், இது வரலாற்றுக்குப் பொருந்துமா? நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு நமக்கு பதிலளிப்பதைவிட, மேலும் அதிகமான கேள்விகளைத்தான் எழுப்புகிறது. வழக்கில் தனக்கு சம்பந்தமில்லை என்று பகத்சிங் ஒருபோதும் சொன்னதில்லை. நடந்த கொலையிலிருந்து ஓடிப்போவதற்கு தாங்கள் திட்டமிடவில்லை என்று சுக்தேவ் கடிதம் காட்டுகிறது. அரசியல் ரீதியான கொலை அது. ஜவஹர்லால் நேரு தனது புத்தகத்தில் இது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். "அடித்துக்கொல்லப்பட்ட லாலா லஜ்பத் ராய் மரியாதையை நிலைநாட்ட பகத்சிங் விரும்பினார்," என்று நேரு குறிப்பிடுகிறார். "சாண்டர்ஸ் கொலைக்குப் பிறகு லாகூர் நகர சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் பகத்சிங்கின் கையால் எழுதப்பட்டவைதான்," என்று நூரணி எழுதுகிறார்.

இருந்தபோதிலும், அந்த விசாரணை கேலிக்கூத்தாகத்தான் நடந்தது. அதை இப்போது சரி செய்ய விரும்புகிறார் குரேஷி. "நாம் உண்மையிலேயே சுதந்திரமானவர்கள்தான் என்றால், பிரிட்டிஷ்காரர்களால் அளிக்கப்பட்ட தீர்ப்புகளுக்கு கட்டுப்பட்டவர்களாக நாம் இருக்கக்கூடாது," என்கிறார் அவர். "உண்மையிலேயே நாம் காலனி ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும், பகத்சிங்கிற்கு நீதி வழங்கியாக வேண்டும்.

அவரை இயக்குவது எது? அது வெறும் பரிவுணர்வா அல்லது ஒரு தேசபக்த உணர்வா? பாகிஸ்தானில் அந்த உணர்வு ஆபத்தானதாக இருக்கக்கூடும். ஏனெனில், அங்கே பகத்சிங் ஒரு வரலாற்று நாயகராகப் பார்க்கப்படுகிறார் என்றாலும், அவர் ஒரு பாகிஸ்தானியராக அல்லாமல் இந்தியராகவே பார்க்கப்படுகிறார். பகத்சிங் ஒரு வரலாற்று நாயகர் என்ற மதிப்பை தனது சொந்த நகரத்தில் மீட்க முடியும் என்று குரேஷி நம்புகிறார். தனது நிலைபாட்டில் மிகுந்த கவனத்தோடு அவர், மிகச்சிறந்த ஒரு ஆதாரத்தை எடுத்துக்காட்டுகிறார். பகத்சிங்கிற்கு ஆதரவாக காயிதே ஆசம் முகமது அலி ஜின்னா நிகழ்த்திய உரைதான் அது.

விசாரணையில் இருந்த குறைபாடுகளை அந்த மனு விவரிக்கிறது. பல குறைபாடுகள் அதில் இருந்திருக்கின்றன. 1930 மே மாதம் வைஸ்ராய் இர்வின் பிரபு, இந்த வழக்கை விசாரிப்பதற்கான தீர்ப்பாயத்தை அமைப்பதற்கான அவசர சட்டத்தை பிறப்பித்தார். அந்த மூன்று நீதிபதிகளுக்கு வழக்கு மாற்றப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வதற்கு உரிமை வழங்கப்படவில்லை. அரசுக்கான நீதித்துறை ஆலோசனைக் குழுவிற்கு (பிரிவி கவுன்சில் குழு) மட்டுமே மேல்முறையீடு செய்யலாம் என்று விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. நீதிமன்ற நடைமுறை மிக மோசமான நடைமுறையில் செயல்படுத்தப்பட்ட விஷயம் இது. அந்த நிமிடத்திலிருந்தே பகத்சிங்கிற்கான மரண தண்டனைத் தீர்ப்பு வெறும் சம்பிரதாயத்திற்கு மட்டுமே காத்திருந்தது. அந்த அவசரச் சட்டமே கூட சட்டப்படி "செல்லத்தக்கதல்ல".

"தவறான நீதி வழங்கப்படுவதை உறுதிப்படுத்த பிரிட்டிஷ் அரசின் இந்திய நிர்வாகப் பிரிவும் சட்டப் பிரிவும் எந்த அளவிற்கு சதி செய்தன" என்பதை அந்த மனு வெளிப்படுத்துகிறது. "அரசியல் போராளிகளை பழிவாங்குவதற்காக அவர்களை ஒழித்துக்கட்டுவது என்பதிலிருந்து அரசு பின்வாங்க வேண்டும் என்று வலியுறுத்துகிற தனிப்பட்ட துணிச்சல் அன்றைய எந்த ஒரு இந்திய தலைவருக்கும் இருக்கவில்லை." அந்த துணிவு ஜின்னாவுக்கு மட்டுமே இருந்தது. பகத்சிங்கின் விசாரணை

ஒரு சரியான நீதித்துறை கண்ணோட்டத்திற்கும் வரலாற்றுக் கண்ணோட்டத்திற்கும் முன்வைக்கப்படுவது இது முதல் முறையாகும்.

பகத்சிங் பற்றிய ஆய்வுகளுக்காக தனது ஆயுட்காலம் முழுவதையும் அர்ப்பணித்துக்கொண்டவரான பேராசிரியர் சமன் லால், வழக்கை மீண்டும் எடுத்துக்கொள்வதற்கான நியாயம் இருக்கிறது என்று கூறுகிறார். “அவர்கள் மூவருக்கும் தங்களுக்காக வாதாடுவதற்கான வாய்ப்பு அளிக்கப்படவில்லை,” என்று அவர் குறிப்பிடுகிறார். “குற்றம்சாட்டப்பட்டவர்கள் வரவழைக்கப்படாமலேயே விசாரணை நடத்தப்பட்டது. சாட்சிகள் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை. நடந்த கொலைக்கு அரசியல் அடிப்படையில் பகத்சிங் பொறுப்பாக இருந்திருக்கக்கூடும். ஆனால், சட்ட நடைமுறைகளை கடைப்பிடிப்பீர்களானால், சந்தேகத்திற்கு இடமின்றி அவர்கள் குற்றவாளிகள்தானா என்ற கேள்வி எழுகிறது,” என்று சமன் லால் கூறுகிறார். இது ஒரு அடையாளப்படுத்துகிற முயற்சியுமாகும். பகத்சிங்கின் ஒரு உண்மையான தொண்டராகிய குரேஷி, அன்று பகத்சிங் தனது 23வது வயதில் செய்ததை இன்று மீண்டும் செய்து காட்ட விரும்புகிறார். ஒரு கருத்தைச் சொல்வதற்கான ஊடகமாக அன்று நீதிமன்ற விசாரணையை பகத்சிங் பயன்படுத்திக்கொண்டார். அதையே இன்றும் செய்ய விரும்புகிறார் குரேஷி. பகத்சிங்கின் உணர்வுகளுக்கு மீண்டும் உயிரூட்ட விரும்புகிறார். அந்த புரட்சி நாயகர் இன்றைய பாகிஸ்தானில்தான் வாழ்ந்தார். ஆனால், எல்லை கடந்து இந்தியாவில் மட்டும்தான் அவர் பெருமையோடு போற்றப்படுகிறார்.

குரேஷி தனது மனுவில், லாகூர் தெருக்களுக்கு பகத்சிங்கின் பெயரைச் சூட்ட வேண்டும் என்று கோரியிருக்கிறார். அந்த அநீதியான விசாரணை நடைபெற்ற ’பூஞ்ச் இல்லம்’ பாகிஸ்தான் தேசிய வரலாற்றைச் சொல்கிற ஒரு அருங்காட்சியமாக மாற்றப்பட வேண்டும் என்றும் கோரியிருக்கிறார். “பகத்சிங் பற்றிய கனவு எனக்கு உண்டு. அவர்தான் என்னுடைய நாயகர்,” என்று உணர்வுப்பூர்வமாகக் கூறுகிறார் இம்தியாஸ் ரஷீத் குரேஷி.

ஆதாரம்: **THE WEEK, October 12, 2014**

## என்கவுன்ட்டர் சம்பவங்கள் தொடர்பாக உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்கள்

என்கவுன்ட்டர் சம்பவங்கள் தொடர்பாக நீதி விசாரணை கட்டாயம் நடத்தப்பட வேண்டும். விசாரணையில், அந்தச் சம் பவத்தில் குற்றம் நடைபெறவில்லை என்பது நிரூபிக்கப்படும்வரை, என் கவுன்ட்டரில் தொடர்புடைய காவல்துறையினருக்கு விருது எதுவும் வழங்கி கவுரவிக்கக் கூடாது என்று உச்சநீதிமன்றம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட வழிகாட்டுதல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தன்னார்வ அமைப்பு ஒன்று வழக்கு தொடர்ந்திருந்தது. அதில், மும்பையில் கடந்த 1995– 1997 ஆம் ஆண்டுகளுக்கு இடையே 99 என்கவுன்ட்டர் சம்பவங்கள் நடந்துள்ளன. இதில், 135 பேர் பலியாகியுள்ளனர். ஆகையால், என்கவுன்ட்டர் தொடர்பாக வழிகாட்டுதல்களை உச்சநீதிமன்றம் வகுத்து வெளியிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு, உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி ஆர்.எம். லோதா தலைமையிலான அமர்வு முன்பு செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது என்கவுன்ட்டர் தொடர்பாக வழிகாட்டுதல்களை நீதிபதிகள் வெளியிட்டனர். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

என்கவுன்ட்டர் தொடர்பாக நாட்டில் எந்த வழிகாட்டுதல்களும் இல்லாதது கவலையளிக்கிறது. இது போன்ற சம்பவங்களுக்கு வழிகாட்டுதல்கள் தேவையாகும். அப்போதுதான், சட்டத்தை தங்களது கைகளில் எடுக்கும் குற்றவாளிகளுக்கு (போலி என்கவுன்ட்டரில் ஈடுபடுபவர்களுக்கு) தண்டனை வழங்க முடியும். மேலும், மக்கள் மத்தியில் காவல்துறையினர் குறித்து நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். ஒருவரின் சுதந்திரத்துக்கு பாதிப்பு ஏற்படும்போதும், உயிருக்கு ஆபத்து ஏற்படும்போதுதான் என்கவுன்ட்டரில் ஈடுபடவேண்டும் என்று அரசமைப்பு சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விதிகளை மீறி, என்கவுன்ட்டர் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகையால், காவல்துறையினரின் என்கவுன்ட்டர்களில் நிகழும் அனைத்து மரணங்கள் குறித்தும் கட்டாயமாக நீதி விசாரணை நடத்தப்பட்டு, அதன் அறிக்கை நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

என்கவுன்ட்டர் சம்பவத்தில் ஈடுபட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு உடனடியாக விருதுகளோ அல்லது பதவி உயர்வோ அளித்து கவுரவிக்கக்கூடாது. விசாரணையில், அந்தச் சம்பவத்தில் குற்றம் நடைபெறவில்லை என்று சந்தேகத்துக்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்ட பிறகே, விருதுகள் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும். இதுபோன்ற வழக்குகளில், கிரிமினல்களின் நடமாட்டம் குறித்து புலனாய்வுத் தகவலோ அல்லது யாரேனும் தகவல் அளித்தாலோ அதை எழுத்துப்பூர்வமாகவோ அல்லது மின்னணுக் கருவியிலோ பதிவு செய்ய வேண்டும்.

என்கவுன்ட்டர் குறித்து சி.ஐ.டி. காவல்துறையினர் அல்லது உயரதிகாரியின் கண்காணிப்பின்கீழ் வேறொரு காவல் நிலையத்தைச் சேர்ந்த காவல்துறையினர் சுதந்திரமாக விசாரணை நடத்தவேண்டும். இந்தச் சம்பவம் தொடர்பான முதல் தகவல் அறிக்கை, வழக்கு தொடர்பான குறிப் புகள், வரைபடங்கள் உள்ளிட்ட வற்றை சம்பந்தப்பட்ட நீதிமன்றத் துக்கு அனுப்ப காலதாமதம் செய்யக் கூடாது. என்கவுன்ட்டர் செய்த காவல் துறையினர் தங்களது ஆயுதங்களை உடனடியாக தடயவியல் துறையிடம் அளிக்கவேண்டும். விசாரணையில், என்கவுன்ட்டரில் ஈடுபட்டவர்கள் தவறிழைத்திருப்பது தெரிந்தால், அவர்கள்மீது உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர்களை பணியிலிருந்து இடைநீக்கம் செய்ய வேண்டும் என்று வழிகாட்டுதல்களில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆதாரம்: **தமிழ் இந்து, புதுடில்லி, செப்டம்பர் 24, 2014**

# தந்தை - மகனும் புனித நீதிமன்றமும்

– நீதிபதி கே. சந்துரு

*மூத்த வழக்குரைஞர் ஃபாலி எஸ்.நாரிமன் உச்சநீதிமன்ற வழக்குகளில் வாதாடுகிறார். அந்த நீதிமன்றத்தில் அவரது மகன் ஒரு நீதிபதியாக இருக்கிறார். இத்தகைய நடைமுறை சரிதானா என்ற பழைய விவாதம் இப்போது மீண்டும் எழுந்துள்ளது*

1967ம் ஆண்டில் அமெரிக்க அதிபர் லிண்டன் பீ ஜான்சன் அமெரிக்க உச்சநீதிமன்ற நீதிபதி டாம் சி. கிளார்க் என்பவரின் மகனை தலைமை வழக்குரைஞராக நியமித்தார். உடனடியாக கிளார்க் தனது பதவியிலிருந்து விலகினார். தலைமை வழக்குரைஞர் தனது தந்தையும் ஒரு நீதிபதியாக இருக்கக்கூடிய விசாரணை அமர்வுகளுக்கு அடிக்கடி வரவேண்டியிருக்கும். தனது வழக்குகளுக்காக வாதாட வேண்டியிருக்கும் என்பதால்தான் அவர் இப்படிச் செய்தார். அமெரிக்க உச்சநீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் அதன் 9 நீதிபதிகளும் அமர்வுகளில் இருப்பார்கள். இந்தியாவைப் பொறுத்தவரையில் அந்தப் பிரச்சனை இல்லைதான்.

தற்போது, மூத்த வழக்குரைஞர் ஃபாலி எஸ்.நாரிமனின் மகன் ரோஹின்டன் எஃப். நாரிமன் ஒரு நீதிபதியாக 2014 ஜூலையிலிருந்து பொறுப்பேற்றுள்ள நிலையில், ஃபாலி நாரிமன் தொடர்ந்து உச்சநீதிமன்ற வழக்குகளில் ஆஜராகி வாதாடுகிறார். அதைத் தொடர்ந்து ஒரு வழக்குரைஞரின் ஒரு நெருங்கிய உறவினர் நீதிபதியாக இருக்கிற ஒரு நீதிமன்றத்தில் அந்த வழக்குரைஞர் வாதாட வரலாமா என்ற விவாதம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இது தொடர்பாக சில வெளிப்படையான விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் நாரிமன், வழக்குகளுக்காக தான் வாதாட வருவதற்கு சட்டப்பூர்வமாக எந்தத் தடையுமில்லை என்றும் சட்டத்தின் முன் அனைவரும் சமம்தான் என்றும் கூறி அந்தப் புகார்களைத் தள்ளுபடி செய்திருக்கிறார்.

## சட்டவிதிகள் கூறுவதென்ன ?

1961ம் ஆண்டு வரையில் இந்தியாவில் தங்களது உறவினர்கள் நீதிபதிகளாக இருக்கக்கூடிய நீதிமன்றங்களில் வழக்கறிஞர்கள் வந்து வாதாடிய நிகழ்வுகள் பல நடந்துள்ளன. ஆனால், 1961ல் கொண்டுவரப்பட்ட வழக்குரைஞர்கள் சட்டம், இத்தகைய பிரச்சனைகளில் விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தை வழக்குரைஞர்கள் மன்றத்திற்கு (பார் கவுன்சில்) அளித்ததைத் தொடர்ந்து, இத்தகைய நிகழ்வுகள் அரிதாகவே நடந்து வருகின்றன. பார் கவுன்சில் உருவாக்கிய நடைமுறைகளில் உள்ள 6வது விதியின் கீழ், எந்த ஒரு வழக்கறிஞரும் தனது உறவினர்கள் நீதிபதிகளாக உள்ள நீதிமன்றத்தில் வழக்குகளில் வாதாடக் கூடாது. அத்தகைய உறவினர்களின் பட்டியலில் அந்த வழக்குரைஞரின் தந்தை, தாத்தா, மகன், பேரன், சித்தப்பா, பெரியப்பா, மாமா, சகோதரர், மைத்துனர், சித்தப்பா – பெரியப்பா வழி சகோதரர், மனைவி, மகள், சகோதரி, சித்தி, பெரியம்மா, அத்தை, மைத்துனி, மாமனார், நாத்தனார் உள்ளிட்டோர் வருகிறார்கள். எனினும், 'நீதிமன்றம்' என்ற வார்த்தை, குறிப்பிட்ட உறவினர் விசாரிக்கிற அமர்வை மட்டுமே குறிப்பிடுகிறதா அல்லது அந்த உறவினர் நீதிபதியாக இருக்கக்கூடிய ஒட்டுமொத்த நீதிமன்றத்தையும் குறிப்பிடுகிறதா என்பது தொடர்பாக கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன.

1980களில் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் இந்த விதி குறித்த ஒரு விளக்கம் அளிக்கப்பட்டது. அந்த உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த நேசார்கி என்பவரை திருமணம் செய்துகொண்ட பிரமிளா நேசார்கி ஒரு வழக்குரைஞராக இருந்தார். அதற்கு முன்னதாக நீதிபதி நேசார்கி தனது மனைவியை இழந்திருந்தார். நீதிபதி பி.பி.போபன்னா அமர்விலான ஒரு விசாரணையில் அவர் வாதாடுவதற்காக வந்தார். அப்போது அவர் ஒரு மூத்த வழக்கறிஞர் அல்ல. குறிப்பிட்ட வழக்கு தொடர்பான வக்காலத்தில் பிரமிளாவின் பெயர் இடம் பெறவில்லை. நீதிபதி போபன்னா, குறிப்பிட்ட வழக்கில் மனுதாரர் சார்பில் வாதாடுவதற்காக வக்காலத்து தாக்கல் செய்யுமாறு ஆணையிட்டார். மறுநாள் வாதிடுவோர் பட்டியலில் பிரமிளாவின் பெயர் இடம் பெற்றது. அந்த வழக்கை விசாரித்த நீதிபதி கர்நாடக உயர்நீதிமன்றத்தில் எந்த நீதிபதியின் முன்பாகவும் பிரமிளா ஆஜராவதற்கு அனுமதி அளிக்க மறுத்தார்.

"ஒரு வழக்கறிஞரின் நெருங்கிய உறவினர் நீதிபதியாக இருக்கக்கூடிய ஒரு நீதிமன்றத்தில் அந்த வழக்கறிஞர் வாதாடுவதற்கு பார் கவுன்சில் தடைவிதித்துள்ளது. 'நீதிமன்றம் என்ற வார்த்தை குறிப்பிட்ட உயர்நீதிமன்றத்தின் அனைத்து நீதிமன்றங்களையும் குறிப்பிடாது என்றாலும் கூட, ஒரு மனைவி என்பதைப் பொறுத்தவரையில் நாம் கறாராக இருக்க வேண்டும். ஒரு மனைவி தனது கணவருடன் நெருங்கிய உறவு உள்ளவர். நீதிபதிகளுக்கிடையே பேசப்படும் பல விஷயங்கள் மனைவியின் காதுகளை எட்டிவிடும். குறிப்பிட்ட நீதிமன்றம் தொடர்பான ரகசிய விஷயங்களை அறியும் வாய்ப்புள்ள ஒரு பெண் அதே நீதிமன்றத்தில் வழக்குரைஞராக செயல்பட அனுமதிக்கப்படுவாரானால் அது ஆபத்தானதாக அமையக்கூடும்," என்று அந்த நீதிபதி தனது ஆணையில் குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து இந்தப் பிரச்சனை உச்சநீதிமன்றம் சென்றது. உச்சநீதிமன்றம் பார் கவுன்சிலுக்கு நோட்டீஸ் அனுப்ப ஆணையிட்டது. ஆனால், அந்த வழக்கு அதன்

தர்க்கப்பூர்வ முடிவு வரையில் நீடிக்கவில்லை. சம்பந்தப்பட்ட வழக்குரைஞர் ஒரு மூத்த வழக்குரைஞராகிவிட்டார். சம்பந்தப்பட்ட நீதிபதியின் பதவிக்காலம் முடிந்துவிட்டது என்பதால் அந்தப் பிரச்சனை தானாக முடிவுக்கு வந்துவிட்டது. ஆனாலும், அந்த விதி தொடர்பான விளக்கம் குறித்த சர்ச்சை இன்னமும் நீதிமன்றங்களில் வலம் வந்துகொண்டிருக்கிறது. நீதிபதி பி. பாலகிருஷ்ண ஐயர் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றபோது அவரது மகன் வழக்குரைஞர் பி.பி. கிருஷ்ணமூர்த்தி தனது பணியை வேறு மாநில உயர்நீதிமன்றத்திற்கு மாற்றிக்கொண்டார். 1970களில் ஒரு வழக்கறிஞர் வேறொரு வித்தியாசமான நடைமுறையை மேற்கொண்டார். அந்த வழக்குரைஞர் நூற்றுக்கணக்கான ஜாமீன் கோரிக்கை மனுக்களில் கையெழுத்துப் போட்டு வந்தார். அதன்மூலம் அந்த விவகாரங்கள் அவரது மாமனாராகிய நீதிபதியின் முன் வராமல் பார்த்துக்கொண்டார். அந்த நீதிபதி ஜாமின் மனு அளிக்கிற விஷயத்தில் மிகக் கறாரானவராக அறியப்பட்டவர்.

நீதிபதி வி.ஆர். கிருஷ்ண ஐயர் உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றபோது, வழக்கறிஞராக இருந்து வந்த அவரது மகன் இந்தியாவில் எந்த நீதிமன்றத்திலும் பணியாற்றுவதில்லை என்று முடிவு செய்தார். அதற்கு பதிலாக ஒரு தனிப்பட்ட தொழிலில் ஈடுபடலானார். கேரள உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த வி.சிவராமன் நாயர் நீதிபதி கிருஷ்ண ஐயரிடம் இளநிலை வழக்குரைஞராக பணியாற்றியவர். அவரது மகளும் மருமகளும் கேரள உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞர்களாக செயல்படத் தொடங்கியபோது அவர் குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதி தன்னை வேறு மாநிலத்திற்கு மாற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

இமாச்சலப் பிரதேச உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி லீலா சேத் தனது வாழ்க்கை வரலாற்றை புத்தகமாக எழுதியுள்ளார். அதில் அவர் பாட்னா உயர்நீதிமன்றத்தில், வழக்குரைஞர்கள் மன்றத்தால் கடைபிடிக்கப்பட்ட இரண்டு நடைமுறைகள் தொடர்பான தனது அனுபவத்தை பதிவு செய்துள்ளார்.

''அந்த நீதிமன்றத்தில் 'மாமன் நடைமுறை' மற்றும் 'லால் ஜந்தா' என்ற பழக்கங்கள் கடைபிடிக்கப்பட்டதைப் பற்றி மக்கள் பேசிக்கொண்டதை நான் கேள்வியுற்றேன். அது என்ன என்பது எனக்கு புதிராக இருந்து வந்தது. ஒரு வழக்குரைஞர் தனது தந்தை நீதிபதியாக உள்ள விசாரணை அமர்வில் பங்கேற்க அனுமதிக்கப்படுவதில்லை என்பதால், அந்த மகனிடம் பேசி குறிப்பிட்ட ஒரு வழக்கு தந்தையிடம் செல்லாமல் தடுக்கலாம் என்ற நடைமுறை இருந்து வந்தது. ஒரு எச்சரிக்கைக்கான 'சிவப்புக் கொடி' வைக்கப்பட்டது போன்றதுதான் இது. பாரபட்சமான முடிவுகள் எடுக்கப்படுவதைத் தடுப்பதற்காக கொண்டுவரப்பட்ட இந்த விதி இப்படி தவறான முறையில் பயன்படுத்தப்பட்டது. சில இளம் வழக்குரைஞர்கள் இந்த ஏற்பாட்டின் மூலமாகவே கூட வருவாய் பெற்றனர். சில நீதிபதிகள் தங்களது சக நீதிபதிகளின் மகன்கள் வாதாட வருவதை ஆதரித்தனர் என்ற வதந்தியும் உலாவியது. இவ்வாறாக 'மாமன் நடைமுறை' செழிப்பாக இருந்து வந்தது,'' என்று நீதிபதி லீலா சேத் எழுதியுள்ளார். பதவியில் உள்ள ஒரு நீதிபதியின் நெருங்கிய உறவினர்கள் முறையின்றி அதை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது தொடர்பாக நீதிபதிகளின் இடமாற்றப் பிரச்சனை குறித்து எஸ்.பி. குப்தா வழக்கில் (1981), தேவையற்ற சங்கடங்கள் ஏற்படுவதைத் தடுக்க பின்வரும் வழி முன்மொழியப்பட்டது: ''ஒரு கருத்தரங்கில் தலைமை நீதிபதி அளித்த அறிவுரையை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு நீதிபதி அல்லது தலைமை நீதிபதியின் நெருங்கிய உறவினர்கள் வழக்குரைஞர்களாக அதே நீதிமன்றத்தில் பணியாற்றுகிறபோது தேவையற்ற சலுகைகளை அவர்கள் பெறக்கூடும் என்கிறபோது, ஒவ்வொரு நீதிபதிக்கும் இருக்கக்கூடிய நீதி உணர்வுக்குக் கட்டுப்பட்டவராக தானாகவே முன்வந்து வேறு ஒரு உயர்நீதிமன்றத்திற்கு தன்னை மாற்றுமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்.''

1997ல் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஜே.எஸ்.வர்மா தலைமையில் அதன் அனைத்து நீதிபதிகளும் கூடி, 'நீதித்துறை வாழ்க்கையின் மாண்புகள்' என்பது குறித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர். ஒரு நீதிபதி தனக்கு நெருங்கியர் தனது அமர்வில் வழக்குரைஞராக வாதாடுவதை தவிர்க்க வேண்டும் என்று அந்தத் தீர்மானம் கூறியது. நீதிபதியின் வீட்டில் குடியிருக்கக்கூடிய எந்த ஒரு வழக்குரைஞரும் அந்த காலகட்டத்தில் வழக்குரைஞர் பணியில் ஈடுபடக்கூடாது என்றும் அந்தத் தீர்மானம் கூறியது. ராஜா கான் வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி மார்கண்டேய கட்ஜூ நீதிபதிகளின் நெருங்கிய உறவினர்களே அதே நீதிமன்றங்களில் வழக்குரைஞர்களாக பணியாற்ற அனுமதிக்கப்படுவதில் உள்ள தீமைகள் குறித்து எச்சரித்தார். ''சில நீதிபதிகளின் நெருங்கிய உறவினர்கள் அதே நீதிமன்றத்தில் வழக்குரைஞர்களாகப் பணியாற்றுகிறார்கள். வழக்குரைஞர்களாகப் பணியாற்றத் தொடங்கிய சில ஆண்டுகளுக்குள்ளாகவே நீதிபதிகளின் மகன்கள் அல்லது உறவினர்கள் கோடீஸ்வரர்களாகிவிடுகிறார்கள், அவர்களது வங்கிக் கணக்குகளில் பெரும் பணம் சேர்கிறது, ஆடம்பர கார்கள் வாங்குகிறார்கள், பெரிய வீடுகளைக் கட்டுகிறார்கள், ஆடம்பரமான வாழ்க்கையை வாழ்கிறார்கள். நீதிபதிகளின் மகன்களோ வேறு உறவினர்களோ அவர்களுக்குள்ள உறவின் காரணமாக ஆதாயம் அடையக் கூடாது, அவர்களும் மற்ற வழக்குரைஞர்களைப் போலவே போராடி வர வேண்டும் என்று இருந்த நாட்களிலிருந்து தற்போதைய நிலைமை வெகுவாக மாறியிருக்கிறது,'' என்று நீதிபதி கட்ஜூ கூறினார்.

### தீர்வு என்ன ?

நீதிபதி ஆர்.எம். லோதா உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்றபோது சில பத்திரிகையாளர்கள்

அவரிடம், நீதிபதிகளின் உறவினர்கள் அதே நீதிமன்றத்தில் வழக்குரைஞர்களாகப் பணியாற்றுவதை தடுப்பதற்கு வழி இல்லையா என்று கேட்டனர். இந்தப் பிரச்சனைக்கு பார் கவுன்சில்தான் தீர்வுகாண வேண்டும் என்று நீதிபதி லோதா பதிலளித்தார். நீதிபதிகளின் உறவினர்கள் அதே நீதிமன்றங்களில் வழக்குரைஞர்களாக பணியாற்றுவதற்கு தடைவிதிக்க வேண்டும் என்று வழக்குரைஞர் எம்.எல்.சர்மா தாக்கல் செய்த ஒரு பொதுநல வழக்கையும் அவர் தள்ளுபடி செய்தார்.

இப்போது வழக்குரைஞர் நாரிமன் தனது மகன் நீதிபதியாக உள்ள நீதிமன்றத்தில் பணியாற்றுகிற பின்னணியில் மீண்டும் முன்னுக்கு வந்துள்ள இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண விதிகளில் உரிய திருத்தங்களை செய்யுமாறும், நீதி அமைப்பின் மீது பொது மக்களுக்கு உள்ள நம்பிக்கையை பாதுகாக்குமாறும் இந்திய வழக்குரைஞர் மன்றத்திற்கு வலுவான கோரிக்கைகள் எழுந்தாக வேண்டும்.

**(கட்டுரையாளர் சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி)**

## போலி என்கவுன்டர் வழக்கில் அமித் ஷா விடுதலை சிபிஐ வழக்கை பலவீனப்படுத்தியதாக காங்கிரஸ், ஏஏபி புகார்

மும்பையில் உள்ள ஒரு சிபிஐ சிறப்பு நீதிமன்றம் பாரதீய ஜனதா கட்சி தலைவர் அமித் ஷாவை சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் நடந்த இரண்டு போலி மோதல் வழக்குகளில், கொலை மற்றும் குற்றச் சதி தொடர்பான புகார்களிலிருந்து விடுவித்துள்ளது.

2005ம் ஆண்டில், கடத்தல் கும்பலை நடத்தி வந்தவர் என்று கூறப்பட்ட ஷோராபுதீன் ஷேக், அவரது மனைவி கவுசர் பீ, ஓராண்டு கழித்து அவர்களது நண்பரும் கொலையை நேரில் கண்டவருமான துளசி பிரஜாபதி ஆகியோரை சட்டத்திற்குப் புறம்பாக சுட்டுக்கொல்ல காவல்துறையினருக்கு ஆணையிட்டார் என்று ஷா மீது புகார் செய்யப்பட்டிருந்தது. அந்த சம்பவத்தின்போது அவர் குஜராத் மாநிலத்தில் நரேந்திர மோடி அரசில் உள்துறை அமைச்சராக இருந்தார். 2010ம் ஆண்டு நடுவில் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் அமைச்சர் பதவியிலிருந்து விலகினார். மூன்று மாதங்கள் கழித்து ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை பாஜக வரவேற்றுள்ளது. முந்தைய காங்கிரஸ் தலைமையிலான ஐ.மு.கூ. அரசு தனது அரசியல் எதிரிகளை சிக்க வைப்பதற்காக புலனாய்வு அமைப்புகளை தவறாகப் பயன்படுத்தியது என்ற தனது குற்றச்சாட்டு உண்மை என்பதை இந்தத் தீர்ப்பு நிரூபிக்கிறது என்று பாஜக கூறுகிறது. காங்கிரஸ், ஆம்ஆத்மி கட்சி (ஏ.ஏ.பி.) இரண்டும் இந்தத் தீர்ப்பை விமர்சித்துள்ளனர். சிபிஐ தனது இந்த வழக்கில் வாதாட, ஒரு இளநிலை வழக்குரைஞரைத்தான் பயன்படுத்தியது, அவர் நீதிமன்றத்தில் 15 நிமிடங்கள் மட்டுமே பேசினார். ஷா–வுக்கு எதிரான வழக்கை சிபிஐ திட்டமிட்ட முறையில் பலவீனப்படுத்திவிட்டது என்று இந்த இரண்டு கட்சிகளும் கூறுகின்றன. இந்த வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களில் அநேகமாக அனைவருக்குமே மும்பை உயர்நீதிமன்றம் ஜாமீன் அனுமதி வழங்கியுள்ளது.

2005 நவம்பரில் ஷோராபுதின், அவரது மனைவி இருவரும் குஜராத்தின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை போலீஸ் படையால் கடத்திச் செல்லப்பட்டனர் என்றும், காந்தி நகர் அருகில் நடத்தப்பட்ட ஒரு போலி மோதலில் அந்த இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்றும் கூறப்பட்டது. ஷோராபுதீனுக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த லஸ்கர்–இ–தொய்பா பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு இருப்பதாக காவல்துறையினர் கூறினர். மோதலை நேரில் கண்ட சாட்சியான பிரஜாபதி 2006 டிசம்பரில் குஜராத்தின் பனஸ்கந்த்தா மாவட்டத்தில் சாப்ரி கிராமத்தில் காவல்துறையினரால் கொல்லப்பட்டார். குற்றம்சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகளுடன் அமித் ஷா தொடர்ந்து பல முறை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார் என்றும், ஆகவே அவருக்கு கொலைச் சதியில் சம்பந்தம் இருக்கிறது என்றும் குற்றம்சாட்டப்பட்டது. ஆனால், உள்துறை அமைச்சர் என்ற முறையில் அமித் ஷா களத்தில் உள்ள காவல்துறை அதிகாரியுடன் தொடர்புகொண்டு பேசுவார் என்பதை சிபிஐ மறுக்கவில்லை என்று ஷா–வின் வழக்குரைஞர் வாதாடினார்.

சிபிஐ நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்போவதாக ஷோராபுதின் குடும்பத்தினர் கூறுகின்றனர். உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்ய முடிவெடுப்பதற்கு முன்பாக இந்தத் தீர்ப்பு ஆராயப்படும் என்று சிபிஐ அதிகாரி ஒருவர் கூறினார்.

“முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசு இந்த வழக்கில் ஷா–வை போலியான முறையில் சம்பந்தப்படுத்திய குற்றத்திற்காக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி மன்னிப்புக் கேட்க வேண்டும்,” என்று பாஜக தேசிய செயலாளர் ஸ்ரீகாந்த் ஷர்மா கோரியுள்ளார்.

சிபிஐ வழக்குரைஞரின் பங்கு குறித்து கேள்விகளை எழுப்புகிறார் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் மனு சிங்வி. குற்றம்சாட்டப்பட்ட அமித்ஷாவின் வழக்குரைஞர் மூன்று நாட்கள் நீதிமன்றத்தில் வாதாடியிருக்கிறார். அப்படியிருக்கும்போது சிபிஐ வழக்குரைஞர் 15 நிமிடங்கள் மட்டும் வாதாடியது ஏன் ? இந்த வழக்கிற்காக சிபிஐ ஏன் வேறு எந்த சிறப்பு அரசு வழக்குரைஞரையும் நியமிக்கவில்லை என்றும் அவர் கேட்கிறார். சிபிஐ சிறப்பு நீதிமன்ற நீதிபதி சிறப்பு அரசு வழக்குரைஞர் புலனாய்வு அமைப்பின் விசாரணை அதிகாரிகள் ஆகியோர் மாற்றப்பட்டது ஏன் என்றும் அவர் கேட்கிறார். மற்றொரு காங்கிரஸ் தலைவரான அஜய் குமார், “ஐ.மு.கூ. ஆட்சியில் சிபிஐ ஒரு கூண்டுக் கிளியாகிவிட்டது என்று விமர்சித்த பாஜக–வின் இன்றைய ஆட்சியில் சிபிஐ சங்கிலிகளால் கட்டப்பட்டு, கூண்டில் அடைக்கப்பட்டு, முற்றிலும் முடக்கப்பட்டுவிட்டது,” என்று கூறியுள்ளார்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து சிபிஐ உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய வேண்டும் என்று ஏஏபி மூத்தத் தலைவர் யோகேந்திர யாதவ் கோரியுள்ளார். இந்த வழக்கில் சிபிஐ பல்டி அடித்துவிட்டது, வழக்கை பலவீனப்படுத்திவிட்டது என்றும் அவர் கூறுகிறார்.

**ஆதாரம்: *Business Standard,* சனிக்கிழமை ஜனவரி 3, 2015**

# பசுந்தளிர்கள் படுகொலை

## *பெஷாவர் பள்ளிக் கொலை*

**– ஜான் செரியன்**

பெஷாவர் பள்ளியில் நடந்த கொலைவெறியாட்டம், இஸ்லாமிய தீவிரவாதம் தொடர்பாக பாகிஸ்தான் அரசின் அணுகுமுறையில் மாற்றம் தேவை என்பதை வலியுறுத்துகிறது. அதே நேரத்தில் பாகிஸ்தான் தாலிபான் இயக்கம் தனது கோரிக்கைகள் ஏற்கப்படும் வரையில் இது போன்ற தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தப் போவதாக அச்சுறுத்துகிறது

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் உள்ள ஒரு பள்ளியில் 2014 டிசம்பர் 16 அன்று 'டெரீக் – இ – தாலிபான் பாகிஸ்தான்' (டி.டி.பி.) அமைப்பினர் நடத்திய தாக்குதலில் 132 குழந்தைகள் உட்பட ஆசிரியர்களும் இதர பணியாளர்களுமாக 162 பேர் கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் சுதந்திரமடைந்ததிலிருந்து இதுவரையில் அங்கு நடந்துள்ள பயங்கரவாதத் தாக்குதலிலேயே மிக மோசமானது இதுவாகத்தான் இருக்க முடியும். நூற்றுக்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களில் பலருக்கு ஆயுட்காலம் வரைக்கும் தொடரக்கூடிய அளவிற்கு கடுமையான காயங்கள் ஏற்பட்டுள்ளன. 2007ம் ஆண்டில் அந்நாட்டின் வர்த்தகத் தலைநகரமான கராச்சியில் ஒரு தற்கொலைப் படைத்தாக்குதல் நடந்தது. அதில், 150 பேர் கொல்லப்பட்டனர். தாலிபான்கள் நடத்தியுள்ள மற்ற தாக்குதல்களில் ராவல்பிண்டி நகரில் உள்ள ராணுவ தலைமையகம், கமாரா நகரில் உள்ள விமானப்படையின் தளம் உள்ளிட்ட ராணுவ கட்டமைப்புகளும், கராச்சி, பெஷாவர் நகர்களில் உள்ள பயணிகள் விமான நிலையங்களும்தான் இலக்கு வைக்கப்பட்டன.

ரஷ்யாவின் பேஸ்லான் நகரில் 2004ல் நடந்த அந்த துயரத்திற்குப் பிறகு, பயங்கரவாதிகள் குறைந்தது பள்ளிகளையும் பள்ளிக் குழந்தைகளையுமாவது விட்டு வைப்பார்கள் என்று உலக சமுதாயம் எதிர்பார்த்தது. பேஸ்லான் சம்பவத்தில் செச்சன் பயங்கரவாதிகள் 186 பள்ளிக் குழந்தைகளைப் படுகொலை செய்தனர். பாகிஸ்தானின் தாலிபான் அமைப்பைப் பொறுத்தவரையில் பள்ளிகளையும் தாக்கி வந்திருக்கிற வரலாறு உண்டு. பெண் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதை எதிர்ப்பவர்கள் அவர்கள். பெஷாவரில் கொல்லப்பட்ட அந்தக் குழந்தைகளுக்கு பாகிஸ்தான் முழுவதும் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டன. வீழ்த்தப்பட்டவர்களுக்கு அஞ்சலியாக நாடு முழுவதும் கடைகளும் தொழில் நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தன.

2016 டிசம்பர் 16 அன்று காலை 10 மணியளவில் பாகிஸ்தான் ராணுவ உடையில் துப்பாக்கிகளோடு வந்த 7 பேர், பள்ளிக்கு அருகில் இருந்த கல்லறைப் பகுதியிலிருந்து சுவரைத் தாண்டி குதித்து பள்ளிக்குள் நுழைந்து, உடனடியாக கண்ணில் பட்டவர்களை சுடத் தொடங்கினர் என்று நேரில் பார்த்த சாட்சிகள் கூறுகிறார்கள். 3 வயது குழந்தைகள் கூட குறி வைத்து சுட்டுக்கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் ராணுவத்தின் சிறப்பு நடவடிக்கைப் பிரிவைச் சேர்ந்த அதிரடிப் படையினர் விரைவாக தலையிட்டார்கள் என்ற போதிலும் கூட, தாலிபான் ஆட்களின் தாக்குதல் 8 மணி நேரத்திற்குப் பிறகுதான் முடிவுக்கு வந்தது. பயங்கரவாதிகளில் சிலர் அரபு மொழி பேசினர். சிலர் பாஷ்தோ மொழி பேசினர். தங்கள் இடுப்புகளில் தற்கொலைக்கான குண்டுகளைக் கட்டியிருந்த அவர்கள், திட்டமிட்ட முறையில், தாங்கள் வந்த நோக்கத்தை நிறைவேற்றிய பிறகு, அந்த குண்டுகளை வெடிக்க வைத்து சிதறிப்போனார்கள். அவர்களது துப்பாக்கிகளுக்கு பலியான பலர், மிக அருகாமையில் தலையில் சுடப்பட்டனர். ஆசிரியர்களில் ஒருவர் பயங்கரவாதிகளால் எரித்துக்கொல்லப்பட்டார் என்று, அந்தத் தாக்குதலில் தப்பியவர்கள் தெரிவிக்கிறார்கள்.

பள்ளியின் மேல் வகுப்பு மாணவர்கள் ஒரு முதலுதவி பயிற்சி முகாமில் பங்கெடுப்பதற்காக பள்ளியின் மைய அரங்கில் கூடுகிறார்கள் என்ற தகவல் பயங்கரவாதிகளுக்கு முதலிலேயே தெரிந்திருந்தது என்று பாகிஸ்தான் ஊடகங்கள் கூறுகின்றன. பள்ளிக்குள் நுழைந்த பயங்கரவாதிகள் நேராக அந்த மைய அரங்கத்தை நோக்கித்தான் சென்றார்கள். அந்த அரங்கத்தில் குழந்தைகளின் உடல்கள் குழுக் குழுவாகக் கடந்தன. பலர் கொல்லப்பட்டிருந்தார்கள், பலர் படுகாயமடைந்திருந்தார்கள். பயங்கரவாதிகளுக்கும் அவர்களை அங்கே அனுப்பி வைத்தவர்களுக்கும் இடையே நடந்த தொலைபேசி உரையாடல்களை மீண்டும் இயக்கிப் பார்த்தபோது, குழந்தைகளைக் கொன்ற பிறகு என்ன செய்வது என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தது தெரிய வருகிறது. "எல்லா குழந்தைகளையும் கொன்றுவிட்டோம். இப்போது நாங்கள் என்ன செய்வது," என்று ஒரு பயங்கரவாதி கேட்டபோது, "ராணுவத்தினர் வரும்வரை காத்திருங்கள். உங்கள் உடலில் உள்ள குண்டுகளை வெடிக்க வைப்பதற்கு முன்பாக ராணுவத்தினரைக் கொல்லுங்கள்," என்று ஆணை வந்தது. கொல்லப்பட்ட மாணவர்களில் பலர் பாகிஸ்தான் ராணுவத்தில் பணியாற்றுகிறவர்களின் குழந்தைகள்தான். பாகிஸ்தான் ராணுவம் அந்த நாட்டில் இப்படி பல பள்ளிகளை நடத்துகிறது. கொல்லப்பட்ட குழந்தைகளில் பெரும்பாலோர் 14 வயதிற்கு உட்பட்டவர்கள்.

பாகிஸ்தானின் தாலிபான் அமைப்பைச் சேர்ந்த முகமது குராசானி. அந்த ஈவிரக்கமற்ற தாக்குதலை நடத்தியது தங்களுடைய அமைப்புதான் என்று உடனடியாக அறிவித்தார். வடக்கு வாஜிரிஸ்தான் வட்டாரத்தில் உள்ள பழங்குடியினர் பகுதியில் தங்களுடைய அமைப்புக்கு எதிரான பாகிஸ்தான் ராணுவத்தின் தொடர்ந்த நடவடிக்கைகளுக்கு பதிலடியாகவே, பள்ளியையும் குழந்தைகளையும் குறிவைத்துத் தாக்கியதாக அவர் கூறினார். ராணுவ நடவடிக்கைகளில் பல குழந்தைகளும் பெண்களும் கொல்லப்பட்டதுண்டு என்றார் அவர். "குழந்தைகளை இழப்பதன் சோகத்தை அவர்கள் உணர வேண்டும். ஆகவேதான் இந்த இஸ்லாமிய எதிரிகளின் வீடுகளுக்குள்ளே புகுந்து குழந்தைகளைக் கொல்வது என்று நாங்கள் முடிவு செய்தோம்," என்று அந்தத் தாலிபான் கூறினார். வடக்கு வாஜிரிஸ்தான் வட்டாரத்தில் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை பாகிஸ்தான் ராணுவம், ஜார்ப் – இ – ஆஸப் என்ற ரகசியப் பெயரில் 2006 ஜூன் மாதத்தில் தொடங்கியது. அந்த வட்டாரத்திலிருந்து தாலிபான்களை வெளியேற்றும் பணியில் ராணுவம் வெற்றி பெற்றது. 1800க்கும் மேற்பட்ட தீவிரவாதிகளை கொன்றுவிட்டதாக கூறப்பட்டது ஆனால், அந்த நடவடிக்கையால் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட குடிமக்கள் வீடற்றவர்களானார்கள். அவர்களில் பலர் பெஷாவர் போன்ற பாகிஸ்தான் நகரங்களில் தஞ்சம் புகுந்தனர். மற்றவர்கள் எல்லை ஓரத்தில் தஞ்சம் புகுந்தனர்.


### துயர நேரத்தில் ஒற்றுமை

இந்தத் துன்பமான நேரத்தில் உலக சமுதாயம் பாகிஸ்தானின் பக்கம் ஒன்றுபட்டு நின்றன. ஆதரவையும் அனுதாபத்தையும் வெளிப்படுத்தும் அறிக்கைகள் அனைத்து நாடுகளிலும் இருந்தும் வந்து குவிந்தன. டிசம்பர் 16 அன்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி பாகிஸ்தான் பிரதமர் நாவாஷ் ஷெரீப்புடன் தொலைபேசி மூலம் பேசினார். அப்பாவி குழந்தைகளைக் குறி வைத்துத் தாக்கியது கோழைத்தனமான செயல் என்று கூறி அவர் கண்டனம் தெரிவித்தார். டிசம்பர் 17 அன்று இந்திய நாடாளுமன்றம் ஒரு நிமிடம் மௌனம் கடைபிடித்து, பெஷாவர் நகரில் நிகழ்த்தப்பட்ட "காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத தாக்குதல்களுக்கு" கண்டனம் தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது. பயங்கரவாதம் எந்த வடிவத்தில் எந்த அளவிற்கு வெளிப்பட்டாலும் அதை உலக சமுதாயம் எதிர்த்துப் போராட வேண்டும் என்று அந்தத் தீர்மானம் கேட்டுக்கொண்டது. இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், பாகிஸ்தான் தூதரகத்திற்குச் சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் பதிவேட்டில் கையெழுத்திட்டார். இந்தியா முழுவதும் இருந்து வந்த இரங்கல் செய்திகள் தன் மனதைத் தொட்டுவிட்டதாக பாகிஸ்தான் தூதர் அப்துல் பாசித் கூறினார். எனினும், பாகிஸ்தான் அரசுடன் இந்திய அரசு நிறுத்திக்கொண்ட பேச்சுவார்த்தையை மீண்டும் தொடர்வது குறித்த மறு சிந்தனை எதுவும் வெளிப்படவில்லை. இரு நாடுகளின் வெளியுறவுத் துறை செயலர்களிடையே நடந்து வந்த அந்தப் பேச்சுவார்த்தையை இந்திய அரசு ஒருதலைப்பட்சமாக 2014ல் நிறுத்திக்கொண்டது. அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா பள்ளிக் குழந்தைகளும் ஆசிரியர்களும் தாக்கப்பட்டது. "மிகக் கொடூரமான செயல்" என்று குறிப்பிட்டார். பயங்கரவாதிகள் எந்த அளவிற்கு இழிந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை மீண்டும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்று ஒபாமா கூறினார். பாகிஸ்தானின் பழங்குடியினர் பகுதிகளில் அமெரிக்க விமானப் படையினர் குண்டு வீசி தாக்குவதை பாகிஸ்தானில் பலரும் கண்டித்துள்ளனர். அந்த வட்டாரத்தில் பயங்கரவாதிகளுக்கு ஊக்கமளிப்பதாகக் கூறி நடத்தப்பட்ட அந்த குண்டுவீச்சுத் தாக்குதல்களில் குழந்தைகள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுவிட்டனர். ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலைமைச் செயலர் பான் கி–மூன், டிசம்பர் 16 தாக்குதல், "ஒரு பயங்கர நடவடிக்கை. கற்றுக்கொள்வதற்காக வந்திருந்த குழந்தைகளைக் குறிவைத்துத் தாக்குவது கோழைத்தனம்," என்று சித்தரித்தார்.

நோபல் விருது பெற்ற மலாலா யூசப்சாய் மீது தாலிபான்கள் நடத்திய தாக்குதலின்போது எழுந்த கண்டனங்களைவிட அதிகமான அளவிற்கு உலகளாவிய கண்டனக் குரல்கள், தாலிபான்களின் இந்தப் புதிய தாக்குதலுக்கு எழுந்துள்ளன. பெண் குழந்தைகளின் கல்வி உரிமையை வலியுறுத்தியதற்காக 2012ல் மலாலா தாக்கப்பட்டார். நைஜீரியா நாட்டின் போக்கோ ஹராம் அமைப்பைப் போல தாலிபான் அமைப்பும் பள்ளிகளைத் தாக்குவதிலும், பெண் குழந்தைகளை குறி வைத்துத் தாக்குவதிலும் நிபுணத்துவம் பெற்ற அமைப்பாக இருக்கிறது. பெஷாவர் சம்பவத்தைத் தொடர்ந்து உடனடியாக அறிக்கை வெளியிட்ட மலாலா, "இந்த அறிவுடைமையற்ற ஈவிரக்கமற்ற பயங்கரவாதச் செயலால் எனது இதயம் நொறுங்கிப் போயிருக்கிறது. உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மக்களோடு சேர்ந்து நானும் எனது சகோதரர்களாகிய, சகோதரிகளாகிய இந்தக் குழந்தைகளுக்காக துயரப்படுகிறேன். ஆனால், ஒருபோதும் நாம் வீழ்ந்துவிட மாட்டோம்," என்று கூறினார்.

பயங்கரவாதத் தாக்குதல் பற்றிய தகவல் கிடைத்தவுடன் நவாஸ் ஷெரீப் பெஷாவர் நகருக்கு விரைந்து சென்றார். தாலிபான்களுக்கு எதிரான போராட்டம் தொடரும் என்று அவர் சூளுரைத்தார். தாலிபான்கள் தொடர்பாகவும், இதர தீவிரவாத குழுக்கள் தொடர்பாகவும் பாகிஸ்தான் அரசின் நிலைப்பாடுகள் இனி மேலும் திட்டவட்டமானதாக இருக்கக் கூடும். இம்ரான் கான் போன்ற பல எதிர்கட்சித் தலைவர்கள் அண்மைக் காலம் வரையில் வெளிப்படையாக தாலிபான்களை விமர்சிக்க மறுத்து வந்தனர். பெஷாவர் தாக்குதலுக்குப் பிறகு இம்ரான்கான் வெளிப்படையாக தாலிபான்களை விமர்சித்தார். அந்த அமைப்பின் பெயரை அவர் குறிப்பிடவில்லை என்றாலும், அந்த அமைப்பு "பெரியவர்களுக்கு எதிராகத்தான் போராட வேண்டுமே தவிர குழந்தைகளுக்கு எதிராக அல்ல," என்று கூறினார். எனினும், தாலிபான்கள் மீது தாக்குதல் நடவடிக்கையை






மேற்கொள்வதற்கு பதிலாக அரசு பேச்சுவார்த்தை நடத்த முயல வேண்டும் என்று கூறினார். இந்த பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து, ஏற்கெனவே நவாஸ் ஷெரீப் அரசு பதவி விலக வலியுறுத்தி இம்ரான் கான் நாடு தழுவிய அளவில் நடத்தி வந்த, போராட்ட இயக்கத்தை நிறுத்தி வைத்துள்ளார். வட்டார அளவிலான தாலிபான்களை எதிர்கொள்வது தொடர்பாக தேசிய அளவில் ஒரு பொதுக் கருத்தை உருவாக்குவதற்கு அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்பட உள்ளது. அதில் பங்கேற்க அவர் ஒப்புதல் தெரிவித்துள்ளார். பயங்கரவாத பிரச்சனை முக்கியமானதாக இருப்பதால் நவாஸ் ஷெரீப்புடனான தனது அரசியல் மாறுபாடுகளை தற்காலிகமாக ஒதுக்கி வைத்திருப்பதாக இம்ரான் கான் கூறினார்.

### "செயல் திட்டம்"

அனைத்துக் கட்சி கூட்டம் முடிந்த பிறகு பேசிய பிரதமர் நவாஷ் ஷெரீப், நாட்டிலிருந்து தாலிபான்களை துடைத்தெறியும் நோக்கத்தில் நாட்டின் தலைமை முன்னெப்போதையும்விட ஒன்றுபட்டு நிற்கிறது என்று குறிப்பிட்டார். "அனைத்து பயங்கரவாதிகளும் முறியடிக்கப்படும் வரையில் போராட்டம் தொடரும். எந்த ஒரு கட்டத்திலும் நல்ல தாலிபான், கெட்ட தாலிபான் என்று பிரிப்பதற்கில்லை. அனைவருமே இரும்புக்கரம் கொண்டு சமமான முறையில் நடத்தப்படுவார்கள்," என்று அவர் கூறினார். ஏழு நாட்களுக்குள் செயல் திட்டம் ஒன்றை உருவாக்க, கூட்டத்தில் கலந்துகொண்ட அரசியல் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர் என்றும் பிரதமர் தெரிவித்தார். அந்த திட்டத்தை உருவாக்குவதில் ராணுவ அதிகாரிகளும் உளவுத்துறை அதிகாரிகளும் கலந்தாலோசிக்கப்படுவார்கள் என்றார். பாகிஸ்தானில் மரண தண்டனைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக்கொள்ளப்படுவதாகவும் அந்நாட்டு அரசு அறிவித்தது. பெஷாவர் தாக்குதலை திட்டமிட்டவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பது குறித்த உளவுத்துறை தகவல்களை ஆப்கானிஸ்தானுக்கு பாகிஸ்தான் அளித்துள்ளது என்று கூறப்படுகிறது. தாக்குதலை முதலில் கண்டித்த தலைவர்களில் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரஃப் கானி ஒருவர். ஆப்கானிஸ்தானில் உள்ள பள்ளிகள் மீது அந்நாட்டு தாலிபான்கள் இதேபோல் நடத்திய தாக்குதல்களை அவர் குறிப்பிட்டுள்ளார். தலைநகரான காபுல் நகரில் பிரெஞ்சு நாட்டவர்களால் நடத்தப்பட்டு வரும் ஒரு பள்ளியின் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலும் இதில் அடங்கும். தீவிரவாதத்தை எதிர்த்து போராடுவதில் ஒன்றுக்கொன்று கூடுதலாக ஒத்துழைப்பது என்று இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன என்றும் கானியின் அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கை கூறுகிறது. ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிகளை பயங்கரவாதிகள் பயன்படுத்திக்கொள்ள தனது அரசு அனுமதிக்காது என்று ஆப்கன் ஜனாதிபதி, பாகிஸ்தான் ராணுவ தலைவர் ஜெனரல் ரஹீல் ஷெரீப்பிடம் உறுதியளித்திருப்பதாக பாகிஸ்தான் ராணுவம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கை கூறுகிறது. அதிபர் மாளிகையிலிருந்து ஹமீத் கர்சாய் வெளியேறியதிலிருந்தே இரு நாடுகளின் அரசுகளுக்குமிடையேயான உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அண்மைக்காலம் வரையில், பயங்கரவாதச் செயலில் ஈடுபடுவதற்காக தீவிரவாதக் குழுக்கள் எல்லை தாண்டி வருவதற்கு வசதி செய்து கொடுப்பதாக இரு அரசுகளும் ஒன்றையொன்று குற்றம் சாட்டி வந்தன. ஆப்கானிஸ்தானில் உள்ள பாகிஸ்தானிய தாலிபான் கூடாரங்களை அமெரிக்கா தொடர்ந்து தாக்கும் என்று அமெரிக்க அரசும் ஜெனரல் ரஹீல் ஷெரீப்பிடம் உறுதியளித்துள்ளது.

பாகிஸ்தானிய தாலிபான் அமைப்பின் தலைவர் மௌலானா ஃபஸ்லுல்லா ஆஃப்கானிஸ்தானின் நூரிஸ்தான், குனார் ஆகிய வட்டாரங்களில் இருந்து செயல்படுகிறார் என்பதற்கு தன்னிடம் ஆதாரங்கள் உள்ளன என்று இஸ்லாமாபாத் கூறுகிறது. பெஷாவர் தாக்குதலை நடத்த ஆணையிட்டது ஓமர் மன்சூர் என்ற தாலிபான் தலைவர்களில் ஒருவர்தான் என்று பாகிஸ்தானிய தாலிபான் அமைப்பு பெஷாவர், தாரா ஆடம் கேல் ஆகிய பகுதிகளில் அவர் இயங்கி வருவதாக கூறப்படுகிறது. காபுல் நகருக்கு பயணம் மேற்கொண்ட ஜெனரல் ரஹீல் ஷெரீப், பயங்கரவாதிகளுக்கு எதிரான கூட்டு முயற்சிகள் உள்பட காபூலின் ஐக்கிய அரசுக்கு இஸ்லாமாபாத் முழுமையாக ஆதரவளிக்கும் என்று மீண்டும் உறுதிபடுத்தியிருக்கிறார். உலக அளவில் இத்தகைய கண்டனக் குரல்கள் எழுந்துள்ள போதிலும் பாகிஸ்தானிய தாலிபான் அமைப்பு அதனால் அசைந்துவிடவில்லை. ராணுவ நடவடிக்கைகள் நிறுத்திக்கொள்ளப்பட வேண்டும் என்ற தனது கோரிக்கை ஏற்கப்படும் வரையில் பாகிஸ்தான் நாடு முழுவதும் ராணுவத்தாலோ அல்லது நேரடியாக அரசாங்கத்தாலோ நடத்தப்படும் பள்ளிகள் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகும் என்று தாலிபான் அறிவித்துள்ளது.

**ஆதாரம்: Frontline, January 9, 2015**

# சிறைகளின் நிலைமை



## இந்திய சிறைகளின் நிலைமை


இந்திய சிறைகள் அளவுக்கு மேல் நிரம்பி வழிவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று நீதி வழங்கப்படுவதில் ஏற்படும் தாமதமாகும். இந்திய சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பவர்களில் 60 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் விசாரணை கைதிகளாவர்

– ஆர்.கே. ராதாகிருஷ்ணன்

### சிறைச்சாலை விவரங்கள் 2013

*பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் பற்றிய தகவல்கள்*

**மொத்தம் உள்ள சிறைக் கைதிகள்**
**4, 11,992**





### மனநோயாளிகளாக உள்ளக் கைதிகள்

தண்டனைக் கைதிகளில் 1.8 சதவீதத்தினரும், விசாரணைக் கைதிகளில் 0.9 சதவீதத்தினரும் காவல் கைதிகளில் 1.4 சதவீதத்தினரும் 2013ம் ஆண்டின் இறுதியில் மனநோய்களால் பாதிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு மாநிலங்களில் சிறைகளில் மனநல பாதிப்புகளோடு சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்கள்:

குஜராத் –633
ஒடிஷா –577
ஆந்திரா பிரதேசம் –409
மத்திய பிரதேசம் –366
உத்தர பிரதேசம்–349
வங்க தேசம் –306
கேரளா–296
கர்நாடகா –283
ராஜஸ்தான் –260
ஜார்க்கண்ட்–190
மஹாராஷ்டிரா –163
பஞ்சாப் –118

### சாதி அடிப்படையில் கைதிகள் விவரம்



ஆதாரம்: Frontline, January 9, 2015

இந்திய சிறைகள் அளவுக்கு மேல் நிரம்பி வழிகின்றன. மக்கள் தொகைக்குப் பொருத்தமில்லாத வகையில் முஸ்லீம்களும் தலித்துகளும் பழங்குடியினரும் பெரும் எண்ணிக்கையில் சிறைகளில் இருக்கிறார்கள். உடனடிப் பிரச்சனைகள் எதற்கும் தீர்வு இருப்பதாகத் தெரியவில்லை.

2013ம் ஆண்டுக்கான இந்திய சிறை புள்ளி விவரங்கள் அறிக்கை, 2012 இறுதியில் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தோர் விகிதம் 112.2 சதவீதம் என்றும், அது 2013 இறுதியில் 118.4 சதவீதமாக அதிகரித்துவிட்டது என்றும் தெரிவிக்கிறது. இவற்றில் மிக மோசமான அளவுக்கு அதிக கைதிகள் அடைக்கப்பட்டிருப்பது மாவட்ட நீதிமன்றங்களில்தான் (134.7 சதவீதம்). அவற்றைத் தொடர்ந்து மத்திய சிறைகளில் அதிக கைதிகள் இருக்கிறார்கள் (121.2 சதவீதம்).

இருந்தாலும் ஒரு சிறு ஆறுதல் இருக்கிறது. உலகின் மற்ற பகுதிகளில் இருப்பதைவிட தெற்காசிய பிரதேசத்தில் (ஒரு நாட்டின் மக்கள் தொகையில் ஒரு லட்சம் பேருக்கு இத்தனை சிறைக் கைதிகள் என்ற அடிப்படையில்) குறைவான விகிதத்திலேயே சிறைக் கைதிகள் உள்ளனர். உலகிலேயே மிக அதிக விகிதத்தில் (ஒரு லட்சம் பேருக்கு 868 சிறைக் கைதிகள்) இருப்பது செஷல்ஸ் நாட்டில்தான் என்று ப்ரிசன்ஸ்டடீஸ் என்ற இணையத்தளம் தெரிவிக்கிறது (*Prisonstudies.org*). இரண்டாவதாக அதிக சிறைக் கைதிகள் இருக்கும் நாடு அமெரிக்கா (707 பேர்). இந்திய சிறை புள்ளி விவரங்கள் அறிக்கை இங்கு லட்சம் மக்கள் தொகைக்கு 32 பேர் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கிறது. ஆனால், பிரிசன்ஸ்டடீஸ் இணையத்தளம் இந்த எண்ணிக்கை 33 பேர் என்று கூறுகிறது. தெற்காசிய பிரதேசத்தில் அதிக சிறைக் கைதிகள் உள்ள நாடு மாலத்தீவு (320 பேர்), அதற்கு அடுத்தபடியாக வருவது மியான்மர் (113), இலங்கை (105), ஆப்கானிஸ்தான் (83), நேபாளம் (52), பங்களாதேஷ் (42), பாகிஸ்தான் (41), சீனா (124).

## விசாரணைக் கைதிகள்

சிறைகளில் அளவுக்கு மேல் ஆட்கள் இருப்பதற்கு முக்கிய காரணம் விசாரணைக் கைதிகள் அடைக்கப்பட்டிருப்பதுதான். நீதிமன்றங்களில் குற்றம்சாட்டப்படும் ஒருவர் விடுவிக்கப்படுவதற்கோ அல்லது குற்றவாளி என அறிவிக்கப்படுவதற்கோ நியாயமற்ற முறையில் மிக நீண்டகாலம் ஆகிறது. இதன் பிரதிபலிப்புதான் இவ்வளவு விசாரணைக் கைதிகள் அடைக்கப்பட்டிருக்கிற நிலைமை. காவல்துறை மட்டத்தில் தாமதமாவது ஒருபுறம் இருக்க இந்திய நீதிமன்றங்களும் மிக அதிகமான வழக்குகளால் திணறிக் கொண்டிருக்கின்றன. நீதிபதிகள் உள்பட நீதித்துறையில் காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்படுவதற்கும் மேலாக நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. 2013ம் ஆண்டு இறுதி வாக்கில் பல்வேறு உயர்நீதிமன்றங்களில் சுமார் 44 லட்சம் வழக்குகள் நிலுவையில் இருந்தன. துணை நிலை நீதிமன்றங்களில் இந்த எண்ணிக்கையைவிட 5 மடங்கு அதிகமான வழக்குகள் காத்திருக்கின்றன.


இந்தியாவில் ஒட்டுமொத்தமாக அனைத்து சிறைகளிலும் இருந்த விசாரணைக் கைதிகள், தண்டனை அளிக்கப்பட்ட கைதிகள் விகிதம் 2013ம் ஆண்டில் முறையே 67.6 சதவீதம், 31.5 சதவீதம் ஆகும். கிட்டத்தட்ட 3047 விசாரணைக் கைதிகள் 5 ஆண்டுகளுக்கு மேலாக சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். விசாரணைக் கைதிகள் மிக அதிக அளவில் இருப்பது உத்தரபிரதேச மாநிலம் (914 பேர், இது மொத்த எண்ணிக்கையில் 30 சதவீதமாகும்); அடுத்தபடியாக பீகார் மாநிலம் வருகிறது (464 பேர், 15.2 சதவீதம்); பஞ்சாப் மாநிலம் (294 பேர், 9.6 சதவீதம்). 2013ம் ஆண்டு இறுதியில் மொத்தம் 9,842 விசாரணைக் கைதிகள் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகவும் ஐந்து ஆண்டுகளுக்குக் குறைவாகவும் தண்டனை அளிக்கப்பட்டவர்களாவர். உத்தரபிரதேசத்தில் இத்தகைய விசாரணைக் கைதிகள் 2,679 பேர் அடைக்கப்பட்டிருந்தனர்; அதையடுத்து பீகார் மாநிலத்தில் 1,243 பேரும், பஞ்சாப் மாநிலத்தில் 1,023 பேரும் விசாரணைக் கைதிகளாக உள்ளனர்.

நாட்டின் பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள மொத்தம் 4,11,992 கைதிகளில் 4,820 பேர் (1.2 சதவீதம்) மனநலம் பாதிக்கப்பட்டவர்கள். மொத்தம் 2,353 வெளிநாட்டவர்கள் (ஆண்கள் 2,192, பெண்கள் 161) நாட்டின் பல்வேறு சிறைகளில் தண்டனை அளிக்கப்பட்ட கைதிகளாக உள்ளனர். பல்வேறு சிறைகளில் விசாரணைக் கைதிகளாக அடைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்கள் எண்ணிக்கை 4,353 பேர் (ஆண்கள் 3,905, பெண்கள் 448).

## மத அடிப்படையில் கைதிகள் விவரம்

| | இந்து | முஸ்லீம் | கிறிஸ்துவர் |
|---|---|---|---|
| தண்டனை அளிக்கப்பட்டோர் | 72.0% (93,273) | 17.1% (22,145) | – |
| விசாரணைக் கைதிகள் | 69.0% (1,92,202) | 21.0% (57,936) | – |
| காவல் கைதிகள் | 68.9% (2,144) | 19.7% (613) | 7.9% (248) |
| மற்றவர்கள் | 48.0% (368) | 51.0% (392) | – |

சிறைகளில் அதிக எண்ணிக்கையில் விசாரணைக் கைதிகள் அடைக்கப்பட்டுள்ள மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள்



# மனித உரிமைகள் தினத்தில் ஒரு மனித உரிமைகள் வழக்குரைஞரின் சிந்தனைச் சிதறல்கள்

*(டிசம்பர் 10 மனித உரிமைகள் தினத்தையொட்டி எழுதப்பட்ட கட்டுரை)*

–நந்திதா ஹக்ஸர்

**சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் இருப்பவருக்காக** எனது கட்சிக்காரர்கள் குற்றவாளிகள் அல்ல என தீர்ப்பளிக்கப்பட்டு சிறையிலிருந்து மீண்டும் சுதந்திர மனிதர்களாக வெளியே வந்தபோது, சிறைக்கு வெளியே நின்று கொண்டிருந்த அதை எனது வாழ்க்கையின் மிகச் சிறந்த தருணங்களில் ஒன்றாக உணர்ந்தேன். ஆம். அவர்கள் அனைவரும் ஆண்கள்தான். எனது முப்பதாண்டு வழக்குரைஞர் வாழ்க்கையில் எனது கட்சிக்காரர்களாக இருந்த ஒரு பெண் கூட சிறையில் இருந்ததில்லை.

அவர்கள் பர்மிய மாணவர்கள். இந்தியாவில் அடைக்களம் புகுவதற்காக எல்லை தாண்டி வந்து, ஒரு இந்தியச் சிறையில் அடைக்கப்பட்டவர்கள். அந்தச் சிறையில், இந்திய பாதுகாப்புப் படையினரால் உள்நாட்டு கலவர தடுப்பு நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டு, காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் இருந்தார்கள். முன்பு ஒருமுறை பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்ட காஷ்மீர் இளைஞர் ஒருவருக்காக நான் நீதிமன்றத்தில் வாதாடியிருக்கிறேன்.

கடத்தலில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட இரண்டு பேருக்காகவும் வாதாடியிருக்கிறேன். மனித உரிமைகளுக்காக செயல்பட்டு வரும் மற்றொரு நண்பரும் சிறையில் இருந்ததுண்டு. ஆம், ஒரு மனிதர் தனது சுதந்திரத்தை மீண்டும் பெறுவதற்கு உதவுவது மிகச் சிறந்த செயல். ஆனால், யார் விடுதலை பெற நான் உதவி செய்தேனோ அவர்கள் அனைவருமே தங்களது மனைவிமார்களை தங்களது சிறிய வீடுகளிலேயே நான்கு சுவர்களுக்குள் சிறை வைத்தவர்கள்தான் என்பதை நான் எப்போதுமே அறிந்தவள்தான்.

இதைத் தொடர்ந்து எனக்கு இந்தச் சிந்தனை ஏற்படுகிறது: என்னால் மேலும் எத்தனை பேரைக் காப்பாற்றியிருக்க முடியும்? எத்தனையோ பேர் இன்னும் சிறைகளில்தான் இருக்கிறார்கள். தங்களுக்காக வாதாட ஒரு வழக்குரைஞர் இல்லை என்ற காரணத்தால் அவர்கள் சிறைகளில் வதங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

உலகம் முழுக்க உள்ள சிறைகளில் சுமார் 90 லட்சம் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் இருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கிறபோது, எனது சொந்த சாதனைக்காக எனக்கு பெருமித உணர்வு எதுவும் ஏற்படவில்லை.

**அமைதிக்கான நோபல் விருது**

பெண்கள் குறித்து இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு உள்ள அணுகுமுறைக்கு எதிரான ஒரு அருமையான அடையாளமாக மலாலா உருவாகியிருக்கிறார். ஆனால், அந்த துணிச்சல் மிக்க பாகிஸ்தானிய சிறுமிக்கு அளிக்கப்படும் விளம்பரம், போரை நியாயப்படுத்துகிற அளவிற்கு பெண்களின் உரிமைகளை உயர்த்திப் பிடிப்பதாக அமைக்கப்படவில்லை.

பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் எதிரியை அடையாளப்படுத்தும்போது, பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறையோடும் நினைத்துக்காட்டுவது என்பது, பயங்கரவாதத்திற்கு எதிரான அமெரிக்காவின் போர் பெண்களின் உரிமைகளுக்காகவும் நடத்தப்படுகிறது என்ற கருத்தை உருவாக்குகிற திட்டத்தின் ஒரு பகுதிதான்.

அமெரிக்க ராணுவ வீரர் ப்ராட்லி மானிங் இல்லையென்றால், பயங்கரவாதத்திற்கு எதிரான போரின் பயங்கரங்கள் வெளியே தெரிந்திருக்காது. 25 வயது மானிங் இப்போது சிறையில் இருக்கிறார். ஆயிரக்கணக்கான ராணுவ ஆவணங்களை விக்கிலீக்ஸ் இணையதளத்திற்கு கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு 35 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது.

7 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆவணங்களையும் வீடியோ பதிவுகளையும் கசியவிட்டார் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு மானிங் சிறையில் அடைக்கப்பட்டார். அமெரிக்க ராணுவ வரலாற்றில் மிகப்பெரிய ஆவணக் கசிவு இது. பாக்தாத் தெரு ஒன்றில் ஆயுதங்கள் ஏதுமின்றி இருந்த பொதுமக்கள் மீது அமெரிக்காவின் அபாச்சே ஹெலிகாப்டரிலிருந்து குண்டுகள் போடப்பட்டதை பதிவு செய்திருந்த வீடியோ படம் ஒன்றும் விக்கிலீக்ஸ் வலைத்தளத்திற்கு தரப்பட்ட பதிவுகளில் ஒன்றாகும்.

அமெரிக்க குடிமைச் சுதந்திர ஐக்கிய பேச்சு, தனி உரிமை மற்றும் தொழில்நுட்பத் திட்டம் என்ற அமைப்பின் இயக்குநர் பென் விஸ்னர் இவ்வாறு கூறுகிறார்: “சிறைக் கைதிகளை சித்திரவதைச் செய்தவர்களுக்கும் பொது மக்களை கொலை செய்தவர்களுக்கும் தரப்பட்டிருப்பதைவிட கடுமையான தண்டனை தகவல்களை பத்திரிகைகளுக்கும் பொது மக்களுக்கும் பகிர்ந்து கொண்ட ஒரு ராணுவ வீரருக்குத் தரப்படுகிறது என்றால், நமது நீதி முறையில் ஏதோ ஆழமான தவறு இருக்கிறது.”

ப்ராட்லி மானிங்குக்கு பாலின அடையாள குறைபாடு இருக்கிறது. அதாவது தன்னை ஒரு பெண் என்று மனதிற்குள் உணருகிறவர் அவர். அதனால் தன்னை செல்சியா என்று மற்றவர்கள் அழைக்க வேண்டும் என்று விரும்புகிறவர். இவருக்கு வேண்டிய சிகிச்சையளிக்க சிறைச்சாலையில் மறுக்கப்படுகிறது.

அமைதிக்கான நோபல் விருது செல்சியா மானிங்குக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று பலரும் கருதுகிறார்கள். விக்கிலீஸ் வலைத்தளத்தை உருவாக்கியவரான ஜூலியன் அசாஞ்ஜே இந்த உயரிய விருதுக்கு பங்காளியாகத் தேர்வு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று பலர் கூறுகிறார்கள்.

மேற்கத்திய அரசுகளின் நெறியற்ற, சட்டத்திற்குப் புறம்பான செயல்களையும், ஆஃப்கானிஸ்தானில் நடத்தப்படும் போரின் கொடுமைகளையும் அசாஞ்ஜே மற்றும் அவரது வலைத்தள நண்பர்கள் உலகத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

போர் தொடர்பான விரிவான தகவல்கள் விக்கிலீக்ஸ் செய்திகளில் வெளியாகின. தாலிபான் தலைவர்களைக் குறி வைத்து ஆஃப்கானிஸ்தானில் சுற்றி வந்த அமெரிக்க படுகொலைப் படையான டாஸ்க் போர்ஸ் – 373 முதல், பாகிஸ்தான் எல்லையையொட்டி ஒரு மலைக் கிராமத்தில் வாழ்ந்த ஷூம் கான் வரையில் பல விவரங்கள் வெளியிடப்பட்டன. சிஐஏ துணை ராணுவக் குழு ஒன்று அந்த கிராமத்திற்குள் நுழைந்தபோது ஷூம் கான் ஓடிக்கொண்டிருந்தார். ஓடுவதை நிறுத்தும்படி ஆணையிட்ட ராணுவம், அவர் தொடர்ந்து ஓடியபோது அவரை சுட்டுக்கொன்றது. சிஐஏ அதிகாரிகளுக்கு தெரியாத விஷயம் என்னவென்றால் ஷூம் கானுக்கு காது கேட்காது, அவர்களுடைய கட்டளைகள் அவருடைய காதில் விழவில்லை என்பதுதான்.

'தி கார்டியன்' பத்திரிக்கை நடத்திய ஒரு ஆய்வில், அமைதிக்கான நோபல் விருதுக்கு எட்வர்ட் ஸ்நோடென் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அதன் வாசகர்கள் பெரும்பாலோர் கருத்து தெரிவித்திருந்தனர். அமெரிக்க அரசும் பிரிட்டிஷ் அரசும் உலக அளவில் செய்து வருகிற வேவு வேலைகள் பற்றிய ஆவணங்களை ஸ்நோடென் வெளிப்படுத்தியிருந்தார். அந்தப் பத்திரிக்கை நடத்திய வாக்கெடுப்பில் 47 சதவீத வாசகர்கள் ஸ்நோடென்னுக்கு நோபல் விருது வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறியிருந்தனர். மலாலாவுக்கு ஆதரவாக 36 சதவீத வாசகர்களும், செல்சியா மானிங்குக்கு ஆதரவாக 15 வாசகர்களும் வாக்களித்திருந்தனர். ஜூலியன் அசாஞ்ஜே, எட்வட் ஸ்நோடென், செல்சியா மானிங் ஆகிய மூவரும் உண்மையான மனித உரிமை பாதுகாவலர்கள் என்று நான் கருதுகிறேன். மனித உரிமைகளைப் பாதுகாக்க அவர்களால் செய்ய முடிந்ததெல்லாம் சட்டத்தை மீறுவதுதான். ஆம், மனித உரிமைகளும் சட்டத்தின் ஆட்சியும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செல்ல முடிவதில்லை.

## இஸ்லாம், மாதர் உரிமைகள் மற்றும் மனித உரிமைகள்

ஒரு மனித உரிமைகள் வழக்குரைஞராக எனது வாழ்க்கையில், மனித உரிமைகளுக்கான வாதங்களும் மாதர் உரிமைகளுக்கான வாதங்களும் முரண்படுவதை நான் கண்டிருக்கிறேன். அந்த முரண்பாடுகள் பற்றி நான் போதுமான அளவுக்குப் பேசியிருக்கிறேன், எழுதியிருக்கிறேன். ஆனால், இப்போது அந்த விவாதம் மேலும் சிக்கலாகியுள்ளது.

உலகப் பொது மன்னிப்பு அமைப்பின் பாலினம், பாலியல் மற்றும் அடையாளப் பிரச்சனைகள் பிரிவுக்குத் தலைவராக இருந்த கீதா சாகல் பதவி விலகினார். குவான்டநாமோ வளைகுடா சிறையில் முன்பு ஒரு கைதியாக இருந்தவரான மோயாஜெம் பேக் ஏற்படுத்தியுள்ள கூண்டில் அடைபட்ட கைதிகள் (Caged Prisoners) என்ற அமைப்புக்கும், மனித உரிமைகள் அமைப்புக்கும் இடையே ஒரு கூட்டு ஏற்பட்டபோது, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இவர் பதவி விலகினார்.

இதைத் தொடர்ந்து மாதர் உரிமைகள் – மனித உரிமைகள் இரண்டும் மோதிக்கொண்டன. கீதாவுக்கு வலுவான நண்பர்கள் உண்டு. அவர் பதவி விலகக் காரணமாக அமைந்த நிலைமைகளுக்காக பொது மன்னிப்பு அமைப்புக்கு உலகம் முழுவதிலும் இருந்து கண்டனம் எழுந்தது. கீதாவின் ஆதரவாளர்களில் முக்கியமான ஒருவர் சல்மான் ருஷ்டி.

கீதாவை விமர்சித்த பெண்ணியவாதிகளும் உண்டு. உதாரணமாக, பெண்ணுரிமை இயக்க அறிஞர்கள் இதனை பின்வரும் விஷயத்தை சுட்டிக்காட்டியுள்ளனர்: "அவர்கள் (கீதாவும் அவரது நண்பர்களும்) தங்கள் விமர்சனங்களை வெளிப்படுத்த பயன்படுத்தும் மொழி குறித்தும் தர்க்க நியாயம் குறித்தும் நாங்கள் கவலையடைகிறோம். முஸ்லீம் அடையாளங்களை குற்றமயமானதாக சித்தரிக்கும் போக்குடனும், முஸ்லீம் ஆண்களும் பெண்களும் அனுபவிக்கிற வன்முறைகளோடும் கவலையளிக்கும் வகையில் அவரது கருத்துக்கள் நெருங்கிய தொடர்புள்ளவையாக இருக்கின்றன.

ஆப்கானிஸ்தானிலும் இராக்கிலும் நடத்தப்பட்ட போர்களையும் ஆக்கிரமிப்புகளையும் கண்டிக்க சர்வதேச பொது மன்னிப்பு நிறுவனம் மறுத்தபோது இந்த அறிஞர் பெருமக்கள் அதை ஏன் விமர்சிக்கவில்லை என்ற சிந்தனை எனக்கு ஏற்படுகிறது. சில தீவிர இஸ்லாம் அமைப்புகளுக்கு நிதி உதவி செய்வதில் மேற்கத்திய அரசுகளுக்கு உள்ள பங்கு குறித்து பொது மன்னிப்பு நிறுவனம் வெளிப்படுத்த

மறுத்தபோது அதையும் இவர்கள் ஏன் விமர்சிக்கவில்லை என்ற கேள்வியும் எனக்கு எழுந்தது. இவர்களில் சிலர் அல்–கொய்தா அமைப்பு ஏற்படுத்தப்பட்டதற்கு ஆதரவாகவும் வாதிட்டிருக்கிறார்கள்.

### அரசியல் இஸ்லாமும் மேற்குலகமும்

''அல்–கொய்தா அமைப்பின் தன்மையையும், அடுத்தடுத்த அமெரிக்க அரசு நிர்வாகங்களோடு அதற்குள்ள உறவையும் வெளிப்படுத்துவது சரியான போர் எதிர்ப்பு மற்றும் சமூக உரிமைகள் இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஒரு முக்கியத் தேவையாகும்,'' என்ற வாதத்தை முன்வைத்துள்ளார் பேராசிரியர் மைக்கேல் சோசுதோவ்ஸ்கி.

அல்–கொய்தா அமைப்பு அமெரிக்க உளவுப் பிரிவான சிஐஏ அமைப்பால் ஏற்படுத்தப்பட்டது. சோவியத் யூனியனுக்கும், ஆஃப்கானிஸ்தானுக்கும் எதிரான போரையொட்டி அல்–கொய்தாவை சிஐஏ ஏற்படுத்தியது. இந்த உண்மைகள் முறையான ஆவணங்களில் பதிவாகியுள்ளன. ஆனால், ஊடகங்களில் மிக அரிதாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உண்மைகளுக்கு ஆதாரமாக அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஆவணங்கள் உள்ளிட்ட ஏராளமான தகவல்கள் உள்ளன. ஒசாமா பின்லேடனுக்கு தாங்கள் ஆதரவளித்தது உண்மைதான் என்றும், பனிப்போரைத் தொடர்ந்து பின்லேடன் தங்களுக்கு எதிராக மாறிவிட்டதாகவும் சிஐஏ பல முறை கூறியிருக்கிறது. 9/11 நிகழ்வுக்குப் பிறகு, ஊடகங்களின் தவறான தகவல்கள் உண்மைகளை மூழ்கடிக்க உதவியதோடு நிற்கவில்லை; கற்பனையான ''வெளி எதிரி'' திட்டமிட்ட முறையில் ''முதல் எதிரி'' என்பதாக ஜோடிக்கப்பட்டது எப்படி என்பதற்கான வரலாற்று ஆதாரங்களையும் மறைத்துவிட்டன.

### அச்ச அரசியல்

உளவுத்துறை அமைப்புகளின் வேலைகள் அறிவியல் கற்பனைக் கதைகளில் வரும் பயங்கர விலங்குகளைப் போல உலகத்தின் எல்லா மூலைகளிலும் கூரிய நகங்களை நீட்டிக்கொண்டு வளர்ந்து வருகின்றன. சந்தேகத்திற்குரியவர்களை கைது செய்வதிலும் விசாரணை நடத்துவதிலும் முனைப்புடன் இருப்பது என்ற குற்ற நீதி அமைப்பின் ஒரு அங்கமாக உளவு அமைப்புகள் மாறியுள்ளன.

அமெரிக்காவில் 1,271 அரசு அமைப்புகளும், 1,931 தனியார் நிறுவனங்களும் பயங்கரவாத எதிர்ப்பு, உள்நாட்டுப் பாதுகாப்பு, அமெரிக்கா முழுவதும் சுமார் 10,000 இடங்களில் உளவுப் பணி என்பவை தொடர்பான திட்டங்களில் ஈடுபட்டுள்ளன. சுமார் 8,54,000 பேர், வாஷிங்டன் நகரில் வாழும் மக்களைவிட ஒன்றரை மடங்கு அதிகமானோர் உயர்நிலை பாதுகாப்பு அனுமதிகளைப் பெற்றுள்ளனர் என்று கூறப்படுகிறது. பனிப்போர் காலகட்டத்தில் உலக மனித உரிமைகள் பிரகடனம் தயாரிக்கப்பட்டது. அந்தப் பிரகடனம் பதற்றங்களை தணிப்பதைவிடவும் போர்களை நீட்டிக்கச்செய்வதற்குத்தான் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற பெயரில் மனித உரிமை தராதரங்கள் கீழிறக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் சித்திரவதைகளும் சட்டவிரோத சிறை வைப்புகளும் சட்டத்திற்குப் புறம்பான மரண தண்டனைகளும் நிர்வாக ஆணைகளைப் பயன்படுத்தி அனுமதிக்கப்படுகின்றன. ஆனால்... பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற பெயரில் நிகழும் அத்துமீறல்களை எதிர்ப்பதற்கும் அந்தப் பிரகடனம் ஒரு ஆயுதமாகப் பயன்படுகிறது என்பது முக்கியமானது. அந்தப் பிரகடனமும் உரிமைகளுக்கான சட்டமுன்வரைவும் இல்லாமல் குவாண்டனாமோ சிறையிலிருந்து எந்த ஒரு கைதியையும் விடுதலை செய்திருக்க முடியாது இந்திய சிறைகளில் இருந்த எந்த ஒரு விசாரணைக் கைதியையும் உச்சநீதிமன்றம் விடுவித்திருக்க முடியாது. அச்சத்தின் மூலமாக நடத்தப்படும் அரசியலை எதிர்கொள்வதற்கான மொழியையும் மனித உரிமை விவாதங்கள் நமக்கு வழங்குகின்றன.

**ஆதாரம்: MAINSTREAM December 12-18, 2014**

### போலி என்கவுன்ட்டர்களை தடுக்க உச்ச நீதிமன்றம் வழிகாட்டு நெறிமுறை: பொதுநல வழக்கில் தீர்ப்பு

போலி என்கவுன்ட்டர்களை தடுக்க உச்ச நீதிமன்றம் புதிய வழிகாட்டு நெறிமுறைகளை அறிவித்துள்ளது. நாடு முழுவதும் பேலி என்கவுன்ட்டர்கள் அதிகரித்து விட்டதாக கூறி சூரத் சிங் என்பவர் தெடர்ந்த பெதுநல மனு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் தலைமை நீதிபதி ஆர்.எம்.லேதா அடங்கிய அமர்வு பிறப்பித்த உத்தரவு வருமாறு: தீவிரவாதிகள் அல்லது குற்றவாளிகளுடன் பேலீஸார் சண்டையிடும்பேது என்கவுன்ட்டர் மூலம் மரணம் ஏற்பட்டால் உடனே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும். குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 176–ன் கீழ் மாஜிஸ்ட்ரேட் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். மாநில சிஜடி பேலீஸார் அல்லது வேறு காவல் நிலைய பேலீஸார் மூலம் சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்.

குற்றவாளிகளை அல்லது தீவிரவாதிகளை பிடிக்கச் செல்லும் முன் அவர்களைப் பற்றி கிடைத்துள்ள ரகசிய தகவல்கள், பிடிப்பதற்கு செல்பவர்களின் ஒவ்வெரு நகர்வும் எழுத்துமூலம் பதிவு செய்யப்பட வேண்டும். என்கவுன்ட்டர் நடந்துவிட்டால் அதில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி மற்றும் ஆயுதங்களை உடனே ஒப்படைக்க வேண்டும். என்கவுன்ட்டர் குறித்த தகவல்கள் மற்றும் தற்பேதைய நிலை குறித்த அறிக்கை ஆகியவை அனைத்தும் தேசிய மனித உரிமை ஆணையத்துக்கு, விசாரணை நடைபெறும் காலத்தில் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அனுப்பி வைக்கப்பட வேண்டும். என்கவுன்ட்டர் சம்பவத்தில் தெடர்புடைய பேலீஸாருக்கு விசாரணை முடிந்து, அவர்கள் குற்றமற்றவர்கள் என்று நிரூபிக்கப்படும் வரை அவர்களுக்கு வீரதீர விருதுகள், நற்சான்றிதழ்கள், பதவி உயர்வுகள் வழங்கப்படக் கூடாது என்று நீதிபதிகள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

ஆதாரம்: **தமிழ் இந்து, புதுடில்லி, செப்டம்பர் 24, 2014**

# மூலதனத்தை முறைகேடாக்கிவிட்டு தொழிலாளர்களை முறைப்படுத்துகிறார்கள்!

## *இந்தியாவின் தொழில்துறையில் நடக்கும் வேகமான மாற்றங்கள்*

–அதுல் சூத், பாரிதோஷ் நாத், சங்கீதா கோஷ்

**முன்னுரை:**

முன்னெப்போதையும் விட இப்போது தொழிலாளர்களை நிர்வாகங்கள் மிகப்பெரும் அளவிற்கு கட்டுப்படுத்தக்கூடிய நிலையை இந்திய அரசு அண்மைக் காலமாக உறுதிப்படுத்தியுள்ளது. அரசியல் பொருளாதார செயல்பாடுகளில் நவீன தாராளமய அரசு பெரிதும் குறுக்கிடுவதில்லை என்ற கருத்து இப்போது அர்த்தமற்றதாகியிருக்கிறது. நவீன தாராளமய அரசு தனது இரட்டைத் தன்மையை மேலும் மேலும் வெளிப்படுத்தி வருகிறது.

இந்தியாவில் தொழிலாளர்களை முறைப்படுத்துவது தொடர்பான விவாதங்களில், உழைப்புச் சந்தையின் நீக்குப் போக்கான தன்மை குறித்து வலியுறுத்தப்படுகிறது. (நிர்வாகங்களுக்கு) கட்டுப்பாடுகளை விதிக்கக்கூடிய தொழிலாளர் சட்டங்கள் நீக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. தொழிலாளர் சட்டங்கள் முதலீட்டுச் சூழலுக்கு முட்டுக்கட்டை போடுகின்றன என்றும், வேலை வாய்ப்புகளுக்குத் தடையாக இருக்கின்றன என்றும் கூறப்படுகிறது. தொழிலாளர் நியமனம் – நீக்கம், வேறு பணிகளில் அமர்த்துதல், ஒப்பந்தத் தொழிலாளர் முறையைப் பயன்படுத்துதல், தொழிற்சங்கங்களிடமிருந்து வரும் நிர்ப்பந்தங்கள் ஆகியவை தொடர்பான பிரச்சனைகளில் நிர்வாகங்கள் சந்திக்கிற சிக்கல்கள்தான் வேலைவாய்ப்புகள் பெருகாததற்கும், நாட்டின் தொழில் வளர்ச்சி ஏமாற்றகரமாக இருப்பதற்கும் காரணம் என்று வாதிடப்படுகிறது.

மூலதனத்திற்கு சாதகமாக செயல்படுவதே தனது கடமை என்பதாக தன்னை மாற்றிக்கொண்டுவிட்ட இந்திய அரசு, இந்த "நீக்குப்போக்கான அணுகுமுறைக்கு" ஆதரவாகச் செயல்படுகிறது. தற்போதைய உழைப்புச் சந்தை கறார் தன்மையோடு இருப்பதால் இந்தியாவின் தொழில்துறை வளர்ச்சி பாதிக்கப்படுகிறது என்று கூறப்படுவதை அரசு ஒப்புக்கொண்டுவிட்டதாகத் தெரிகிறது. "இரண்டாம் தலைமுறை தொழிலாளர் சீர்திருத்தங்கள்" மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வருகிறது. அதை ஏற்றுக்கொள்ளும் வகையில் அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள பல்வேறு அதிகாரப்பூர்வ அறிக்கைகளிலும் ஆவணங்களிலும், குறிப்பாக திட்டக்குழுவின் வேலை வாய்ப்பு நடவடிக்கைக் குழு அறிக்கையிலும் (2001), இரண்டாவது தேசிய தொழிலாளர் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலும் (2002) தொழிலாளர் சட்டங்கள் தளர்த்தப்பட வேண்டும் என்ற ஆலோசனை திரும்பத் திரும்ப கூறப்பட்டது. நடப்பில் உள்ள சட்டங்களை முறையாக பயன்படுத்துவது தொடர்பான ஒரு ஆழ்ந்த மதிப்பீட்டிற்கு பதிலாக, பல்வேறு பிரிவு தொழிலாளர்களின் மாறுபட்ட வேலை நிலைமைகளை விவாதத்திற்கு உட்படுத்துவதற்கு பதிலாக சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் எந்த அளவிற்கு பலரையும் உள்ளடக்கியதாக இருக்கிறது என்று ஆராய்வதற்கு பதிலாக தற்போது தொழிலாளர் சந்தையின் நீக்குப்போக்கான தன்மை, தொழிலாளர் படையின் திறமையை மேம்படுத்துவது ஆகியவற்றில்தான் பிரதானமாக கவனம் செலுத்தப்படுகிறது. ஆயினும், 1947ம் ஆண்டின் தொழில் தாவா சட்டத்திலோ அல்லது ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டமோ அல்லது சட்டத்திலோ அண்மைக் காலத்தில் கார்பரேட் வர்க்கத்தினரை பரவலாக திருப்திபடுத்தக்கூடிய வகையிலோ அல்லது தொழிலாளி வர்க்கத்தினரின் கோபத்திற்கு உள்ளாகக்கூடிய வகையிலோ மத்திய திருத்தங்கள் எதுவும் செய்யப்படவில்லை.

இந்தச் சூழலில் இந்திய அரசு, தொழிலாளர் நிலைமைகளில் தனக்கு இருந்த கட்டுப்பாட்டை விட்டுக்கொடுத்துவிட்டது என்று எப்படிச் சொல்வது? இந்த ஆய்வறிக்கை, மூலதனத்தின் அதிகாரம் எப்படி உறுதிப்படுத்தப்பட்டது என்பதை ஆராய்கிறது.

(1) முறைசார்ந்த தயாரிப்புத் துறை தொழில்களில் வேலை வாய்ப்புகள் அரிக்கப்படுவது அதிகரித்து வருவது குறித்து ஆராய்தல்; இந்த மாற்றங்கள் எப்படி தொழிலாளர்களின் பேரம்பேசும் திறனில் தாக்கம் செலுத்துகின்றன என்பதையும் அதற்காக ஒப்பந்தத் தொழிலாளர்கள் முறை அதிகரிக்கப்படுவதையும், கூலிப் பங்கீடுகள் குறைந்து வருவது பற்றியும் எந்த ஒரு சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் பலன்களும் தொழிலாளர்களுக்குக் கிடைப்பது குறைந்து வருவது பற்றியும் ஆராய்தல்

(2) அண்மைக் காலத்தில் குறிப்பிட்ட தொழிலாளர் சட்ட விதிகளில், குறிப்பான செயல்பாடுகள் தொடர்பாக அளிக்கப்பட்ட விதிவிலக்குகள் குறித்து இந்த அறிக்கை ஆராய்கிறது.

(3) மாநில அரசின்கீழ் வருகிற பேச்சுவார்த்தை ஏற்பாடுகளில் எப்படி தொழிலாளர்களுக்கு எதிரான

நிலைபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை இந்த அறிக்கை ஆராய்கிறது.

(4) இந்தியாவில் முறைசார் தொழில்கள் மற்றும் முறைசாரா தொழில்களுக்கான நடைமுறைக் கட்டமைப்பதில் இந்திய கார்ப்பரேட் நிறுவனங்களின் பங்கு என்ன என்பதை இந்த அறிக்கை ஆராய்கிறது.

### "முறை சார்" தயாரிப்புத் துறை

முறைசார் தயாரிப்புத் துறை அல்லது அமைப்பாகத் திரட்டப்பட்ட தயாரிப்புத் துறையின் தொழிலாளர்களுக்கு, முறைசாரா தொழிலாளர்களை விட பெருமளவுக்கு சட்டப்பூர்வ பாதுகாப்பு இருக்கிறது. இந்த தொழிலாளர்களுக்கு அவர்களது மருத்துவம், ஊதியம், பாதுகாப்பு, குறைந்தபட்ச கால அளவில் ஊதியம் வழங்கப்படுதல், பெண்களுக்கான பேறுகால விடுப்பு, போனஸ், தொழிலாளர் காப்புறுதி நிதி, பணிக்கொடை நிதி போன்றவை உள்ளன. 100 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்களில் பணிபுரியும் சுமார் 45 லட்சம் தொழிலாளர்களுக்கு தொழில் தாவா சட்டத்தின் 5-B விதியின் கீழ் வேலைப் பாதுகாப்பு இருக்கிறது. இந்த நிறுவனங்களில் ஒரு தொழிலாளியை பணிநீக்கம் செய்வதென்றால் கூட அரசின் அனுமதி பெற்றாக வேண்டும். தொழிலாளர்களுக்கான இந்த சட்டப் பாதுகாப்பு நீண்டகாலமாக (தொழிலதிபர்களின்) அதிருப்திக்கு உரியதாக இருந்து வருகிறது. இந்த சட்டவிதியின் காரணமாக யாரை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் வேலையில் நியமிக்கலாம், வேலையிலிருந்து நீக்கலாம் ("hire and fire") என்ற வசதி இல்லாமல் போகிறது என்பது அவர்களது வருத்தம். இந்த விதி காரணமாக இந்தியாவின் தயாரிப்புத் துறை நிறுவனங்கள் குறைந்த அளவில் தொழிலாளர்களை வைத்துக்கொள்ளும் நடைமுறையை பின்பற்றுகின்றன, 99 பேருக்கு மேல் தொழிலாளர்களை நியமித்துக்கொள்ள இந்த சட்ட விதி குறுக்கே நிற்கிறது, கடுமையான பணிப் பாதுகாப்பு விதிகளுக்கு அந்த நிறுவனங்கள் உட்பட வேண்டியிருக்கிறது என்ற கருத்து பரவலாக இருக்கிறது.

ஆனால், இப்படிப்பட்ட சட்டம் இருந்தபோதிலும் தொழில் நிறுவனங்கள் 1980ம் ஆண்டுகளிலும் 1990ம் ஆண்டுகளிலும் தேவைப்பட்டபோதெல்லாம் தொழிலாளர்களுக்கு தற்காலிக பணி நிறுத்தம் (லே ஆஃப்) அறிவிக்க முடிந்திருக்கிறது. 300 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ள நிறுவனங்கள் என்பதற்கு பதிலாக 100 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர் உள்ள நிறுவனங்களுக்கு இந்த சட்டவிதி பொருந்தும் வகையில் 1984ல் தொழில் தாவா சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகும் 1980களில் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பணி இழப்புகளை காட்டுகிறது: 1990ம் ஆண்டுகளில் தொடக்கத்தில், சீர்திருத்த நடவடிக்கைகள் தொடங்கிய பிறகு முதலீடுகளில் ஒரு ஆரம்பகட்ட வேகம் இருந்தது. அப்போது முறைசார் தொழில்களில் வேலைவாய்ப்புகள் அதிகரித்தன. ஆனால், 1997–98 முதல் 2003–04 வரையிலான காலகட்டத்தில் சுமார் 7,30,000 ஊழியர்கள் தங்கள் வேலைகளை இழந்துள்ளனர். இவர்களில் சுமார் 5,20,000 பேர் தொழிலாளர்கள்.

> பொதுத் துறை நிறுவனங்களில் தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்வதற்கான நிதி ஏற்பாட்டிற்காக என்றே ஏற்படுத்தப்பட்ட தேசிய புதுப்பிப்பு நிதி ஏற்பாடு, இதே போன்ற ஆட்குறைப்பு நடவடிக்கைகளை தனியார் துறையிலும் மேற்கொள்வதற்கு அரசாங்கம் மறைமுகமாக ஆதரவளிக்கிறது என்பதை சுட்டிக்காட்டுவது என்பதன் அறிகுறியாகவே இருந்தது. தொழிலாளர் சட்டங்கள் அப்படியே நீடித்தாலும் கூட நிறுவனங்களின் நிர்வாகங்கள் அந்தச் சட்டங்களின் செயலாக்கத்தை நீர்த்துப் போகச் செய்தன அல்லது அந்த சட்டங்கள் நிர்வாகங்களால் மீறப்படுவதை அரசாங்கம் கண்டும் காணாததுபோல் இருந்தது. ஆக நடைமுறையில் அது ஒரு மோசடியான சீர்திருத்தமாகவே இருக்கிறது என்கிறார் ஆய்வாளர் நாகராஜ்.

முதலாளிகள் – அரசு இடையேயான கூட்டால் தொழிலாளர் மீது தொடுக்கப்படும் தாக்குதலின் ஒரு வெளிப்படையான அடையாளம், முறைசாரா பணிகள் அதிகரித்திருப்பதாகும். அதையொட்டி, பொருள்கள் தயாரிப்புத் துறை எளிதில் பாதிப்புக்கு உள்ளாவது என்பதும் அதிகரித்திருக்கிறது. தனியார் தொழில்துறையினரைப் பொறுத்தவரையில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதல் – கட்டுப்பாடுகளை நீக்குதல் என்பதைச் சார்ந்த விவாதங்களை தொழிலாளர் சந்தை என்ற ஏற்பாட்டிற்குள்ளேயே வைத்துக்கொள்ள முயல்கிறது. தொழிலாளர் சந்தையோ இயல்பாகவே மேலும் மேலும் தற்காலிகத் தன்மை உள்ளதாகவே மாறுகிறது. முதலாளித்துவத்தின் அடங்காத லாபப் பசிக்குத் தீனி போடுவதற்காக வேலைத்தரங்கள் விடாப்பிடியாகக் குறைக்கப்படுகின்றன.

முறைசாரா வேலைகள் என்பதைப் பொறுத்தவரையில் பாரம்பரியமாக அணிதிரட்டப்பட்டவை என்பதாகக் காட்சியளிக்கும் துறைகளையும் தொழில்களையும் பொறுத்ததாக இருக்கிறது. அதே நேரத்தில் அந்த வேலைகளுக்கு எவ்விதமான சட்டப் பாதுகாப்போ சமூகப் பாதுகாப்போ கிடையாது. முறை சார்ந்த தொழில்களில் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளுக்குப் பிறகு உருவான வேலை வாய்ப்புகள், அடிப்படையில் முறைசாரா வேலைகளாகவே பெருமளவுக்கு இருந்து வந்துள்ளன

என்று தேசிய முறைசாரா தொழில்கள் ஆணையம் (என்.சி.இ.யு.எஸ்.) தனது அறிக்கையில் (2009) சுட்டிக்காட்டியுள்ளது.

1990ம் ஆண்டுகளின் முற்பகுதியில் தயாரிப்புத் துறையில் ஏற்பட்ட வேலைவாய்ப்பு அதிகரிப்பு என்பது பெரும்பாலும் நிரந்தரமற்ற பணியாளர்கள் என்ற அடிப்படையில்தான் நிகழ்ந்துள்ளது. 1990ம் ஆண்டுகளின் தொடக்க நிலையில், இந்திய தொழில்துறையைப் பொறுத்தவரையில், நிர்வாகப் பணியாளர்கள் தவிர்த்து, வேலை எடுக்கப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கை 1992–2000 காலகட்டத்தில் இரு மடங்காகியுள்ளது. முறைசார்ந்த தொழில் நிறுவனங்களில் உள்ள முறைசாரா தொழிலாளர்கள் பணி நிலைமைகள், ஆட்குறைப்பு, குறைந்தபட்ச ஊதியம் ஆகியவற்றை வரையறுக்கும் ஒழுங்குமுறையின் பாதுகாப்பிலிருந்து விலக்கி வைக்கப்படுகிறார்கள். அமைப்பு ரீதியான முறைசார்ந்த தொழில்களில் வேலைவாய்ப்பு அதிகரித்தது என்பது மிகப்பெறும் அளவிற்கு மேற்கூறிய வகையிலேயே நிகழ்ந்துள்ளது.

***மூலதனத்திற்கு சாதகமாக செயல்படுவதே தனது கடமை என்பதாக தன்னை மாற்றிக்கொண்டுவிட்ட இந்திய அரசு, இந்த "நீக்குப்போக்கான அணுகுமுறைக்கு" ஆதரவாகச் செயல்படுகிறது. தற்போதைய உழைப்புச் சந்தை கறார் தன்மையோடு இருப்பதால் இந்தியாவின் தொழில்துறை வளர்ச்சி பாதிக்கப்படுகிறது" என்று கூறப்படுவதை அரசு ஒப்புக் கொண்டுவிட்டதாகத் தெரிகிறது.***

1990ம் ஆண்டுகளின் பிற்பகுதி முதல் 2000வது ஆண்டுகளின் முற்பகுதி வரையில் ஏற்பட்டுள்ள வேலை இழப்பு என்பது நேரடியாக நியமிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குத்தான் நடந்துள்ளது. அதே நேரத்தில் இந்தக் காலகட்டத்தில் ஒப்பந்த முறை தொழிலாளர் நியமனம் என்பது அதிகரித்திருக்கிறது. 2003–04 முதல் முறைசார் தொழில்களில் முன் எப்போதையும்விட வேலைவாய்ப்புகள் அதிகரித்தன. ஆனால், அந்த வேலைகள் பெரும்பாலும் ஒப்பந்த முறையிலேயே அளிக்கப்பட்டுள்ளன. 2003–04 முதல் 2009–10 வரையிலான காலகட்டத்தில் ஒப்பந்த முறை தொழிலாளர் எண்ணிக்கை 12.4 சதவீதம் அதிகரித்தது. அதே காலகட்டத்தில் நேரடி தொழிலாளர் நியமனம் 5.1 சதவீதம் என்ற அளவிலேயே அதிகரித்தது. முறைசார்ந்த தயாரிப்புத் துறை தொழில்களில் மொத்த தொழிலாளர் எண்ணிக்கை இந்தக் காலகட்டத்தில் 7.1 சதவீதம் அதிகரித்தது. முறைசார்ந்த வேலைகளில் 1995–96ம் ஆண்டில் 10.5 சதவீதமாக இருந்த ஒப்பந்தத் தொழிலாளர் பங்களிப்பு, 2009–10ம் ஆண்டில் 25.6 சதவீதமாக அதிகரித்தது. அதே காலகட்டத்தில் நேரடிய நியமன தொழிலாளர் எண்ணிக்கை 68.3 சதவீதத்திலிருந்து 52.4 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துவிட்டது.

நிறுவனங்களில் நியமிக்கப்படும் நிரந்தர தொழிலாளர்களின் விகிதத்திற்கு ஏற்ப ஒப்பந்தத் தொழிலாளர்களை நியமிப்பது என்பதும் மாறுபடுகிறது. அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களை நியமிக்கும் நிறுவனங்களில் (தொழில் தாவா சட்டத்தின், அத்தியாயம் 5A, பொருந்தக்கூடிய வகையில் 50 தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்கள்) அதிகமான ஒப்பந்தத் தொழிலாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். 2001 முதல் 2010 வரையிலான காலகட்டத்தின் தொடக்கத்தில் இருந்ததைவிட அதன் இறுதிக் கட்டத்தில் இத்தொழில்களில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் நியமனம் மிக அதிகமாக இருந்திருப்பதைக் காணமுடிகிறது. 2009–10ம் ஆண்டில் 49 தொழிலாளர்கள் வரை இருக்கக்கூடிய தொழில் நிறுவனங்களில் நியமிக்கப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர் எண்ணிக்கையைவிட, 50 முதல் 99 தொழிலாளர்கள் வரை உள்ள தொழிற்சாலைகளில் இரு மடங்கு ஒப்பந்தத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

2000–01 ஆண்டில் தொடங்கிய பத்தாண்டு காலத்தில் முற்பகுதியில் கூட இந்த அளவுக்கு இருந்ததில்லை. 5,000 தொழிலாளர்கள் உள்ள தொழில் பிரிவுகளில் 2009–10ம் ஆண்டில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் எண்ணிக்கை கிட்டத்தட்ட 50 சதவீதமாக இருந்தது. தொழில் தாவா சட்டம் நடைமுறையில் இருந்தும், ஒப்பந்தத் தொழிலாளர் சட்டத்தை பொருட்படுத்தாமல், உற்பத்திக்கான நடைமுறைகளில் நீக்குப் போக்கான அணுகுமுறை இருக்க வேண்டும் என நிர்வாகங்கள் எதிர்பார்க்கின்றன என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது.

நேரடியாக நியமிக்கப்படும் தொழிலாளர்களுக்கு ஒப்பந்தத் தொழிலாளர்களைவிட அதிகமான ஊதியம் தரப்படுகிறது. கடந்த பல ஆண்டுகளில் ஒப்பந்தத் தொழிலாளர்களைவிட இரண்டு மடங்காக இருந்த நிரந்தர தொழிலாளர்களின் ஊதிய விகிதம் 2003–04க்குப் பிறகு 1.5 மடங்காக குறைந்துவிட்டது. முறைசார் தயாரிப்புத் துறை தொழில்களில், கண்காணிப்புப் பிரிவு பணியாளர்கள் மிக அதிகமான ஊதியம் உள்ளிட்ட ஆதாயங்களைப் பெறுகிறார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

தரமான வேலை என்பதைப் பொறுத்தவரையில், ஆண் தொழிலாளர்களைவிட பெண் தொழிலாளர்கள் மிக மோசமான நிலையிலேயே இருக்கிறார்கள். நேரடியாக நியமிக்கப்பட்ட பெண் தொழிலாளர்களின் ஊதியம் ஒப்பந்தத் தொழிலாளர்களின் ஊதியத்தைவிட குறைவாக இருக்கிறது.

தொழிலாளர்களின் உண்மை ஊதிய வளர்ச்சி விகிதம் 2000வது ஆண்டுகளில் எதிர்மறையாகவே இருந்து வந்திருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், நேரடியாக நியமிக்கப்பட்ட ஆண் தொழிலாளர்களுக்கான ஊதிய வளர்ச்சி விகிதம் எதிர்மறையாக இருந்ததேயாகும். பெண் தொழிலாளர்களின் ஊதிய வளர்ச்சி விகிதம் (ஒப்பந்தத் தொழிலாளர்களைவிட நேரடியாக நியமிக்கப்பட்ட பெண் தொழிலாளர்களின் ஊதியம் குறைவுதான் என்ற போதிலும் கூட) ஓரளவுக்கு ஆக்கப்பூர்வமாக இருந்திருக்கிறது. ஒப்பந்தத் தொழிலாளர்களின் ஊதிய வளர்ச்சி விகிதம் ஓரளவுக்கு ஆக்கப்பூர்வமாக இருந்திருக்கிறது. அதே நேரத்தில் நிர்வாகப் பணியாளர்களின் ஊதியங்கள் 2000வது ஆண்டுகளில் சீரான வளர்ச்சியை சந்தித்துள்ளன.

ஒப்பந்தத் தொழிலாளர் நியமனம் அதிக அளவுக்கு நடந்துள்ள இந்தப் பின்னணியில், கடந்த ஆண்டுகளில் ஒட்டுமொத்த மதிப்பு அடிப்படையில், தொழிலாளர்களின் ஊதியப் பங்கு என்பது குறைந்துவந்துள்ளது. ஆனால், இதே ஆண்டுகளில் தொழிலாளர் உற்பத்தித் திறன் அதிகரித்திருக்கிறது. ஆனால், அந்த உற்பத்தித் திறனின் ஆதாயங்கள் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்குத்தான் போய் சேர்ந்துள்ளன.

ஒப்பந்தத் தொழிலாளர் முறை அதிகரிப்பது வேலைவாய்ப்புகளின் தரத்தையும் கடுமையாகக் கீழிறக்கியிருக்கிறது. அதன் விளைவாக தொழிலாளர் சந்தை என்பது முதலாளிகளுக்கு சாதகமாக மாறியிருக்கிறது. முறை சார் தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்கள் (நிரந்தர தொழிலாளர்களாக நியமிக்கப்படுபவர்கள் கூட) கடுமையான வேலை நிபந்தனைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இது அவர்களது பேரம் பேசும் வலிமையை வெகுவாக பாதிக்கிறது. பெரும்பாலும் அவர்கள் குறுகியகால ஒப்பந்த அடிப்படையிலேயே வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு மிகக் குறைவான சமூகப் பாதுகாப்புதான் வழங்கப்படுகிறது அல்லது கொஞ்சம் கூட சமூகப் பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை என்ற நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. முறைசார் தொழிலாளர் சந்தையில் இந்த உறுதியற்ற நிலைமை அதிகரித்து வருகிறது. உருவாக்கப்படும் வேலைகளின் தன்மை உறுதியற்றதாக இருப்பது ஆழ்ந்த கவலைக்குரியதாகும். ஏனெனில், தொழிலாளர்களுக்கான தேவை குறைவாக இருக்கும்போது அல்லது தொழில் தாவாக்கள் ஏற்படுகிறபோது, பலவீனமான ஒப்பந்தங்களின் அடிப்படையில்தான் அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்ற சூழலில், அவர்களை மிக எளிதாக வெளியே அனுப்ப முடிகிறது.

2011 – 12ம் ஆண்டில் முறைசார்ந்த தயாரிப்புத் துறை தொழில்களில் நியமிக்கப்பட்டிருந்த மொத்தத் தொழிலாளர்களில் 77.5 சதவீதத்தினர் எவ்வித எழுத்துப்பூர்வ வேலை ஒப்பந்தமும் இல்லாமல் இருந்தனர். 2.43 சதவீதத்தினருக்கு ஓராண்டுக்கும் குறைவான வேலை ஒப்பந்தம்தான் இருந்தது. மொத்த தொழிலாளர்களில் 17.41 சதவீதத்தினருக்கு மட்டுமே மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் இருந்தது. இதைவிடவும் கவலையளிக்கிற தகவல் என்னவென்றால், முறைசார் தயாரிப்புத் தொழில்களில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் எவ்வித எழுத்துப்பூர்வ வேலை ஒப்பந்தமும் இல்லாமல் இருந்தார்கள். இதில் மேலும், உறுதியற்ற நிலையில் இருப்பது பெண் தொழிலாளர்கள்தான். பெண் தொழிலாளர்களில் 91 சதவீதத்தினருக்கு எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் எதுவும் கிடையாது. 6.3 சதவீதத்தினர் மட்டுமே 2011–12ல் மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தைச் செய்துகொண்டிருந்தனர். பெண் தொழிலாளர்களின் ஒப்பந்த நிலைமை கவலையளிக்கத்தக்க அளவிற்கு சரிவடைந்துள்ளது. 2004–05, 2011–12 ஆண்டுகளில் எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் எதுவும் இல்லாத பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 12 சதவீதம் அதிகரித்துள்ளது.

வேலையின் தரம் குறித்த மற்றொரு முக்கிய அளவீடு தொழிலாளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்பு தரப்படுவதாகும். ஊதியத்துடன் கூடிய விடுப்பு என்பது பல்வேறு வடிவங்களில் இருக்கக்கூடும். மிகவும் அதிகமாக நடைமுறையில் இருப்பது தொழிலாளர்கள், வழக்கமான வேலை நாளில் தரப்படுகிற அதே ஊதியம் அவர்களுக்கு, அந்த விடுமுறை நாட்களிலும் தரப்பட வேண்டும். ஊதியத்துடன் கூடிய விடுப்புக்கு தகுதி பெறுவது என்பது தொழிலாளர்களின் வேலை உத்தரவாதமாக இருக்கிறது என்பதையும் திடீர் மாற்றங்களுக்கு உட்படாமல் பாதுகாப்பாக இருக்கிறது என்பதையும் உறுதிப்படுத்துவதாக இருக்கிறது. சம்பந்தப்பட்ட தொழிலாளி ஒரு முறைசார்ந்த பொருளாதாரத்தோடு வேலையில் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதற்கும் அவரது வேலை ஒப்பந்தம் என்பது சட்டப்பூர்வ குறைதீர்ப்பு ஏற்பாடுகளின் பின்புலத்தோடு இருக்கிறது என்பதற்கும் இது ஒரு நல்ல அறிகுறியாகும். ஊதியத்துடன் கூடிய விடுமுறை என்பது பெருமளவிற்கு வேலை உத்தரவாதத்தை அளிப்பதோடு நிற்பதில்லை.

சம்பந்தப்பட்ட தொழிலாளி அல்லது அவரைச் சார்ந்திருப்பவருக்கு உடல்நலக்குறை ஏற்படுகிறபோது இது ஒரு முக்கியமான பங்களிப்பைச் செய்கிறது. தொடர்ச்சியான வருவாய் அந்தத் தொழிலாளியின் குடும்பத்திற்குக் கிடைக்கச் செய்வதில் இது முக்கிய பங்காற்றவும் செய்கிறது. நோயுற்ற காலத்திற்கான ஊதியத்துடன் கூடிய விடுப்பு இல்லாதபோது, தொழிலாளர்கள் தங்களது அல்லது தங்களது குடும்பத்தின் உடல்நலத்தைப் பாதுகாப்பது அல்லது தங்களது வேலையையும் வருமானத்தையும் இழப்பது என்கிற நிலைமைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

முறைசார் தொழிலாளர்களில் 42.7 சதவீதத்தினருக்கு மட்டுமே ஊதியத்துடன் கூடிய விடுப்புகள் கிடைக்கின்றன. இந்த நிலைமையும் கூட கடந்த 6 ஆண்டுகளில் சரிவடைந்திருக்கிறது. பெண் தொழிலாளருக்கு அளிக்கப்படும் சட்டப்பூர்வ சலுகைகளோ ஆண் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுவதைவிட மிகக் குறைவாகும்.

ஒருவரது செயல்பாடுகளில் தொழிற்சங்கங்கள் அல்லது கூட்டமைப்புகளின் பங்களிப்பு என்பது, அவரது வேலைத் தரத்தையும் முன்னேற்றுகிறது என்று பொதுவாக கருதப்படுகிறது. தனிப்பட்ட தொழிலாளிக்கு தன்னுடைய நிர்வாகத்துடன் பேச்சு நடத்துவதற்கான பேரம் பேசும் வலிமை இருப்பதில்லை. பிரச்சனைகள் ஏற்படுகிறபோது, தீர்வுகாண்பதற்காக நிர்வாகத்தை அல்லது உரிமையாளரை அணுகக்கூடிய ஒரே திட்டவட்டமான நடவடிக்கையாக இருப்பது பெரும் எண்ணிக்கையிலான கூட்டு நடவடிக்கைதான் – அதாவது தொழிற்சங்க நடவடிக்கைதான். தொழிற்சங்கங்களால் ஏற்படும் மற்றொரு முக்கியமான பலன், வேலைத் தலத்தில் நிலவக்கூடிய பாகுபாடுகளை தொழிற்சங்கங்கள் வெகுவாகக் குறைக்கின்றன.

பல்வேறு வகையான அதிர்ச்சிகள், உத்தரவாதமற்ற வருமான நிலைமைகள் போன்றவற்றிலிருந்து தொழிலாளர்களுக்கு போதுமான பாதுகாப்பு கிடைப்பதையும் தொழிற்சங்கங்கள் உறுதிப் படுத்துகின்றன. அதற்காக தொழிலாளர் நலன் சார்ந்த சேவைகளில் நிர்வாகங்கள் முதலீடு செய்வதற்கு சங்கங்கள் வலியுறுத்துகின்றன. தொழிலாளர்களுக்கு பணி ஓய்வுக்கால நன்மைகள் கிடைப்பதையும் சங்கங்கள் உறுதிப்படுத்துகின்றன.

முறைசார் தொழில்களில் மூன்றில் ஒரு பங்கு தொழிலாளர்கள் மட்டுமே தங்களது நிறுவனங்கள் சார்ந்த ஏதாவது ஒரு தொழிற்சங்கத்துடன் தொடர்பு கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள். 2004–05ம் ஆண்டில் மொத்தத் தொழிலாளர்களில் 36.2 சதவீதத்தினர் தங்களது செயல்பாடுகளில் ஏதேனும் ஒரு தொழிற்சங்கம் அல்லது அமைப்புபற்றி தெரிந்து வைத்திருந்தார்கள். 2011–12ல் இது 31.5 சதவீதமாகக் குறைந்துவிட்டது.

தொடர்ச்சியான தொழிலாளர்களிடையே கூட, 2011–12ம் ஆண்டு வாக்கில் 34.5 சதவீதத்தினர் மட்டுமே தங்களது பணித்தலங்களில் தொழிற்சங்க நடவடிக்கைகள் குறித்து அறிந்து வைத்திருந்தார்கள். மேலும், எந்த ஒரு செயல்பாட்டிலும் தொழிற்சங்கம் அமைப்பின் ஒட்டுமொத்த இடம் குறைந்திருப்பதோடு, சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கையும் குறைந்திருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தங்களது செயல்பாட்டில் தொழிற்சங்கம் அல்லது அமைப்பின் பங்களிப்பு இருப்பதை ஒப்புக்கொண்ட தொழிலாளர்களிடையே, 2004–05ம் ஆண்டில் 76 சதவீதத்தினர் மட்டுமே தொழிற்சங்கம் அல்லது அமைப்பில் உறுப்பினர்களாக இருந்தனர்.

2011–12ம் ஆண்டிலிருந்து 66.3 சதவீதமாகக் குறைந்துவிட்டது. ஆண், பெண் இருதரப்புத் தொழிலாளர்களிடையேயும் இதே நிலைமைதான் இருந்து வந்திருக்கிறது. கடந்த 6 ஆண்டுகளில் மொத்த தொழிலாளர் விகிதம் ஆண்களில் 8.4, பெண்களில் 22.2 சதவீதப் புள்ளிகளாக சரிவடைந்திருக்கிறது. 2004–05ல் ஒரு தொழிற்சங்கம் அல்லது அமைப்பில் உறுப்பினர்களாக இருந்த முறைசார் தொழிலாளர்களின் விகிதம் 79.9 சதவீதமாக இருந்தது. இது 2011–12ல் 69 சதவீதமாக குறைந்துவிட்டது. இந்தப் பின்னணியில் (சங்க நடவடிக்கைகளுடன் தொடர்பு உள்ள மூன்றில் ஒரு பங்கு தொழிலாளர்களுக்குள்) தொடர்ச்சியான வேலை நிலைமை என்பதும் சரிவடைந்துள்ளது.

## தொழிலாளர் சட்டம் – செயலாக்கமும், பலவீனப்படுத்தலும்

தொழில் நிறுவனங்களில் நிர்வாகங்கள் தொழில் தாவா சட்டம் குறித்து தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். தங்கள் விருப்பம் போல் தொழிலாளர்களை நியமிக்கவும் வெளியேற்றவும் இந்த சட்டம் முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பதே அவர்களது அதிருப்தி. எனினும், ஏற்கெனவே பார்த்தது போல (இந்த சட்டம் நடைமுறையில் இருக்கிறபோதிலும் கூட) முதலாளிகள் தங்கள் விருப்பம் போல, தங்களுக்குத் தேவை என்று கருதுகிறபோதெல்லாம் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கி வந்திருக்கிறார்கள். 1982ம் ஆண்டில் செய்யப்பட்ட ஒரு சட்டத்திருத்தத்தின் மூலம் தொழில் தாவா சட்டத்திற்கு, 300 தொழிலாளர்கள் வேலை செய்கிற நிறுவனங்கள்தான் வரும் என்பது திருத்தப்பட்டு 100 தொழிலாளர்கள் இருக்கிற நிறுவனங்களும் இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும் என மாற்றப்பட்டது. இது தொழிலாளர்களுக்கு சாதகமான ஒரு சட்டத்திருத்தமாகும்.

ஆனால், சட்டத்தில் செய்யப்பட்ட சில மாற்றங்கள் நடைமுறையில் இந்த சட்டத்தை நீக்குப் போக்கானதாக மாறிவிட்டது.

50 தொழிலாளிகளுக்கு மேல் வேலை செய்யும் தொழிற்சாலைகளில், தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்வதென்றால் சட்டத்தின் V-A பிரிவின் கீழ் முன்கூட்டியே நோட்டீஸ் தர வேண்டும். இழப்பீடு தொகையும் தர வேண்டும். அத்துடன் V-B பிரிவின் கீழ் வரக்கூடிய தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் அரசு அனுமதியையும் பெற வேண்டும். 1982/84ல் தொழில்தாவா சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. சட்டத்தின் பிரிவு 2(OO)ல் ஆட்குறைப்பு என்பதற்கு தரப்பட்டுள்ள விளக்கம் மாற்றப்பட்டது. ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாத நிலையில் அல்லது ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாட்டின் கீழ் ஒருவர் வேலையிலிருந்து விலக்கப்படுவாரானால் அது ஆட்குறைப்பு என்று கருதப்படமாட்டாது. இந்தத் திருத்தம் அதற்கு முன், தொழிலாளர் சந்தையில் இருந்து வந்த தளர்வான நிலையை மேலும் மோசமாக்கியது.

ஆட்குறைப்பு என்பதற்கான விளக்கத்தில் செய்யப்பட்ட இந்த மாற்றத்தைத் தொடர்ந்து பல தொழிற்சாலைகளில் “குறிப்பிட்ட காலத்திற்கான தொழிலாளர்” நியமிக்கப்படுகிற நடைமுறை அதிகரித்தது. இந்த ஏற்பாட்டின் கீழ் ஆட்குறைப்பு என்பது மிகவும் எளிதாகிவிடுகிறது. 1946ம் ஆண்டின் தொழில் நிறுவன வேலை நியமனச் சட்டத்தில் (நிலை ஆணைகள்) 2003 டிசம்பரில் ஒரு திருத்தம் செய்யப்பட்டது. அதில் “குறிப்பிட்ட காலத்திற்கான தொழிலாளர்” என்ற சொற்றொடர் சேர்க்கப்பட்டது. இதன் மூலம் நிர்வாகிகள் குறிப்பிட்ட கால அளவிற்கு என தொழிலாளர்களை நியமிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். குறிப்பிட்ட காலத்திற்கான தொழிலாளர்கள் சட்ட நுணுக்கப்படி பார்த்தால் ஒப்பந்தத் தொழிலாளர்களாகமாட்டார்கள். ஆனால், அவர்களும் ஒரு குறிப்பிட்ட கால அடிப்படையில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள்.

உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு ஏற்படக்கூடிய சந்தைத் தேவைகளின் அடிப்படையில் குறுகிய காலத்திற்கு தொழிலாளர்கள் தேவைப்படும் நிறுவனங்களுக்கு இந்தச் சட்டத்திருத்தம் ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று கூறப்பட்டது. ஆயினும், குறிப்பிட்ட காலத்திற்கு தொழிலாளர்களை நியமித்துக்கொள்ளலாம் என்று நிர்வாகிகளுக்குத் தரப்படுகிற அனுமதியின் காரணமாக, சமூகப் பாதுகாப்பு உள்ளிட்டவற்றிற்கு தொழிலாளர்கள் பெற்றிருந்த உரிமைகள் இனி இல்லாமல் போகின்றன.

மேலும், தொழில் தாவா சட்டத்தின் அத்தியாயம் V-B, நிறுவனம் இடமாற்றம் செய்யப்படும்போது, தொழிலாளர்களது பணிநீக்கப் பிரச்சனையில் பொருந்துவதில்லை. மகாராஷ்டிரா மாநிலத்தில், தொழில் தாவா சட்டம் நடைமுறையில் இருந்தபோதிலும் கூட ஒரு நிறுவனத்தின், உடைமைப் பதிவு வேறொரு நிறுவனத்திற்கு மாற்றப்பட்டபோது சட்டத்தின் இந்த குறைபாடு பயன்டுத்திக்கொள்ளப்பட்டு தொழிலாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள். இந்தச் சட்டத்தில் தொழிலாளிகளுக்கு பாதகமாக மற்றொரு விதி இருக்கிறது. ஒரு தொழிலாளி தொடர்ச்சியாக 240 நாட்கள் வேலையில் இருந்திருந்தால்தான் அவருக்கு, ஆட்குறைப்பு நடவடிக்கைக்கான பலன்கள் கிடைக்கும் என்று அந்த விதி கூறுகிறது. நிர்வாகங்கள் அடிக்கடி ’கதவடைப்பு’ செய்வதன் மூலம் இந்த விதியை மீறுகின்றன. ’கதவடைப்பு’ என்ற விளக்கமும் 1982/84ல் திருத்தப்பட்டது. அதன்மூலம் ஏற்கெனவே உள்ள பணி நிறுத்தம், அல்லது ஏற்கெனவே எத்தனை பேர் நியமிக்கப்பட்டிருந்தாலும் அவர்களைத் தொடர்ந்து நியமிப்பதற்கு நிர்வாகம் மறுப்பது ஆகிய விளக்கங்களோடு, வேலை நடைபெறும் இடத்தை தற்காலிகமாக மூடுவது என்பதும் சேர்க்கப்பட்டது. தொழில் தாவா சட்டத்தை நீர்த்துப்போகச் செய்யும் இத்தகைய திருத்தங்களால், தொழிலாளர்களின் வேலை பாதுகாப்பாக இருந்த விதிகள் முன்பிருந்ததைவிட பல மடங்கு தளர்த்தப்பட்டுவிட்டன. தொழிலாளர்கள் அரசமைப்பு சாசனத்தின்படி மத்திய, மாநில அரசுகளுக்கான பொதுப் பட்டியலில் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, மாநில அரசுகள் தற்போதுள்ள இதற்கான மத்திய சட்டங்களை, குடியரசுத் தலைவரின் ஒப்புதலோடு மாற்ற முடியும். இதைப் பயன்படுத்திக்கொண்டு பல மாநில அரசுகள், பல்வேறு வழிகளில், மத்திய சட்டங்களை மாற்றாமலே, தொழிலாளர் சந்தையை தளர்த்தியுள்ளன. உதாரணமாக உத்தரபிரதேச மாநில அரசு தொழில்தாவா சட்டத்தின் V-B பிரிவில் அத்தியாயத்தில் 1983ம் ஆண்டில் ஒரு திருத்தத்தைச் செய்தது. அதன்மூலம் இந்த சட்டம் 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை பணியில் ஈடுபடுத்தியுள்ள நிறுவனங்களுக்கு மட்டும்தான் பொருந்தும் என்று மாற்றப்பட்டது.

2006ம் ஆண்டில் ஆந்திர மாநில அரசு இந்தச் சட்டம் சிறப்பு பொருளாதார மண்டலங்களில் உள்ள நிறுவனங்களுக்கும் ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களுக்கும் பொருந்தாது என்று ஒரு சட்டத்திருத்தம் கொண்டு வந்தது. அதேபோல் குஜராத் மாநில அரசு இந்தச் சட்டத்தில் V-D என்ற அத்தியாயத்தை சேர்த்தது. அதன்மூலம் சட்டத்தின் V-A, V-B அத்தியாயங்களில் உள்ள தொழிலாளர் சட்டங்களிலிருந்து சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது. தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரா, கோவா போன்ற வேறு பல மாநிலங்களும் சிறப்புப் பொருளாதார மண்டல சட்டத்தில் திருத்தங்கள் செய்துள்ளன.

1970ம் ஆண்டின் ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம் நடைமுறையில் எந்த வகையிலும் பயனளிப்பதாகத் தெரியவில்லை. இந்தியாவின் தயாரிப்புத் துறை தொழில்களில் 1995–96ம் ஆண்டில் 10.5 சதவீதமாக இருந்த ஒப்பந்தத் தொழிலாளர் விகிதம், 2009–10ம் ஆண்டில் 25.5 சதவீதமாக அதிகரித்துவிட்டது. நிரந்தரத் தன்மை வாய்ந்த வேலைகளில் ஒப்பந்தத் தொழிலாளர்களை நியமிக்கக்கூடாது என்று சட்டம் சொல்கிறது. ஆனால், பீகார், ஆந்திரா போன்ற சில மாநிலங்களில், இந்த சட்டவிதி மீறப்பட்டு, அமைப்பு சார்ந்த தயாரிப்புத் துறை தொழில் நிறுவனங்களில் 40 சதவீதத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஒப்பந்ததாரர்கள் (கான்ட்டிராக்டர்கள்) மூலமே வேலைக்கு எடுக்கப்படுகிறார்கள். ஹரியானா, ஒடிஷா, உத்தரப்பிரதேசம், உத்தரகண்ட் ஆகிய மாநிலங்களிலும் 2009–10ம் ஆண்டு வாக்கில் அதிகமான ஒப்பந்தத் தொழிலாளர்கள் (30 சதவீதத்திற்கும் மேல்) நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மத்திய சட்டத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்றாலும் சில மாநிலங்களில் அதில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக, ஆந்திர மாநிலத்தில் 2003ம் ஆண்டில் சட்டத்தின் பயன்பாட்டையும் எல்லையையும் சுருக்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்டது. 20 தொழிலாளர்களுக்கு மேல் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கும் நிறுவனங்களுக்கும் ஒப்பந்ததாரர்களுக்கும் மட்டுமே பொருந்தும் வகையில் ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம் திருத்தப்பட்டது. ஒப்பந்தத் தொழிலாளர்கள் தொடர்ச்சியாக 12 மாதங்கள் வேலை செய்திருக்க வேண்டும் என்றும் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. மேலும், மையமான பணிகள் மையமற்ற பணிகள் என்று சட்டத்தில் ஒரு பிரிவு சேர்க்கப்பட்டது. அதன் மூலம் ஏராளமான பணிகள் முக்கியமற்ற பணிகளாக வரையறுக்கப்பட்டன. மையமான பணிகளாக இருக்கக்கூடிய பல வேலைகளும் கூட மையமற்ற பணிகளாக மாற்றப்பட்டன. இதன் மூலம் தாராளமான முறையில் ஒப்பந்தத் தொழிலாளர்களை நியமிப்பதற்கு வழி செய்யப்பட்டது. சில நிலைமைகளில், மையமான பணிகளில் கூட ஒப்பந்தத் தொழிலாளர்களை நியமிக்க அனுமதிக்கப் படுகிறது. மிக முக்கியமாக, இந்த சட்டவிதிகளை மீறினால் ரூ.100 முதல் ரூ.200 வரை மட்டுமே அபராதம் விதிக்கப்படுகிறது. இதனால், ஆலைகளில் சோதனைகள் நடத்தப்பட்டாலும் கூட இந்த அபராதத் தொகையை செலுத்துவதற்கு நிர்வாகங்கள் தயங்குவதில்லை.

ஒரு தொழிற்சங்கத்தை அமைப்பதற்கு தொழிலாளர்களுக்கு உள்ள உரிமையைப் பொறுத்தவரையில் தொழிற்சங்கங்கள் மற்றும் நிறுவனங்களின் சில பல்வேறு தனித்தன்மைகள் குறிப்பிடத்தக்கவையாகும். அவற்றில் சில வருமாறு: (a) பல்வேறு சங்கங்கள் இருப்பது (b) அரசியல் கட்சிகளுக்கும் தேசிய அளவிலான பல்வேறு தொழிற்சங்க கூட்டமைப்புகளுக்கும் உள்ள நெருக்கமான ஆனால், தவிர்ப்பது நல்லது என்று சொல்லத்தக்க தொடர்பு, (c) தொழில் தாவாக்கள் பெரும்பாலும் இழுத்தடிக்கப் படுவதற்குக் காரணமாக சங்கங்களுக்கிடையே நிலவும் போட்டி, (d) நிர்வாக வர்க்கத்தினருக்கு உள்ள தொழிற்சங்க விரோத மனப்பான்மை; இது திட்டமிட்ட முறையில் குறிப்பிட்டப் பிரிவினருக்கு ஆதரவாக இருப்பது, சங்கங்களை முடக்குவது என்ற வகையிலும், நிறுவனத்தை தொழிற்சங்கமற்றதாக வைத்திருப்பதற்கான முயற்சியாகவும் கூட வெளிப்படுகிறது.

தொழிற்சங்க சட்டத்தில் 2009ம் ஆண்டில் மத்திய அரசால் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதன்மூலம் சட்டத்தில் 2 முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டன. திருத்தத்திற்கு முன்பாக சங்கத்தின் நிர்வாகிகளில் சரிபாதிக்குக் குறையாதவர்கள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலையில் வேலையில் இருக்க வேண்டும். இந்த விதி இப்போது முறைசாரா தொழில்களுக்கு மட்டும் நீடிக்கிறது. முறைசார் தொழில்களைப் பொறுத்தவரையில் மூன்றில் ஒரு பங்குக்கு அல்லது 5ல் ஒரு பங்குக்கு குறையாத வகையில் (இந்த இரண்டில் எது குறைவோ அது), மற்ற அனைத்து சங்க நிர்வாகிகளும் வெளியாட்களாக இருக்கலாம். மற்றொரு முக்கிய திருத்தம், பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தில் 10 சதவீதம் அல்லது 100 தொழிலாளர்களுக்குக் குறைவாக அல்லாத அளவில், குறைந்தது 7 பேர் என்பதற்கு உட்பட்டு ஒரு நிறுவனம் அல்லது தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

***கடந்த பல ஆண்டுகளில் நிர்வாகங்கள் கதவடைப்புச் செய்ததால் ஏற்பட்ட மனித நாட்கள் இழப்பு என்பது வேலை நிறுத்தங்களால் ஏற்பட்ட இழப்பைவிட மிகவும் அதிகமாகும் என்று ஆய்வாளர் நாகராஜ்(2007) சுட்டிக்காட்டுகிறார்.***

தொழிற்சங்கங்களின் பேரம் பேசும் வலிமை குறைந்திருக்கிறது என்பதற்கு, நிர்வாகங்கள் செய்த கதவடைப்புகளோடு ஒப்பிடுகையில் தொழிலாளர் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை கூர்மையாக சரிவடைந்திருப்பது சான்றாக இருக்கிறது. வேலை நிறுத்த நடவடிக்கை என்பது பொதுவாக தொழிற்சங்க இயக்கத்தின் வலிமையையும் கூட்டு பேர பலத்தையும்

சுட்டிக்காட்டுகிற ஒரு அளவுகோலாகப் பார்க்கப்படுகிறது. கடந்த பல ஆண்டுகளில் நிர்வாகங்கள் கதவடைப்புச் செய்ததால் ஏற்பட்ட மனித நாட்கள் இழப்பு என்பது வேலை நிறுத்தங்களால் ஏற்பட்ட இழப்பைவிட மிகவும் அதிகமாகும் என்று ஆய்வாளர் நாகராஜ்(2007) சுட்டிக்காட்டுகிறார். 1980களிலிருந்தே இந்தப் போக்கு நிலவி வருகிறது. இதிலிருந்து, தொழில் உறவுகளில் தொழிற்சங்கங்களின் மேல் நிறுவனங்களின் நிர்வாகங்கள்தான் ஆளுமை செலுத்துகின்றன என்பது தெளிவாகிறது. முதலாளிகள் அல்லது நிர்வாகங்கள் தொழிற்சங்கங்களோடு நடத்துகிற பேச்சுவார்த்தைகள் தோல்வியடைகிற போது தற்காலிகமாக தங்களது தொழிற்சாலைகளை மூடுவதே கதவடைப்பு (லாக் அவுட்).

**ஒரு தொழிலாளி சட்டவிரோதமான முறையில் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் அல்லது விடுவிக்கப்பட்டிருக்கிறார் என்று நிரூபிக்கப்பட்டால்கூட அவரை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைவிட அவருக்கு இழப்பீடு தர வேண்டும் என்பதற்கே நீதிமன்றங்கள் முக்கியத்துவம் தருகின்றன.**

தொழிலாளர்கள் மீது முதலாளிகள் தொடுக்கிற தாக்குதலின் இன்னொரு வடிவம்தான் கதவடைப்பு. 2007ம் ஆண்டைத் தவிர்த்து மற்ற ஆண்டுகளில், வேலை நிறுத்தங்களோடு ஒப்பிடுகையில் நிர்வாகங்கள் செய்கிற கதவடைப்புகளால் ஏற்பட்ட மனித நாட்கள் இழப்பு ஒவ்வொரு ஆண்டும் அதிகமாக இருந்து வந்திருக்கின்றன. இந்தப் பத்தாண்டு காலத்தில் வேலை நிறுத்தங்களால் ஏற்பட்ட மொத்த மனித நாட்கள் இழப்பு 84.05 மில்லியன் (8 கோடியே 40 லட்சத்து 50 ஆயிரம்). இதே காலகட்டத்தில் நிர்வாகங்களின் கதவடைப்புகளால் ஏற்பட்ட மொத்த மனித நாட்கள் இழப்பு 170 மில்லியன் (17 கோடி). இது தற்போதைய உலகமயமாக்கல் காலகட்டத்தில் சிறந்த முறையில் மனித வளம் நிர்வகிக்கப்படுவதாலும், திறமை சார்ந்த பணிக்கலாச்சாரத்தாலும் ஏற்பட்டுள்ள போக்கு என்று இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் மன்றம் (FICCI) போன்ற தொழில் நிறுவனங்களுடைய அமைப்புகள் கூறிக்கொள்கின்றன. ஆனால், தொழில் நிறுவனங்களில் தற்போது குறைதீர்ப்பு ஏற்பாடுகளும், மறு ஆய்வு ஏற்பாடுகளும் இல்லை, அதனால்தான் போராட்டங்கள், குறிப்பாக வேலை நிறுத்தங்கள் குறைந்துள்ளன என்று சிஐடியு போன்ற தொழிற்சங்கங்கள் கூறுகின்றன. இந்தப் போக்கின் காரணமாக தொழிலாளர்கள் வேலை இழக்கக்கூடிய அபாயம் அதிகமாகியுள்ளது என்றும் தொழிற்சங்கங்கள் கூறுகின்றன.

இதனிடையே தொழிற்சங்கங்கள் பலவீனப்பட்டுள்ளன. ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப் போல தொழிற்சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை சுருங்கியுள்ளது. புதிய துறைகளில் கூடுதல் உறுப்பினர்களை சேர்ப்பதற்கான முயற்சிகளும் ஒரு வரம்புக்கு உட்பட்டதாகவே நடக்கின்றன. தொழிலாளர்களின் நலன்களை பாதுகாப்பதிலும் முன்னேற்றுவதிலும் தொழிற்சங்கங்களுக்கு உள்ள செயல்திறன் தற்போது பயனற்றதாகியுள்ளது. முதலாளிகளின் பேரம் பேசும் வலிமை அதிகரித்திருக்கிறது. அதை அவர்கள் உறுதிப்படுத்திக்கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். இது, வேலை நிறுத்தங்களால், நிறுவனங்கள் மூடப்படுவதாலும் ஏற்பட்டுள்ள மனித நாட்கள் இழப்பைவிட நிர்வாகங்களின் கதவடைப்புகளால் அதிகமான மனித நாட்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதிலிருந்து தெளிவாகப்புரிகிறது. கடந்த ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மற்றொரு முக்கிய மாற்றம், இந்தக் காலகட்டத்தில் தொழிற்சாலை சட்டத்தின் கீழ் தொழிற்சாலைகளை ஆய்வுக்கு உட்படுத்துவது என்பதில் அரசின் அணுகுமுறையில் ஏற்பட்டுள்ள மாற்றமாகும். இந்தச் சட்டத்தின் கீழ் தொழிலாளர் உரிமைகளை செயல்படுத்துவது தொடர்பான அணுகுமுறைகள்தான் பெரிய அளவிற்கு மாற்றம் நிகழ்ந்துள்ளது. “ஆய்வு ராஜ்ஜியம்” (இன்ஸ்பெக்ஷன் ராஜ்) நடப்பதாக கார்ப்பரேட் நிறுவனங்கள் புகார் கூறுகின்றன. ஆனால், தொழிற்சாலைகளில் 63 சதவீதமாக இருந்த தொழிற்சாலை ஆய்வுகள் அண்மைக் காலத்தில் வெறும் 17.8 சதவீதமாக குறைந்துவிட்டன.

தொழிற்சாலைகளை ஆய்வு செய்வதற்கான பணியாளர்கள் எண்ணிக்கையும், தேவைப்படுவதைவிட மிகக் குறைவாகவே இருக்கிறது என்று தொழிலாளர்துறை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. 2001ம் ஆண்டில் இந்த நிலைமை மிக மோசமாக இருந்த மாநிலம் பஞ்சாப். அங்கே 996 தொழிற்சாலைகளுக்கு ஒரு ஆய்வாளர்தான் பொறுப்பாக இருந்தார். ஆந்திரா, ராஜஸ்தான், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் 200 தொழிற்சாலைகளுக்கு ஒரு ஆய்வாளர் இருந்திருக்கிறார். தில்லி, மத்திய பிரதேசம், ஒடிஷா ஆகிய மாநிலங்களில் 100 தொழிற்சாலைகளுக்கு ஒரு ஆய்வாளர் விகிதம் இருந்திருக்கிறார். புள்ளி விவரங்கள் கிடைத்துள்ள மாநிலங்கள் இவை. இத்தகைய நிலைமையில் ஒரு ஆய்வாளரால் ஆண்டுக்கு ஒரு தொழிற்சாலையை ஆய்வு செய்வதற்குக் கூட முழுமையான ஏற்பாடுகளை செய்ய இயலாது. ஒவ்வொரு ஆண்டும் தொழிற்சாலை ஆய்வுகளின் எண்ணிக்கை சரிவடைந்து வரும் நிலையில், பல்வேறு மாநிலங்களில் தொடங்கப்பட்ட “சுய சான்றுத் திட்டம்” (எஸ்.சி.எஸ்.), பஞ்சாப், குஜராத் போன்று சிறப்பாக செயல்படவில்லை என்பதில் வியப்பில்லை. இந்தத் திட்டத்தின் முக்கியமான அம்சம்

தொழிற்சாலை நிர்வாகம் தானாகவே ஒரு பிரமானப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் என்பதாகும். அதில், இந்தத் திட்டத்தின் கீழ் வரும் அனைத்துத் திட்டங்களுக்கும் உட்படுவதாக நிர்வாகம் அறிவிக்க வேண்டும். விதி மீறலுக்காக அளிக்கப்படும் தண்டனை நடவடிக்கையை ஒப்புக்கொள்வதாகவும் உரிமையாளர் தெரிவிக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் சிறு விதி மீறல்களுக்குக் கூட தண்டனை அளிக்கப்படுகிற வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. முதலாளிகளுக்கு நல்ல வாய்ப்பாக இருப்பது வழக்கமான ஆய்வு முறைதான். அதன் கீழ், விதி மீறல்களுக்கு அளிக்கப்படும் தண்டனை நடவடிக்கைகள் குறைவுதான்.

இதில், முதலாளிகளுக்கு சாதகமாக, பல்வேறு விஷயங்களை "அனுசரித்துக்கொள்ள முடியும்". எஸ்.சி.எஸ். திட்டம் நிறுவனத்தில் பணிகளை ஏற்றுச் செய்யும் ஒப்பந்ததாரர்களுக்கும் பொருந்துவதாகும். நிறுவனங்களின் இத்தகைய அணுமுறை காரணமாகவும் அரசாங்க ஆய்வு நடக்காததன் காரணமாகவும் (ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஆய்வாளர்கள் போதிய அளவில் இல்லாதது இதற்குக் காரணம் என்று ஆவணங்கள் காட்டுகின்றன) முதலாளிகள் தங்களைத் தாங்களே முறைப்படுத்திக்கொண்டு சுய சான்றிதழ் தரலாம் என்பது, மேற்கொண்டு எவ்வகையிலும் தொழிலாளர் சார்ந்த கட்டுப்பாடுகளுக்கு உட்படுவதை தவிர்ப்பதற்கு உரிமம் வழங்குகிற ஏற்பாடாகவே இருக்கும்.

### தொழிலாளர்களும் நீதித்துறையும்

முக்கியமான தொழிலாளர் பிரச்சனையில் நீதித்துறையின் அணுகுமுறையில் ஏற்பட்டுள்ள மாற்றமும் தொழிலாளர் நிலையை வெகுவாக பலவீனப்படுத்தியுள்ளது. தொழிலாளருக்கு ஆதரவான தீர்ப்புகளை வழங்கிய வரலாறு நமது நீதிமன்றங்களுக்கு உண்டு. ஆனால், தற்போது மூலதன நலன்களுக்கும், பொருளாதார சீர்திருத்தங்கள் தொடங்கிய பிறகு கொண்டுவரப்பட்ட புதிய கொள்கைகளுக்கும் ஏற்ப நீதிமன்றத் தீர்ப்புகள் அமைந்து வருவதை பார்க்க முடிகிறது. தொழிலாளர்களுடைய போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், கடை அடைப்புகள், ஊர்வலங்கள் ஆகியவை கறாரான தீர்ப்புகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன என்று ஆய்வாளர் தாகூர் குறிப்பிடுகிறார் (2007). கேரள உயர்நீதிமன்றம் 1997ல் அளித்த தீர்ப்பு இதற்கு தெளிவான சான்றாகும். எந்த ஒரு சங்கமும், அரசியல் கட்சியும், அமைப்பும் "பந்த்" போராட்டங்களுக்கு வேண்டுகோள்விடுப்பதும், அதைச் செயல்படுத்துவதும் சட்டவிரோதமானது, அரசமைப்பு சாசனத்திற்கு எதிரானது என்று கேரள உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியது. தமிழ்நாட்டில் 2003ல் அரசு ஊழியர்கள் ஒட்டுமொத்தமாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டபோது, வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுப்பது கூட சட்டவிரோதமானது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

நிரந்தரமில்லாத ஒரு தொழிலாளியை பணிநீக்கம் செய்கிறபோது அதற்கான காரணத்தை விளக்கும் பொறுப்பு நிர்வாகத்திற்கே உரியது என்று ஏற்கெனவே ராஜஸ்தான் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. அந்தத் தீர்ப்பை தள்ளுபடி செய்யும் வகையில் உச்சநீதிமன்றம் ஜி.எம்., பி.எஸ்.என்.எல். மற்றும் இதரர்கள் எதிர் மகேஷ்சந்த் வழக்கில் 2010ல் அளித்தத் தீர்ப்பில், தனது வேலையை நிரந்தரமாக்கக் கோருவதற்கும், திடீரென வேலையிலிருந்து நிறுத்தப்படுவதைத் தடுப்பதற்கும் குறிப்பிட்ட நிறுவனத்தில் தொடர்ச்சியாக 240 நாட்கள் வேலை செய்திருப்பதாக நிரூபிக்க வேண்டியது அந்தத் தொழிலாளியின் பொறுப்புதான் என்று கூறியது. நிர்வாகங்களுக்கு இந்தத் தீர்ப்பு எவ்வளவு சாதகமாக இருக்கும் என்பதை விளக்கத் தேவையில்லை. பெரும்பாலான தற்காலிகத் தொழிலாளர்கள் (ஏற்கெனவே நாம் பார்த்தது போல) வாய்மொழி ஒப்பந்த அடிப்படையில்தான் வேலை செய்கிறார்கள் என்பதால், தாங்கள் வேலை செய்த காலத்தை நிரூபிப்பது அவர்களுக்கு மிகவும் கடினமான ஒன்றாக இருக்கும். மேலும், தொழிலாளர் வருகைப் பதிவேடுகளைப் பராமரிப்பதில் வெளிப்படைத் தன்மை கிடையாது என்பதால், இவ்வாறு தங்களது பணிக்காலத்தை நிரூபிப்பது என்பது ஒட்டுமொத்தத்தில் மிக மிகக் கடினமான செயலாகவே இருக்கும்.

2007ம் ஆண்டில் ஜே.கே. சிந்தடிக் லிமிடெட் எதிர் கே.பி. அகர்வால் மற்றும் இதரர் வழக்கில் உச்சநீதிமன்றம் மற்றொரு முக்கிய தீர்ப்பை அளித்தது. சட்டவிரோதமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒரு தொழிலாளி ஒரு நீதிமன்ற ஆணையின்படி மீண்டும் வேலையில் சேர்க்கப்பட்டிருப்பாரானால், அவர் இயல்பாகவே பணிநீக்கக் காலத்திற்கான ஊதிய நிலுவையைப் பெறுவதற்குத் தகுதி பெற்றவராகிவிட மாட்டார் என்று அந்தத் தீர்ப்பு கூறியது.

2005ம் ஆண்டில் கேந்திரிய வித்யாலயா சங்காதன் எதிர் எஸ்.வி. சர்மா வழக்கில், இடைக்காலத்தில் ஊதியம் பெறுகிற எந்த ஒரு வேலையையும் தான் செய்யவில்லை என்று நிரூபிப்பது தொழிலாளியின் பொறுப்புதான் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இன்று, பணிநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை அளிப்பது குறித்தோ அல்லது வேலைகளை நிரந்தரமாக்குவது குறித்தோ நீதிமன்றங்கள் உரிய முக்கியத்துவம் அளிப்பதில்லை. ஒரு தொழிலாளி சட்டவிரோதமான முறையில் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் அல்லது விடுவிக்கப்பட்டிருக்கிறார் என்று நிரூபிக்கப்பட்டால்கூட அவரை மீண்டும் வேலைக்கு

எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைவிட அவருக்கு இழப்பீடு தர வேண்டும் என்பதற்கே நீதிமன்றங்கள் முக்கியத்துவம் தருகின்றன.

### இந்தியாவில் கட்டமைக்கப்படும் "முறைசாரா" முறை!

லாபம் குவிப்பதில் முதலாளித்துவத்துக்கு உள்ள தாகம் அடங்காத போக்கிற்கு துணை செய்யும் அணுகுமுறையைத்தான் அரசு கையாளுகிறது என்பது, தொழிலாளர் சக்தியை முறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களில் மட்டுமல்லாமல், பொருளாதாரத்தில் மூலதனத்தின் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு எடுக்கப்பட்ட ஏராளமான முயற்சிகளிலும் வெளிப்படுகிறது.

முறைப்படுத்துவதற்கான கட்டமைப்பு மூலம் மூலதனம் எவ்வாறு கண்காணிப்பட வேண்டும், மதிப்பிடப்பட வேண்டும், ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறதோ, அதில் திட்டமிட்ட முறையிலேயே ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அரசு முறைப்படுத்துவது என்பதற்கு மாறாக நிறுவனங்கள் தங்களைத் தாங்களே முறைப்படுத்திக் கொள்வது என்பதாக கடந்த 20 ஆண்டுகளில் மாற்றப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். குறிப்பாக தகவல்களை வெளிப்படுத்துவது தொடர்பான நடைமுறைகளில் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. மத்திய பெருந்தொழில் நிறுவனங்கள் அமைச்சகம் 2011ம் ஆண்டில் வெளியிட்ட வர்த்தகத் துறையின் சமூகப் பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்பு தொடர்பான தேசிய தன்னார்வ வழிகாட்டல்கள் (NVG) அறிக்கை இதற்கு சரியான எடுத்துக்காட்டாகும்.

***இதன்மூலம் கணக்குக்காட்டுவதிலிருந்தும் ஆவணங்களைப் பராமரிப்பதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டிருந்த நிறுவனங்களின் எண்ணிக்கை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.***

2009ல் அமைச்சகம் வெளியிட்ட NVG அறிக்கையின் திருத்திய பதிப்பாக 2011ம் ஆண்டின் அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கை வர்த்தக உலகத்தை "சமுதாயம், சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரம்" ஆகியவற்றை உள்ளடக்கிய சில நடைமுறைகளுக்கு உட்படுத்த முயன்றது. அதே நேரத்தில் இதற்கு அடிப்படையாக முக்கோணத்தளம் ஒன்றையும் அது அமைத்தது. "மக்கள், புவிக்கோள், லாபம்" ஆகியவையே அந்த மூன்று கோணங்கள். அந்த வழிகாட்டல்களுக்கு 9 கொள்கைகளும், அவை சார்ந்த அடிப்படைக் கூறுகளும் முன்வைக்கப்பட்டன. அதன்மூலம், இந்த விதிகளை செயல்படுத்துவது என்பதை நிறுவனங்கள் தாங்களாகவே மேற்கொள்ளலாம் என்ற நோக்கம் கொண்டுவரப்பட்டது. இந்த இரண்டு குறியீடுகளும் "அத்தியாவசியம்", "தலைமை" என்ற தலைப்புகளின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இவற்றில் "அத்தியாவசியம்" என்ற முதலாவது அம்சம் இந்த வழிகாட்டல்களைப் பின்பற்றும் ஒவ்வொரு வர்த்தக நிறுவனத்திடமும் எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது. "தலைமை" என்ற இரண்டாவது அம்சம் "சமூக ரீதியாகவும், சுற்றுச்சூழல் சார்ந்தும், அறநெறி அடிப்படையிலும் செயல்படுவதற்கான தங்களது முயற்சியில் அதிகபட்ச அளவை எட்டுவதற்கு முயலும் நிறுவனங்களுக்கு" என ஒதுக்கப்பட்டுள்ளது (இந்திய அரசு அறிக்கை 2011 : 30). வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இந்த புதிய வழிகாட்டல்களுக்கு ஒரு சில நிறுவனங்கள் மட்டுமே உட்படுத்தப்படுகின்றன.

வழிகாட்டல்களைப் பின்பற்றுகிற போது தலைமைக்கான குறியீடுகளை அந்த சில நிறுவனங்கள் மட்டுமே பின்பற்றலாம் என்று கூறப்படுகிறது. இந்த ஏற்பாட்டை மேலோட்டமாகப் பார்த்தால்கூட இதில் உள்ள முதலாளிகளுக்கு சாதகமான அம்சம் வெளிப்படுகிறது. கண்காணித்தல், மதிப்பிடுதல் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், அத்தியாவசியமான அளவீடுகளைக் கொண்ட வர்த்தக நிறுவனங்கள் ஒரு சுய மதிப்பீடு செய்துகொண்டால் போதும் என்றும் பல்வேறு கோட்பாடுகள் மற்றும் அடிப்படை அம்சங்கள் சார்ந்து தங்களது செயல்பாடுகள் குறித்து தாங்களே ஆய்வு செய்துகொள்ள முடியும் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தலைமைக்கான அளவீடுகளை பின்பற்ற நினைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில வர்த்தக நிறுவனங்கள் மட்டுமே, மூன்றாம் தரப்பின் மதிப்பீட்டிற்கு தங்களை உட்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதேபோல், தகவல்களை வெளிப்படுத்துவது என்பதைப் பொறுத்தவரையில், அத்தியாவசிய அளவீடுகளின்படி, ஒரு நிறுவனம் தனது செயல்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமே தெரிவித்தால் போதுமானது. அவர்கள் யார் என்பதை அந்த நிறுவனமே முடிவு செய்து கொள்ளலாம்.

தலைமைத் தகுதிக்கான அளவீடுகளைப் பின்பற்றும் நிறுவனங்கள் மட்டுமே தங்களது செயல்பாடுகள் குறித்த தகவல்களை விரிவான பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். ஆக, இந்த வழிகாட்டல்கள் பெரும்பாலான வர்த்தக நிறுவனங்களை தங்களது செயல்பாடுகள் குறித்தும், தொழிலாளர் தர நிலைகள் குறித்தும் தாங்களே சுய மதிப்பீடு செய்துகொள்ள வழிவகுக்கிறது. ஆனால், தகவல்களை வரம்புக்குட்பட்ட சிலருக்கு மட்டுமே தெரிவித்தால் போதும் என்பதற்கும் வழி

செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறாக மூலதனத்தை (குறிப்பாக தொழிலாளர்கள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதை) முறைப்படுத்துவதற்காக வர்த்தக நிறுவனங்களின் அன்றாட செயல்பாடுகளில் அரசு தலையிடுவது (அல்லது அவ்வாறு தலையிட்டாக வேண்டியிருப்பது) என்ற நடைமுறையிலிருந்து விலகி, வர்த்தக நிறுவனங்கள் நாட்டின் தொழிலாளர் சட்டவிதிகளைக் கடைப்பிடிப்பது, அதைக் கண்காணிப்பது ஆகிய இரண்டு வேலைகளையுமே தாங்களே செய்து கொள்வது என்ற நிலைமையை நோக்கி மாற்றம் நிகழ்ந்துள்ளதை நாம் காண்கிறோம். தொழிற்சாலைகள் ஆய்வு மற்றும் சுயச் சான்று என்பதைப் பொறுத்தவரையில் அரசின் அணுகுமுறையில் அந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. சட்டங்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. நாடாளுமன்றத்தில் 2006ம் ஆண்டு ஜூன் மாதம் ''குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் மேம்பாட்டுச் சட்டம் – 2006'' என்ற பெயரில் 2005ம் ஆண்டின் சிறு மற்றும் நடுத்தர தொழில் மேம்பாட்டு சட்டமுன்வரைவு – 2005 சட்டமாக நிறைவேற்றப்பட்டது. அது தொழிற்சாலைகள் ஆய்வு, பராமரிப்பு, கணக்குகளைத் தாக்கல் செய்தல் ஆகியவற்றுக்காக ஏற்கெனவே இருந்த பல நடைமுறைகளை எளிமைப்படுத்தியிருக்கிறது.

''குறுந்தொழில்,'' ''சிறுதொழில்,'' ''நடுத்தரத் தொழில்'' என்று வகைப்படுத்தப்பட்டுள்ள தொழில் நிறுவனங்களுக்கு, பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் வரும் ஆய்வுகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. கூலி வழங்கல் சட்டம் – 1936, தொழிலாளர் அரசு காப்பீட்டுச் சட்டம் – 1948, தொழிலாளர் ஈட்டுறுதி நிதி மற்றும் இதர ஏற்பாடுகள் சட்டம் – 1952, பேறு கால பலன்கள் சட்டம் – 1961, போனஸ் சட்டம் – 1965, கருணைத் தொகைச் சட்டம் – 1972 ஆகிய தொழிலாளர் சட்டங்களிலிருந்து இந்த நிறுவனங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இது தொழில் நிறுவனங்கள் தங்களுக்குத் தாங்களே சுயச்சான்று வழங்கிக்கொள்வதையும், முறைப்படுத்திக் கொள்வதையும் ஊக்குவிக்கிறது. சுயச்சான்று பற்றி கருத்துக் கூறும், தொழிலாளர் சட்டங்களை திருத்துவதற்கு ஆதரவான சிலர், தொழிலாளர்களிடையேயும் நிர்வாகிகளிடையேயும் விழிப்புணர்வு அதிகரித்திருப்பதன் காரணமாக நிர்வாகிகள் தங்களுக்குத் தாங்களே விதிகளுக்கு உட்பட்டு நடப்பதை உறுதிப்படுத்துவது சாத்தியமே என்று கூறுகிறார்கள். மேலும், முறைப்படுத்துதல் தொடர்பான சட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக தங்களுக்குத் தாங்களே சான்றிதழ் அளித்துக்கொள்ளும் சுதந்திரம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இருக்க வேண்டும் என்ற வாதமும் வைக்கப்படுகிறது. இதன் மூலம் நிறுவனங்களின் உரிமையாளர்கள் தங்களது மையமான தொழில் நடவடிக்கைகளில் கூர்மையாக கவனம் செலுத்த முடியும் என்று வாதிடுகிறார்கள்.

அதேபோல் தொழிலாளர் சட்டங்கள் (சில நிறுவனங்கள் கணக்குக் காட்டுவதிலிருந்தும் ஆவணங்களைப் பராமரிப்பதிலிருந்தும் விலக்களித்தல்) திருத்தம் மற்றும் இதர விதிகளுக்கான சட்டமுன்வரைவு – 2011. நாடாளுமன்றத்தில் 2011 மார்ச் மாதம் தாக்கல் செய்யப்பட்டது. அந்த சட்டமுன்வரைவு, தற்போதைய சட்டத்தில் தொழிலாளர் தொடர்பாக உள்ள பல்வேறு விதிகளிலிருந்து நிர்வாகத்தை விடுவிப்பதாகவே இருக்கிறது. ஏற்கெனவே சிறு நிறுவனங்கள் என்ற வரையறையின்கீழ், முந்தைய 12 மாதங்களில் 10 முதல் 19 தொழிலாளர்கள் வரையில் நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டிருந்தன. தற்போது அது 10 முதல் 40 தொழிலாளர்கள் வரை என மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் கணக்குக்காட்டுவதிலிருந்தும் ஆவணங்களைப் பராமரிப்பதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டிருந்த நிறுவனங்களின் எண்ணிக்கை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், வேறு பல விவரங்களை தாக்கல் செய்வதிலிருந்தும் அவற்றுக்கான ஆவணங்களை பராமரிப்பதிலிருந்தும் சிறு நிறுவனங்களுக்கு விலக்கு அளிக்கும் வகையில் சில சட்டங்களின் பட்டியலிலும் மாற்றம் செய்ய இந்த சட்டமுன்வரைவு வழிவகுக்கிறது. உதாரணமாக, மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டம் – 1961; போனஸ் வழங்கல் சட்டம் – 1965; பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமைகள்) சட்டம் – 1966; மாநிலங்களுக்கிடையே தொழிலாளர்கள் புலம்பெயர்தல் (வேலைகளை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம் – 1979; துறைமுகத் தொழிலாளர்கள் (பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்கள்) சட்டம் – 1986; குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் – 1986; கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம் – 1996 ஆகிய சட்டங்கள் அந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்படுகின்றன.

எஸ்.சி.எஸ். நடைமுறையில் இருக்கும் பல மாநிலங்களில் (பஞ்சாப், ஹரியானா, இமாச்சலப் பிரதேசம், ஆந்திரா, கர்நாடகம், ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா) பெரும்பாலான நிறுவனங்கள் அந்தத் திட்டத்தின்படி செயல்பட முன்வரவில்லை. ஏனென்றால், சோதனைகள் மூலம் விதிக்கப்படும் அபராதங்களைவிட, இந்த திட்டத்திற்கு உட்பட்டுச் செயல்படும்போது ஏற்படக்கூடிய விதி மீறல்களுக்கான அபராதம் மிக அதிகம். இந்த அனுபவத்திற்குப் பிறகும் NVG திட்டத்தால் உண்மையிலேயே பலன் கிடைக்கும் என்று எப்படித்தான் நம்புகிறார்கள் என்பதை புரிந்துகொள்வது கடினமாகத்தான் இருக்கிறது.

**நிறைவாக**

நவீன தாராளமயக் கொள்கைகள் நடைமுறைக்கு வந்த பிறகு கடந்த 20 ஆண்டுகளில் தொழிலாளர் நிலைமை எப்படி மிக வேகமாக பலவீனப்பட்டுள்ளது என்பதைப் பார்த்தோம். போட்டி நிறைந்த உலகப் பொருளாதாரத்தோடு அனுசரித்துப் போகும் வகையில் தொழிலாளர் சந்தையில் அதிகமான நீக்குப் போக்குத்தன்மை தேவை என்று வலியுறுத்தப்படுகிறது. இது முதலாளிகளிடமிருந்து வருகிற குரல் மட்டுமல்ல. மாறாக இந்தக் குரலை உடனடியாக அரசாங்கமும் எதிரொலிக்கிறது.

**முதலீடு செய்கிறவர் எந்த அளவிற்கு சவால் நிலைகளை சந்திக்கிறாரோ அந்த அளவிற்கு லாபம் அல்லது நஷ்டத்தை சந்திக்கிறார் என்ற ஒட்டுமொத்த பொருளாதார நிலைபாடு இன்று மாற்றப்பட்டிருக்கிறது.**

இன்றைய நவீன தாராளமயமாக்கல் காலகட்டத்தில், அரசு தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்த “வளர்ச்சி” என்ற கோட்பாட்டைப் பயன்படுத்துகிறது. இது முந்தைய காலகட்டங்களில் கடைபிடிக்கப்பட்ட “சமூக நலன்” என்ற நிலைபாட்டுக்கு நேர் எதிரானதாகும். முதலீடு செய்கிறவர் எந்த அளவிற்கு சவால் நிலைகளை சந்திக்கிறாரோ அந்த அளவிற்கு லாபம் அல்லது நஷ்டத்தை சந்திக்கிறார் என்ற ஒட்டுமொத்த பொருளாதார நிலைபாடு இன்று மாற்றப்பட்டிருக்கிறது. தற்போதைய உலகமயமாக்கல் சூழலில் இழப்புகளுக்கான சுமைகள் தொழிலாளர்கள் மீது சுமத்தப்படுகின்றன. இதில் இந்திய அரசு ஒரேடியாக ஒதுங்கிப் போய்விடவில்லை என்றாலும் அதன் தலையீடுகளுடைய தன்மை மாறியிருக்கிறது. விருப்பப்படி வேலைக்கு எடுக்கவும், வேலையைவிட்டு நீக்கவும் அனுமதிக்க வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு ஓசையின்றி ஒப்புதல் வழங்கப்படுகிறது. அந்த ஒப்புதல் தற்போதைய தொழிலாளர் சட்டங்களில் முழுமையான மாற்றங்கள் செய்வதன் மூலமாக வழங்கப்படவில்லை, மாறாக அதைவிட ஆபத்தான ஒரு ஏற்பாட்டின் மூலம் அந்த ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒரு பக்கம், (முறைசாரா நடைமுறைகள், நாட்டாமை நடைமுறைகள், பலவீனமான முறையில் சட்டம் அமலாக்கப்படும் நடைமுறைகள் ஆகியவற்றின் மூலம்) தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் கைவிடப்படுகின்றன. இன்னொரு பக்கம் (தொழிற்சங்கங்களின் வலிமை சரிவடைவது, கூலி நிலவரம் குறைவது, சமூக பாதுகாப்பு இல்லாமல் போவது என) தொழிலாளர்களின் பேரம் பேசும் வலிமை பலவீனப்படுத்தப்படுகிறது.

“பாதுகாப்பான” முறைசார்ந்த தொழில் துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் கூட இதற்கு இரையாகக்கூடிய நிலைமை அதிகரித்துள்ளது. அவர்களது வேலைப் பாதுகாப்பு நிலை வீழ்ச்சியடைந்துள்ளது, சமூகப் பாதுகாப்பு சரிவடைந்துள்ளது, மொத்த உற்பத்தியோடு ஒப்பிடுகையில் ஊதிய அளவின் பங்கு குறைந்துள்ளது. அவர்களது உண்மையான ஊதிய வளர்ச்சி விகிதம் தேக்கமடைந்துள்ளது.

எங்கும் ஒப்பந்தத் தொழிலாளர் முறை அதிகரித்து வருவதன் காரணமாகவும் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பார்கள் என்ற ஏற்பாட்டின் காரணமாகவும் தொழிலாளர்களை சங்கமாகத் திரட்டுவது என்பது மிகவும் கடினமாகியுள்ளது. தொழிற்சங்கங்களின் பங்களிப்பு குறைந்து வருவது தொழிலாளர்களின் பேரம் பேசும் வலிமையை பலவீனப்படுத்தியுள்ளது. கடந்த 15, 20 ஆண்டுகளில் மூலதனத்திற்கு சாதகமான அரசின் செயல்பாடு அதிகரித்துள்ளது. பல்வேறு முறைப்படுத்தும் நடவடிக்கைகளிலிருந்து தொழில் நிறுவனங்களுக்கு விலக்கு அளிப்பது என்பது அதிகரித்திருக்கிறது.

அரசின் பொறுப்பில் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தை ஏற்பாடுகள் தொழிலாளர் நலன்களுக்கு எதிராகவே உள்ளன, அல்லது சட்டங்கள் நீதிமன்றங்களால் முதலாளிகளுக்கு சாதகமாக கையாளப்படுகின்றன. ஏற்கெனவே, தொழிலாளர் சட்டங்கள் காகிதத்தில்தான் இருக்கின்றனவேயன்றி நடைமுறையில் இல்லை. தொழிலாளர்களுக்கும், மூலதனத்திற்கும், அரசுக்கும் இடையேயான செயல்பாடு மாறி வருகிறது. மேலும் மேலும் தாக்குதல்களுக்கு உள்ளாகக்கூடிய நிலையில்தான் தொழிலாளர் சந்தை இயங்கிக்கொண்டிருக்கிறது. சமூகப் பாதுகாப்பு கட்டமைப்புகள் அரிதாகி வருகின்றன. போதுமான சட்டப் பாதுகாப்புகளும் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய பின்னணிகளால் தொழிலாளர்கள் தங்களுக்கென எந்த ஒரு பாதுகாப்பான பிடிமானமும் இல்லாதவர்களாக முற்றிலும் சந்தையின் கருணைக்கு உட்பட்டவர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். அரசு பெருமளவுக்குத் தனது பொறுப்புகளை கைகழுவிவிட்டது என்ற சூழலில் இவையெல்லாம் நிகழ்ந்திருக்கின்றன. தொழிலாளர் சட்டங்கள் மேலும் மேலும் தளர்த்தப்படுவது தொழிலாளர்களின் அபாயகரமான நிலைமையை மேலும் தீவிரமாக்கிவிடும். ஆகவே, இன்று தேவைப்படுவது என்னவென்றால், நாட்டின் தொழிலாளர் நிலைமைகளை பாதுகாப்பதற்கும் உறுதிப்படுத்துவதற்குமான செயல்பாடுகள்தான்.

ஆதாரம்: June 28, 2014 VOL XLIX Nos 26 & 27
Economic & Political Weekly

**(இந்தக் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட முக்கிய பகுதிகள்)**

## போலி என்கவுன்டர் வழக்கில் பாரதீய ஜனதா கட்சித் தலைவர் அமித் ஷா–வை சிபிஐ சிறப்பு நீதிமன்றம் விடுவித்துள்ளது




**2004, ஜூன் 15 விடியலுக்கு சற்று முன்னர் இஷ்ரத் ஜஹான் என்னும் ஒரு இஸ்லாமிய மாணவியும் மூன்று ஆண்களும் அகமதாபாத்தின் மேற்குப்புறத்தில் உள்ள ஆளரவமற்ற சாலையில் இந்தியாவின் உயர்ந்த விசாரணை அமைப்பு தாக்கல் செய்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் காவல்துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.**

**அகமதாபாத்தில் குஜராத் காவல்துறையால் ஷோராபுதீன் ஷேக், அவரது மனைவி கவுசர் பீ–யும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.**

குஜராத் காவல்துறையின் முன்னாள் டி.ஐ.ஜி.யான டி.ஜி.வன்சாரா, 2006ல் இஸ்லாமிய தொழிலதிபர் ஷோராபுதீன் மற்றும் அவரது மனைவியை தீவிரவாதிகள் என்று முத்திரையிட்டு திட்டமிட்டு கொலை செய்த குற்றத்திற்காக 2007லிருந்து சிறையில் உள்ளார்.



*Education Material Published on behalf of*

*Campaign for Custodial Justice & Abolition of Torture by*

*Human Rights Advocacy and Research Foundation (HRF)*

*# 54, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, INDIA.*
*☎ 044 2235 3503, 044 2235 1919 Fax : 044 2235 5905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsfoundation.org.in*